الْمُخْتَصَرُ الْمُفِيدُ لِسِيرةِ النَّبِيِّ الْمُصْطَفَى ﷺ وَشَمَائِلِه

د. هيثم بن محمد سرحان

(مترجم إلى اللغة التاميلية)

# உத்தம நபியின் உன்னத சரித்திரமும் உயர்ந்த பண்புகளும்

(ஒரு பயன்மிகு சுருக்கம்)


**தொகுப்பு: ஹைஸம் இப்னு முஹம்மத் ஸர்ஹான்**

அல்-மஸ்ஜிதுன் நபவியிலுள்ள ஹறம் கல்விக் கூடத்தின் முன்னாள் ஆசிரியர், மற்றும் التأصيل العلمي என்ற இணையதளத்தின் மேற்பார்வையாளர்

**தமிழில்: ஹுஸைன் இப்னு றஃபீக் (மதனி)**



sarhaan.com

MAHADSUNNAH.COM

# அள்ளாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபிகள் நாயகம் -ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம்- அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களின் குணாதிசயங்களையும் சுருக்கமாக எடுத்துரைக்கும் பயன்மிக்க ஒரு நூல்

# மொழிபெயர்ப்பின் பொருள் அட்டவணை[1]

📖 *அத்தியாயம்* - 1: ........ 11

**நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் தன்மைகள், வழிமுறைகள், தனித்துவங்கள், மற்றும் அவர்களின் உறவினர்:** ........ 11

🟢 **நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் தன்மைகள்:** ........ 11

💎 **அவர்களின் வம்சம்** ........ 11

💎 **நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்** 11

💎 **நபி (ﷺ) அவர்களின் பெயர்கள்** ........ 12

💎 **நபி (ﷺ) அவர்களின் மொத்தப் பண்புகளின் சுருக்கம்** ........ 14

💎 **நபி (ﷺ) அவர்களின் உடற்பண்புகள்** ........ 14

📌 ***நபி (ﷺ) அவர்களது கண்ணியமிக்க உடம்பு:*** ........ 14

📌 ***நபி (ﷺ) அவர்களின் உயரம்:*** ........ 15

📌 ***நபி (ﷺ) அவர்களின் முகம்:*** ........ 15

📌 ***நபி (ﷺ) அவர்களின் முடி:*** ........ 15

📌 ***நபி (ﷺ) அவர்களின் கண்கள்:*** ........ 16

📌 ***நபி (ﷺ) அவர்களின் வியர்வை:*** ........ 16

📌 ***நபி (ﷺ) அவர்களின் நபித்துவ முத்திரை*** ........ 16

💎 **நபி (ﷺ) அவர்களின் நற்பண்புகள்** ........ 17

📌 ***நபி (ﷺ) அவர்களது தோழர்கள் அவர்களுக்கு அளித்த கண்ணியம்:*** ........ 17

📌 ***அள்ளாஹ்வுடன் நபி (ﷺ) அவர்கள் பேணிய ஒழுக்கம்:*** ........ 18

📌 ***நபி (ﷺ) அவர்களின் வீரம்:*** ........ 18

📌 ***நபி (ﷺ) அவர்களின் இறையச்சம்:*** ........ 18

📌 ***நபி (ﷺ) அவர்கள் தம் குடும்பத்தோடு பேணிய நளினம்:*** 18

📌 ***நபி (ﷺ) அவர்களின் வெட்கம் - நாணம்:*** ........ 18

📌 ***நபி (ﷺ) அவர்களின் எதையும் இலகுபடுத்தும் தன்மை:*** ........ 19

---

[1] **குறிப்பு 1:** இந்தப் பொருள் அட்டவணை அறபி மூல நூலில் இல்லை. தமிழ் வாசகர்களின் வசதிக்காக இது உருவாக்கப்பட்டுள்ளது.
**குறிப்பு 2:** இந்த நூலை தமிழாக்கம் செய்யும்போது அதிகமான அறபிச் சொற்கள் தமிழுக்கு எழுத்துப் பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. அச்சொற்களை தமிழ் உச்சரிப்புக்கு நெருக்கமாக எழுத்துப் பெயர்ப்புச் செய்யப்படாமல் அறபி உச்சரிப்புக்கு ஏற்ற விதத்தில் எழுத்து பெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக தமிழில் 'ஆயிஷா' என்று மொழியும் வழக்கம் இருந்தாலும் அறபியில் அது عائشة 'ஆஇஷஹ்' என்றே மொழியப்பட வேண்டும். அதனால் அறபி மொழி வடிவத்திற்கு ஏற்ற விதத்தில் ஆஇஷஹ் என்றே தமிழிலும் எழுதப்பட்டுள்ளது.

📌 நபி (ﷺ) அவர்கள் யாரையும் பழிவாங்கமாட்டார்கள்:......19
📌 நபி (ﷺ) அவர்கள் உணவைக் குறை கூறமாட்டார்கள்: ...19
📌 நபி (ﷺ) அவர்கள் அன்பளிப்பை (ஹதீய்யஹ்வை) ஏற்றுக் கொள்வார்கள்:........19
📌 நபி (ﷺ) அவர்கள் தர்மமாக வழங்கப்படும் (ஸதகஹ் / ஸகாத்) பொருளை உண்ணமாட்டார்கள்: ........19
📌 நபி (ﷺ) அவர்களின் பணிவு: ........20
📌 நபி (ﷺ) அவர்கள் தமது குடும்பத்திற்கு வீட்டுப் பணிகளில் ஒத்துழைப்பார்கள்: ........20
📌 நபி (ﷺ) அவர்கள் அறிவீனர்களைப் பொருட்படுத்தவில்லை: ........20
📌 நபி (ﷺ) அவர்களின் உண்மைத் தன்மை:........20
📌 நபி (ﷺ) அவர்கள் தமது பணியாளருடன் பேணிய நற்குணங்கள்: ........21
📌 நபி (ﷺ) அவர்கள் தமது தோழர்களிடமிருந்து தம்மை வித்தியாசமாக அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. தாராள, பரந்த மனப்பான்மையுடையவர்களாக இருந்தார்கள்: ........21
📌 நபி (ﷺ) அவர்களின் உரட்டி: ........22
📌 நபி (ﷺ) அவர்களின் உலகப் பற்றற்ற தன்மை:........22
📌 நபி (ﷺ) அவர்கள் யாரையும் திட்டமாட்டார்கள்:........22
📌 நபி (ﷺ) அவர்கள் எந்த ஒரு அன்னியப் பெண்ணின் கையைக் கூடத் தொட்டதில்லை:........23
📌 நபி (ﷺ) அவர்களின் எளிமையான வாழ்க்கையும் வாழ்விடமும்:........23
முதலாவது பரீட்சை........24
🟢 நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் வழிமுறைகள்:........27
💎 உடை, உணவு, பானம் ஆகியவற்றில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை........27
📌 நபி (ﷺ) அவர்களுக்கு விருப்பமான நிறம்:........27
📌 நபி (ﷺ) அவர்களின் ஆடை: ........27
📌 நபி (ﷺ) அவர்கள் உடையில் நடுநிலைமை பேணினார்கள்:........27
📌 நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் உணவு: ........28

📌 *நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் உணவு உண்ணும் முறை:* ........ 28

📌 *நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் பானங்கள் அருந்தும் முறை:* ........ 28

💎 குடும்ப வாழ்க்கையில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை ........ 29

💎 தூங்குவதிலும் விழித்தெழுவதிலும் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை ........ 30

💎 சமூகம் சார்ந்த நடத்தையில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை ........ 31

💎 நடையில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை ........ 32

💎 திக்ரில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை ........ 32

💎 இயற்கை மரபு (ஸுன்னஹ்)களும் அவற்றை ஒட்டிய ஸுன்னஹ்களும் ........ 33

📌 *இயற்கை மரபு (ஸுன்னஹ்)கள்:* ........ 33

📌 *வலது பக்கத்தை முற்படுத்தல்:* ........ 33

📌 *தலை முடி மழித்தல்:* ........ 33

📌 *பல் துலக்குதல்:* ........ 33

📌 *வாசனைத் திரவியம் பூசுதல்:* ........ 34

📌 *மீசையும், தாடியும்:* ........ 34

📌 *மேற்படி விடயங்களுக்கான காலக்கெடுவு:* ........ 34

💎 பேச்சு, சிரிப்பு, அழுகை, சொற்பொழிவு என்பவற்றில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை ........ 34

📌 *நபி (ﷺ) அவர்களது பேச்சு:* ........ 34

📌 *நபி (ﷺ) அவர்களின் சிரிப்பு:* ........ 35

📌 *நபி (ﷺ) அவர்களின் அழுகை:* ........ 35

📌 *நபி (ﷺ) அவர்களின் சொற்பொழிவு:* ........ 35

🟢 நபி (ﷺ) அவர்களின் தனித்துவங்கள்: ........ 36

💎 நபி (ﷺ) அவர்கள் "ஹனீஃபிய்யஹ்" மற்றும் "ஸம்ஹஹ்" ஆகிய கொள்கைகளைக் கொண்டு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்: ........ 36

💎 நபி (ﷺ) அவர்கள் அனைத்து மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் தூதராக அனுப்பப்பட்டுள்ளார்கள்: ........ 36

💎 நபி (ﷺ) அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதமும் அவர்களின் பிரச்சாரமும்: ........ 36

💎 நபி (ﷺ) அவர்களுக்கு வழங்கப்பட்ட அத்தாட்சிகள்: ........... 37

💎 நபி (ﷺ) அவர்களை நேசிப்பது மார்க்கத்தில் முக்கிய அம்சமாகும்: ........... 37

💎 நபி (ﷺ) அவர்களை வெறுப்பவனுக்குரிய தீர்ப்பு: ........... 37

💎 நபி (ﷺ) அவர்கள் அள்ளாஹ்வின் கலீல் - உற்ற நண்பராவார்கள்: ........... 37

💎 நபி (ﷺ) அவர்கள் உலுல் அ(z)ஸ்ம் எனும் உறுதிமிக்க றஸூல்மார்களில் ஒருவராவார்கள்: ........... 37

💎 நபி (ﷺ) அவர்களின் அறிவு: ........... 38

💎 நபி (ﷺ) அவர்களுக்கு மாறுசெய்பவருக்கும் மற்றும் அவர்களுக்கு வழிப்படுபவருக்குமுரிய தீர்ப்புகள்: ........... 38

💎 நபி (ﷺ) அவர்களின் உம்மத் - சமுதாயம்: ........... 39

💎 நபி (ﷺ) அவர்களின் ஊர்: ........... 39

💎 நபி (ﷺ) அவர்களின் கிப்லஹ்: ........... 40

🟢 நபி (ﷺ) அவர்களின் உறவினர்களும் மனைவியரும்: ........... 41

💎 நபி (ﷺ) அவர்களின் பிள்ளைகள்: ........... 41

💎 நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரர்கள்: ........... 42

📌 *நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரர்களில் இஸ்லாத்தை ஏற்றவர்கள்:* ........... 42

💎 நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரிகள்: ........... 42

💎 நபி (ﷺ) அவர்களின் மனைவியர்: ........... 43

💎 நபி (ﷺ) அவர்களின் மனைவியர் ஒவ்வொருவரையும் பற்றிய சுருக்கமான அறிமுகம்: ........... 43

*1 முஃமின்களின் தாய் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா):* ........... 43

*2 முஃமின்களின் தாய் ஸவ்தஹ் - பின்து ஸம்அஹ் (றளியள்ளாஹு அன்ஹா):* ........... 44

*3 முஃமின்களின் தாய் ஆஇஷஹ் - பின்து அபீ பக்ர் (றளியள்ளாஹு அன்ஹுமா):* ........... 44

*4 முஃமின்களின் தாய் ஹஃப்ஸஹ் (றளியள்ளாஹு அன்ஹா):* ........... 44

*5 முஃமின்களின் தாய் ஸைனப் பின்து குஸைமஹ் (றளியள்ளாஹு அன்ஹா):* ........... 45

*6 முஃமின்களின் தாய் உம்மு ஸலமஹ் (றளியள்ளாஹு அன்ஹா):* ........... 45

⑦ முஃமின்களின் தாய் ஜுவைரியஹ் (றளியள்ளாஹு அன்ஹா): .....45

⑧ முஃமின்களின் தாய் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (றளியள்ளாஹு அன்ஹா): .....46

⑨ முஃமின்களின் தாய் உம்மு ஹபீபஹ் (றளியள்ளாஹு அன்ஹா): .....46

🔟 முஃமின்களின் தாய் ஸபிய்யஹ் (றளியள்ளாஹு அன்ஹா): .....47

⑪ முஃமின்களின் தாய் மைமூனஹ் பின்துல் ஹாரிஸ் (றளியள்ளாஹு அன்ஹா): .....47

✅ நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் மரணிக்கும் போது அவர்களிடம் இருந்த மனைவியர்: .....47

இரண்டாவது பரீட்சை .....48

📖 அத்தியாயம் - 2: .....52

நபி (ﷺ) அவர்களின் சீறஹ் - வாழ்க்கை வரலாறு .....52

🔷 பிரிவு - 1: நபித்துவத்திற்கு முன்னர்: .....52

💎 நபி (ﷺ) அவர்களின் பிறப்பு: .....52

💎 நபி (ﷺ) அவர்களின் தந்தை: .....52

💎 நபி (ﷺ) அவர்களின் தாய்: .....52

💎 நபி (ﷺ) அவர்களைப் பொறுப்பேற்றல்: .....52

💎 நபி (ﷺ) அவர்களுக்குப் பாலூட்டிய தாய்மார்கள்: .....53

1- ஸுஃவைபஹ்: .....53

2- ஹலீமஹ் அஸ்-ஸஃதிய்யஹ்: .....53

💎 நபி (ﷺ) அவர்களை வளர்த்துப் பராமரித்த தாய்மார்கள்: .....53

💎 நபி (ﷺ) அவர்களின் தொழில்: .....54

💎 நபி (ﷺ) அவர்களது வியாபாரமும் திருமணமும்: .....55

💎 கஃபஹ்வின் கட்டுமானப் பணி: .....55

💎 நபி (ﷺ) அவர்களுக்கு தனிமையில் ஏற்பட்ட விருப்பம்: .....55

🔷 பிரிவு - 2: வஹ்யின் (இறைச்செய்தியின்) ஆரம்பம்: .....56

💎 நபி (ﷺ) அவர்களின் நபித்துவம்: .....56

💎 வஹ்யின் வகைகள் / படித்தரங்கள்: .....58

① உண்மையான கனவு: .....58

② உள்ளத்தில் போடப்படும் வஹ்ய்: .....58

3 வானவர் மனித உருவத்தில் தோற்றமளித்தல்: ..... 58
4 மணியோசையைப் போன்ற வஹ்ய்: ..... 58
5 மலக்-வானவர் தனது சொந்த உருவத்தில் தோற்றமளித்தல்: ..... 59
6 அள்ளாஹ்விடம் இருந்து நேரடியாக வழங்கப்படும் வஹ்ய்: ..... 59
7 அள்ளாஹ் அவர்களுடன் பேசுவது: ..... 59
- நபி (ﷺ) அவர்களுக்கு முதலில் இறங்கிய வஹ்ய்: ..... 59
- நபி (ﷺ) அவர்களின் தஃவஹ்-பிரச்சாரத்தின் படித்தரங்கள்: ..... 60
- நபி (ﷺ) அவர்களின் தஃவஹ் பிரச்சாரத்தின் கட்டங்கள்: ..... 60
1 இரகசியப் பிரச்சாரம்: ..... 60
2 பகிரங்கப் பிரச்சாரம்: ..... 60
- முதலில் நபி (ﷺ) அவர்களை ஈமான் கொண்டவர்கள்: ..... 60
- ஆரம்பமாக நபி (ﷺ) அவர்களை ஏற்ற நபித்தோழர்களில் சிலர்: ..... 60

பிரிவு - 3: மக்கஹ் காலம்: ..... 61
- நபி (ﷺ) அவர்களுக்கும் அவர்களின் தோழர்களுக்கும் முஷ்ரிக்கள் செய்த கொடுமைகள்: ..... 61
- ஹபஷஹ்வுக்கு (அபீசீனியாவுக்கு) ஹிஜ்றஹ் செல்லுதல்: ..... 62
*1 முதலாவது ஹபஷஹ் ஹிஜ்றஹ்:* ..... 62
*2 இரண்டாவது ஹபஷஹ் ஹிஜ்றஹ்:* ..... 62
- ஹம்ஸஹ் மற்றும் உமர் (றளியள்ளாஹு அன்ஹுமா) ஆகிய இருவரும் இஸ்லாத்தை ஏற்றல்: ..... 63
- அபூதாலிப் பள்ளத்தாக்கில் முற்றுகை: ..... 63
- அபூதாலிப் மற்றும் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) ஆகிய இருவரினதும் மரணம்: ..... 63
- தாயிஃப் நகரை நோக்கிய பயணம்: ..... 63
- அdhத்தாஸ் (عدّاس) என்பவர் இஸ்லாத்தை ஏற்றல்: ..... 64
- ஜின்கள் இஸ்லாத்தை ஏற்றல்: ..... 64
- இஸ்றாஃ, மிஃறாஜ் பயணம்: ..... 64
- மக்கஹ்வுக்கு வரக்கூடிய கோத்திரங்களுக்கு இஸ்லாத்தை முன்வைத்தல்: ..... 64

💎 அன்சாரிகளும் அகபஹ் உடன்படிக்கையும்: ........................65
1 முதலாவது அகபஹ் பைஅத்: ........................65
2 இரண்டாவது அகபஹ் பைஅத்: ........................65
🔷 பிரிவு - 4: மதீனஹ் காலம் ........................66
💎 ஹிஜ்றஹ் செல்வதற்கான அனுமதி: ........................66
💎 நபி (ﷺ) அவர்கள் மதீனஹ்வுக்குள் பிரவேசித்தல்: ........................66
💎 இஸ்லாத்தில் கட்டப்பட்ட முதல் மஸ்ஜித்: ........................67
💎 நபி (ﷺ) அவர்களின் மஸ்ஜிதை நிர்மாணித்தல்: ........................67
💎 சகோதரத்துவத்தை உருவாக்குதல்: ........................67
💎 யூதர்கள் (யஹூதிகள்): ........................68
💎 கிப்லஹ் மாற்றம்: ........................68
💎 யுத்தம் செய்வதற்கான அனுமதி: ........................69
💎 பத்ர் யுத்தம்: ........................69
💎 ᵇபனூகைனுகாஃ எனும் யூதக் கோத்திரத்துடனான போர்: ........................70
💎 உஹுத் யுத்தம்: ........................70
💎 ᵇபிஃரு மஊனஹ் சம்பவம்: ........................71
💎 பனுன்னளீர் யுத்தம்: ........................71
💎 முறைஸீஃ யுத்தம்: ........................72
💎 கந்தக் / அஹ்ஸாப் யுத்தம்: الخَنْدَق / الأحزاب ........................72
💎 ஹுதைபியஹ் உடன்படிக்கை: حُدَيْبِيَة ........................73
💎 கைபர் யுத்தம்: خيبر ........................74
💎 ஜஃபர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் வருகை: ........................74
💎 முஃதஹ் போர்: مُؤْتَة ........................74
💎 மாபெரும் மக்கஹ் வெற்றி: ........................75
💎 ஹுனைன் யுத்தம்: ........................77
💎 தாஇᶠப் யுத்தம்: ........................77
💎 தᵇபூக் யுத்தம்: ........................77
💎 பிரதிநிதிக்குழுக்கள்: ........................79
💎 அபூபக்ர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் தலைமை வகித்த ஹஜ்: ........................79
💎 ஹஜ்ஜதுல் வதாᶜஃ: ........................80

💎 உஸாமஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் படை:80
💎 நபி (ﷺ) அவர்களின் யுத்தங்கள் பற்றிய ஓர் சுருக்கம்: .......81
📌 *அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள நபி (ﷺ) அவர்களின் யுத்தங்கள்:*......................................................................................81
- பத்ர் யுத்தம்: ........................................................................81
- உஹுத் யுத்தம்:.....................................................................81
- கந்தக், பனூ குறைளஹ், கைபர் ஆகிய யுத்தங்கள்: ........81
- பனுன் நளீர் யுத்தம்:.................................................................81
- ஹுதைபியஹ், கைபர் ஆகிய யுத்தங்கள்: .........................81
- தபூக் யுத்தம்:.........................................................................81
📌 *நபி (ﷺ) அவர்கள் காயப்படுத்தப்பட்ட ஒரே ஒரு யுத்தம்:*82
💎 நபி (ﷺ) அவர்களுக்கு ஏற்பட்ட நோயும் மரணமும்: ............82
💎 முடிவாக: ................................................................................83
மூன்றாவது பரீட்சை ...............................................................84

# மாபெரும் அன்புடையோன் அருளாளன் அல்லாஹ்வின் பெயரால்

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. அவனைப் போற்றி, அவனிடம் உதவிவேண்டி, அவனிடம் மன்னிப்பும் கோருகின்றோம். எம் ஆத்மாக்களின் தீங்குகளிலிருந்தும், எம் செயல்களின் கெடுதிகளிலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத்தேடி ஒதுங்கிக்கொள்கின்றோம். அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவரை எவராலும் வழிகெடுக்க முடியாது. அவன் யாரை வழிதவறவிட்டானோ அவரை எவராலும் நேர்வழிப்படுத்த முடியாது. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியான நாயன் எவருமில்லை; அவன் தனித்தவன்; அவனுக்கு இணை ஏதுமில்லை என்றும் முஹம்மத் -ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்- அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாவார் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன்.

﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسۡلِمُونَ﴾ [آل عمران ١٠٢]

{நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வை அஞ்ச வேண்டிய முறைப்படி அஞ்சுங்கள்; மேலும், முஸ்லிம்களாக அன்றி நீங்கள் மரணிக்காதீர்கள்.} (அல்குர்ஆன் 3:102)

﴿يَٰٓأَيُّهَا ٱلنَّاسُ ٱتَّقُواْ رَبَّكُمُ ٱلَّذِي خَلَقَكُم مِّن نَّفۡسٖ وَٰحِدَةٖ وَخَلَقَ مِنۡهَا زَوۡجَهَا وَبَثَّ مِنۡهُمَا رِجَالٗا كَثِيرٗا وَنِسَآءٗۚ وَٱتَّقُواْ ٱللَّهَ ٱلَّذِي تَسَآءَلُونَ بِهِۦ وَٱلۡأَرۡحَامَۚ إِنَّ ٱللَّهَ كَانَ عَلَيۡكُمۡ رَقِيبٗا﴾ [النساء ١]

{மனிதர்களே! உங்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்து, அதிலிருந்து அதற்குரிய துனையையும் படைத்து, அவ்விருவரிலிருந்தும் அனேக ஆண்களையும், பெண்களையும் பரவச்செய்தானே, அத்தகைய உங்கள் இரட்சகனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், இன்னும், எவனை (முன்னிறுத்தி)க் கொண்டு நீங்கள் (ஒருவருக்கொருவர் உரிமைகளைக்) கேட்டுக்கொள்கிறீர்களோ அத்தகைய அல்லாஹ்வையும், மேலும் இரத்த உறவுகளை(த் துண்டிப்பதை)யும் பயந்து கொள்ளுங்கள், நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்.} (அல்குர்ஆன் 4:1)

﴿يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ ٱتَّقُواْ ٱللَّهَ وَقُولُواْ قَوۡلٗا سَدِيدٗا﴾ ﴿يُصۡلِحۡ لَكُمۡ أَعۡمَٰلَكُمۡ وَيَغۡفِرۡ لَكُمۡ ذُنُوبَكُمۡۗ وَمَن يُطِعِ ٱللَّهَ وَرَسُولَهُۥ فَقَدۡ فَازَ فَوۡزًا عَظِيمًا ٧١﴾ [الأحزاب ٧٠-٧١]

{ஈமான் கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; (எந்நிலையிலும்) நேர்மையான பேச்சையே பேசுங்கள். (அவ்வாறு செய்வீர்களாயின்) அதன் காரணமாக, அவன் உங்களுக்காக உங்களுடைய அமல்களைச் சீராக்கி வைப்பான்; உங்களுக்காக உங்கள் பாவங்களையும் மன்னிப்பான்; மேலும், அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் எவர் கட்டுப்படுகின்றாரோ, அவர் மகத்தான வெற்றியடைந்து விட்டார்.} (அல்குர்ஆன் 33:70,71)

(இவ்விறைவாழ்த்துக்குப்) பின்னர்! எவருக்கு தனது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பற்றியும் அவர்களது வாழ்க்கை வரலாறு, அவர்களது நடைமுறைகள் பற்றியும் அறிந்து

கொள்வதற்கு சிறிதளவேனும் எண்ணம் இருக்கிறதோ அப்படியானவருக்கு இன்றியமையாத எளிமையான வார்த்தைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. இமாம் இப்னுல் கையிம் றஹிமஹுல்ளாஹ் கூறினார்கள்: 'அடியான் ஈருலகிலும் மகிழ்ச்சி அடைவதற்கு நபி -ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம்- அவர்களின் வழிமுறை அவசியம் எனும் போது, அவர்களைப் பற்றிய அறியாமையில் உள்ளோரின் பட்டியலில் இடம்பெறாமல், அவர்களைப் பின்பற்றியவர்களின் கூட்டத்தில் சேர்ந்து கொள்ளும் அளவுக்கு அவர்களின் வழிமுறையையும் வாழ்க்கை வரலாற்றையும் அவர்கள் சம்பந்தமான விடயங்களையும் கற்றுக்கொள்வது தனக்கு நலவு நாடும் தனது ஈடேற்றத்தையும் மகிழ்ச்சியையும் விரும்பும் ஒவ்வொருவர் மீதும் கட்டாயக் கடமையாகும். இந்த நிலையை அடைந்து கொள்வதில் சிலர் அதிக பாக்கியம் பெற்றவர்களாகவும், வேறு சிலர் குறைவாக பாக்கியம் பெற்றவர்களாகவும், இன்னும் சிலர் பாக்கியத்தை இழந்தவர்களாகவும் இருக்கின்றனர். அருட் பாக்கியம் அள்ளாஹ்வின் கையில்தான் இருக்கின்றது. அதனை அவன் தான் நாடியவர்களுக்கு வழங்குகிறான். அவன் மகத்தான அருட் பாக்கியங்களைத் தன்னகத்தே கொண்டவன்'.

அள்ளாஹ் எனக்கும் உங்களுக்கும் அவனது நபி (ﷺ) அவர்களை நேசிப்பதற்கும், அவர்கள் ஏவிய விடயங்களில் அவர்களுக்கு வழிப்படுவதற்கும், அவர்கள் தடுத்த விடயங்களைத் தவிர்ந்து நடப்பதற்கும் பாக்கியம் அளிப்பானாக!

'அள்ளாஹ்வே! இப்றாஹீமின் மீதும் இப்றாஹீமின் குடும்பத்தார் மீதும் நீ கருணை புரிந்ததைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் கருணை புரிந்திடு. அள்ளாஹ்வே! இப்றாஹீமின் மீதும் இப்றாஹீமின் குடும்பத்தார் மீதும் நீ அருள் வளத்தைப் பொழிந்ததைப் போல் முஹம்மதின் மீதும் முஹம்மதின் குடும்பத்தார் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிந்திடு, நீயே புகழுக்குரியவனும், கண்ணியம் மிக்கவனுமாவாய். எல்லாப் புகழும் எல்லா உலகங்களினதும் இரட்சகனாகிய அள்ளாஹ்வுக்கே உரியது.

📖 *அத்தியாயம்* - 1:

# நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் தன்மைகள், வழிமுறைகள், தனித்துவங்கள், மற்றும் அவர்களின் உறவினர்:

## شمائله وهديه (ﷺ)

## ● நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் தன்மைகள்:

## ● شمائله (ﷺ)

### 💎 அவர்களின் வம்சம்

முஹம்மத் > அப்துள்ளாஹ் (தந்தை) > அப்துல் முத்தலிப் (பாட்டன்) > ஹாஷிம் (பூட்டன்) > அப்து மனாஃப் (முப்பாட்டன்) > குசை > கிலாப் > முர்ரஹ் > கஃப் > லுஜ > காலிப் > ஃபிஹ்ர் > மாலிக் > நள்ர் > கினானஹ் > குஸைமஹ் > முத்ரிகஹ் > இல்யாஸ் > முளர் > நிஸார் > மஅத் > அத்னான்.

அத்னான் என்பவர் இஸ்மாஈல் நபியின் பரம்பரையில் வந்தவராவார். இஸ்மாஈல் நபி அவர்களோ அள்ளாஹ்வின் உற்ற நட்பைப் பெற்ற இப்றாஹீம் நபியின் அறுத்துப் பலியிடுமாறு ஏவப்பட்ட புதல்வராவார்.

நபி (ﷺ) அவர்களே வம்சத்தில் பூமியில் வாழ்ந்தவர்களில் மிகச் சிறந்தவராவார்கள்.

ரோம சாம்ராஜ்யத்தின் மன்னரான ஹெர்குலிஸ் குறைஷிகளின் தலைவர் அபூ ஸுஃப்யானிடம் நபி (ﷺ) அவர்களைப் பற்றிய பல விடயங்களை விசாரித்துவிட்டு பின்வருமாறு கூறினார்:
'அவரின் குலத்தைப் பற்றி உம்மிடம் விசாரித்தேன். அதற்கு நீர் உங்களில் அவர் உயர் குலத்தைச் சேர்ந்தவர் தாம் என்று குறிப்பிட்டீர். எல்லா இறைத்தூதர்களும் அப்படித்தான். அவர்களின் சமூகத்திலுள்ள உயர் குலத்தில்தான் அனுப்பப்பட்டுள்ளார்கள்...'[2]

### 💎 நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: நிச்சயமாக அள்ளாஹ் இஸ்மாஈல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பரம்பரையிலிருந்து கினானஹ்வைத் தேர்ந்தெடுத்தான். கினானஹ்வின் பரம்பரையிலிருந்து குறைஷைத் தேர்ந்தெடுத்தான். குறைஷின்

---

[2] [📚 புகாரி 7]
இந்த நூலில் இத்தகைய [...] அடைப்புக்குறிகளுக்குள் காணப்படுகின்ற ஆதாரங்கள் மற்றும் அனைத்துக் குறிப்புகளும் மொழிபெயர்ப்பாளரால் இணைக்கப்பட்டவையாகும்.

பரம்பரையிலிருந்து பனூ ஹாஷிம் குலத்தினரைத் தேர்ந்தெடுத்தான். பனூ ஹாஷிம்களிலிருந்து என்னைத் தேர்ந்தெடுத்தான்.[3]

### 💎 நபி (ﷺ) அவர்களின் பெயர்கள்

இப்பெயர்கள் அனைத்தும் ஆளை அடையாளப்படுத்தும் வெறும் அடையாளங்கள் மாத்திரமன்று; பண்புகளைக் குறிக்கும் அர்த்தமுள்ள வர்ணனைகளுமாகும். இப்பெயர்கள் யாவும் நபி (ﷺ) அவர்களில் காணப்பட்ட அவர்களுக்குப் புகழை ஏற்படுத்தி, அவர்களின் பூரணத்துவத்தை எடுத்துரைக்கும் பண்புகளில் இருந்து உருவான பெயர்களாகும். அவையாவன:

1 **முஹம்மத்**: இதுவே அவர்களின் பெயர்களில் மிகப் பிரபலமானதாகும். அவர்களுக்கு தவ்றாஹ் வேதத்தில் தெளிவாக இப்பெயரே சூட்டப்பட்டுள்ளது. புகழுக்குரிய பல பண்புகளைத் தன்னகத்தே கொண்டவர் என்பது இதன் அர்த்தம்.

2 **அஹ்மத்**: அதாவது படைப்புகளில் அள்ளாஹ்வை மிக அதிகமாகப் புகழ்கின்றவர். மேலும், அவர்களிடம் நிறைந்திருக்கும் பண்புகளுக்காக வானத்திலும் பூமியிலும் இம்மையிலும் மறுமையிலும் உள்ளவர்களினது புகழைப் பெற்றவர்கள். அவர்களை இப்பெயர் மூலமே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

3 **அல்முதவக்கில்** (தவக்குல் வைப்பவர்): அவர்களுக்கு இப்பெயர் சூட்டப்பட்டதற்கான காரணம்: மார்க்கத்தை நிலைநாட்டுவதில் அள்ளாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்து - பாரம் சுமத்தி இணையற்ற தவக்குளை மேற்கொண்டார்கள்.

4 **அல்மாஹீ** (நீக்குபவர்/ஒழிப்பவர்): அள்ளாஹ் அவர்கள் மூலம் குஃப்ரை - இறைநிராகரிப்பை நீக்குகிறான். அவர்களைக் கொண்டு குஃப்ர் ஒழிக்கப்பட்டது போன்று வேறு எவரைக் கொண்டும் ஒழிக்கப்படவில்லை.

5 **அல்ஹாஷிர்** (ஒன்றுதிரட்டுபவர்): அவர்களுக்கு பின்னால் மனிதர்கள் மறுமையில் ஒன்றுதிரட்டப்படுவர். ஆகையால், அவர்கள் மனிதர்களை ஒன்று திரட்டுவதற்காக எழுப்பப்பட்டவர் போன்று இருக்கிறார்கள்.

6 **அல்ஆகிப்** (பிறகு வந்தவர்/இறுதியானவர்): அவர்களுக்குப் பின்னர் எந்த நபியும் இல்லை. இப்பெயர் (خ)காதம் என்ற அர்த்தத்தைக் கொண்டுள்ளது.

7 **அல்முகஃப்ஃபீ** (தனக்கு முன்வந்தவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிவந்தவர்): அள்ளாஹ் அவர்களை அவர்களுக்கு முன்வந்த தூதர்களுக்குப் பின்னால் அனுப்பிவைத்தான்.

8 **நபிய்யுத் தவ்பஹ்**: அள்ளாஹ் அவர்கள் மூலம் பூமியிலுள்ளவர்களுக்கு தவ்பஹ் - பாவமன்னிப்பின் வாயிலைத் திறந்து கொடுத்தான். அவர்களுக்கு முன் என்றுமே இல்லாதளவுக்கு பூமியிலுள்ளவர்களுக்கு மன்னிப்பை வழங்கினான். மேலும்,

---

[3] [📚 முஸ்லிம் 2276]

அவர்களும் மனிதர்களிலே மிகவும் இஸ்திக்ஃபார், தவ்பஹ் செய்பவர்களாக இருந்தார்கள்.

⑨**நபிய்யுல் மல்ஹமஹ்:** (மல்ஹமஹ்-கடுமையான போராட்டம்.) அள்ளாஹ்வின் எதிரிகளுடன் போராடுவதற்காக அனுப்பப்பட்டார்கள். அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களும் அவர்களின் உம்மத்தும் போராடிய அளவுக்கு எந்த ஒரு நபியும் அவரது உம்மத்தும் ஒருபோதும் போராடவில்லை. அவர்களது காலத்தில் நடைபெற்ற பாரிய யுத்தங்கள் போன்று அவர்களுக்கு முன்னர் நடைபெற்றதாக அறியப்படவில்லை.

🔟 **நபிய்யுர் றஹ்மஹ்** (அருட்கொடை நபி): அள்ளாஹ் அவர்களை உலகத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பிவைத்தான். அவர்களை அனுப்பியதன் மூலம் பூமியில் வாழும் அனைவருக்கும் அருள் புரிந்தான். முஃமின்கள் இவ்வருட்கொடையில் இருந்து பெரும் பங்கைப் பெற்றுக்கொண்டனர். நிராகரிப்பாளர்களும் கூட அதிலும் குறிப்பாக வேதக்காரர்கள் அவர்களின் காலத்தில் அவர்களது ஆதரவில் வாழ்ந்தார்கள்.

⑪**அல்ஃபாதிஹ்** (திறக்கக்கூடியவர் / வெற்றியாளர்): மூடப்பட்டிருந்த நேர்வழியின் கதவை அள்ளாஹ் அவர்களைக் கொண்டு திறந்துவிட்டான். அவர்களைக் கொண்டு அள்ளாஹ் குருடான கண்களையும் செவிடான காதுகளையும் திரையிடப்பட்ட உள்ளங்களையும் சத்தியத்தின் பக்கம் திறந்துகொடுத்தான். நிராகரிப்பாளர்களின் நகரங்களையும் சுவனத்தின் வாயில்களையும் பயனுள்ள கல்வி மற்றும் நற் செயலுக்கான வழிகளையும் அள்ளாஹ் அவர்கள் மூலமாகத் திறந்துவிட்டான்.

⑫ **அல்அமீன்** (நம்பிக்கைக்குரியவர்): உலகத்தாரில் இப்பெயரிற்கு மிகவும் தகுதியானவர் அவர்களே. அவர்கள் அள்ளாஹ்வின் 'வஹ்ய்' மற்றும் மார்க்க விடயத்தில் அவனிடத்தில் நம்பிக்கைக்குரியவர். வானத்தில் உள்ளவர்களிடத்திலும் பூமியில் உள்ளவர்களிடத்திலும் அவர்கள் நம்பிக்கைக்குரியவர்கள். அதைவிட மேலாக அவர்கள் தூதராக அனுப்பபடுவதற்கு முன்னர் அவர்களைக் குறைஷிக் காஃபிர்களே 'அல்அமீன்' என்று பெயர் சூட்டினர்.

⑬**அல்பஷீர்** (நன்மாராயம் கூறுபவர்): தனக்கு வழிப்பட்டவர்களுக்கு நற்கூலி இருக்கிறது என்று நன்மாராயம் கூறினார்கள். தனக்கு மாறுசெய்தவர்களுக்கு தண்டனை இருக்கிறது என்று அச்சமூட்டி எச்சரித்தார்கள்.

⑭**ஸய்யிது வலதி ஆதம்** (ஆதாமின் மக்களின் தலைவர்): நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: நான் மறுமை நாளில் ஆதமின் பிள்ளைகளின் தலைவனாவேன். இதில் எந்தப் பெருமையும் இல்லை.[4]

⑮ **அஸ்-ஸீறாஜுல் முனீர்** (ஒளிவிளக்கு): முனீர் என்ற சொல்லில் சுட்டெரிக்காத ஒளியைக் கொடுக்கக்கூடியது என்ற அர்த்தமுள்ளது. முனீர் என்ற இச்சொல் 'வஹ்ஹாஜ்' என்ற சொல்லுக்கு மாற்றமானது.

---

[4] [பார்க்க: 📚 முஸ்லிம் 2278, திர்மிதி 3615]

ஏனெனில் வஹ்ஹாஜ் என்னும் போது அதில் ஒரு வகை எரித்திடும் தன்மையும் சேர்ந்து காணப்படும்.

⑯ **அப்துள்ளாஹ்** - அள்ளாஹ்வின் அடிமை. விஷேடமானவர்களிலும் அதிவிஷேடவமானவர்களிடம் காணப்படும் இறை அடிமைத்துவம் அவர்களிடம் காணப்பட்டது. ஏனெனில் அவர்கள் அள்ளாஹ்வுக்கு அடிபணியும் தன்மையின் அனைத்துப் படித்தரங்களையும் பூரணப்படுத்தியவர்கள்.

### 💎 நபி (ﷺ) அவர்களின் மொத்தப் பண்புகளின் சுருக்கம்

📌 நபி (ﷺ) அவர்கள் தன்னைப் பற்றிச் செய்திருக்கும் வர்ணனையே அவர்களின் பண்புகளைப் பற்றிய பரிபூரணமான ஒரு வர்ணனையாக விளங்குகின்றது. நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: நான் முஹம்மத் அள்ளாஹ்வின் அடியானும் அவனது தூதருமாவேன். அள்ளாஹ் எந்த இடத்தில் என்னை வைத்திருக்கின்றானோ அந்த இடத்திற்கு மேலால் நீங்கள் என்னை உயர்த்துவதை நான் விரும்புவதில்லை.[5]

📌 நபி (ﷺ) அவர்கள் மனிதர்களிலேயே உடலமைப்பிலும் பண்பாட்டிலும் மிக அழகானவர்களாக இருந்தார்கள். அள்ளாஹ் கூறுகிறான்: {(நபியே) நிச்சயமாக நீர் மகத்தான நற்குணத்தின் மீது இருக்கின்றீர்.} (அல்கலம் 68:4)

ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்களது குணம் அல்குர்ஆனாக இருந்தது.[6]

அதாவது அல்குர்ஆனைச் செயல்படுத்துவார்கள். அதன் எல்லைகளோடு நின்று கொள்வார்கள். அது பொருந்துவதைப் பொருந்திக் கொள்வார்கள். அது வெறுப்பதை வெறுப்பார்கள்.

📌 நபி (ﷺ) அவர்கள் அள்ளாஹ்வின் (خ)கலீலாக - உற்ற நண்பனாக விளங்கினார்கள். நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: (அள்ளாஹ் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை உற்ற நண்பனாக எடுத்துக்கொண்டதைப் போன்று என்னையும் உற்ற நண்பனாக எடுத்துக்கொண்டான்).[7]

### 💎 நபி (ﷺ) அவர்களின் உடற்பண்புகள்

***📌 நபி (ﷺ) அவர்களது கண்ணியமிக்க உடம்பு:***

அனஸ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் சிவப்பு கலந்த வெண்மை நிறத்தைக் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களின் வியர்வைத் துளிகள் முத்துக்களைப் போன்று (தெளிவாக) இருந்தன. அவர்கள் நடந்தால் (பள்ளத்தில் இறங்குவதைப் போன்று முன்பக்கம்) சாய்ந்து

---

5 [📚 அஹ்மத் 12551, நஸாஈ 10077]
6 [📚 அஹ்மத் 25813]
7 [📚 முஸ்லிம் 532]

நடப்பார்கள் (அதாவது சற்று விரைவாக நடப்பார்கள்). அவர்களது உள்ளங்கையைவிட மென்மையான அலங்காரப் பட்டையோ சாதாரணப் பட்டையோ நான் தொட்டதில்லை. அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களது (உடல்) வாசனையைவிட சுகந்தமான கஸ்தூரியையோ 'அம்பரை'யோ நான் நுகர்ந்ததேயில்லை.[8]

📌 ***நபி (ﷺ) அவர்களின் உயரம்:***

பறாஃ இப்னு ஆஸிப் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்கள் நடுத்தர உயரமுடையவர்களாகவும் (மேல் முதுகும் மார்பும் விசாலமான நிலையில்) இரண்டு புஜங்களுக்கிடையே அதிக இடைவெளி உள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்களின் தலைமுடி அவர்களின் காதுகளின் சோணையை எட்டும் அளவுக்கு இருந்தது. அவர்களை நான் சிவப்பு நிற அங்கி ஒன்றில் பார்த்திருக்கிறேன். அவர்களை விட அழகான எதையும் ஒருபோதும் நான் கண்டதேயில்லை.[9]

📌 ***நபி (ﷺ) அவர்களின் முகம்:***

கஃப் இப்னு மாலிக் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நான் அள்ளாஹ்வின் தூதருக்கு ஸலாம் சொன்ன போது. அவர்களின் முகம் மகிழ்ச்சியால் மின்னிக் கொண்டிருந்தது. அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) மகிழ்ச்சியடைந்தால் அவர்களின் முகம் சந்திரனின் ஒரு துண்டைப் போல் பிரகாசமாகிவிடும். அதனை (அதாவது மகிழ்ச்சியில் அவர்களின் முகம் ஒளிர்வதை) நாம் அறிந்து வைத்திருந்தோம்.[10]

'நபி (ﷺ) அவர்களின் முகம் (பிரகாசத்தில்) வாளைப் போன்று இருந்ததா என்று?' பறாஃ இப்னு ஆஸிப் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு அவர்கள் 'இல்லை, அதைவிட (பிரகாசமாக) சந்திரனைப் போல இருந்தது' என்றார்கள்.[11]

📌 ***நபி (ﷺ) அவர்களின் முடி:***

அனஸ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்கள் பருத்த கைகள் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பின் அவர்களைப் போன்று (வேறு யாரையும்) நான் பார்க்கவில்லை. நபி (ﷺ) அவர்களின் (தலை) முடி சுருண்டதாகவோ முற்றிலும் நீண்டதாகவோ இருக்கவில்லை; அவ்விரண்டிற்கும் இடையில் இருந்தது.[12]

---

[8] [📚 முஸ்லிம் 2330]
[9] [📚 புகாரி 3551]
[10] [📚 புகாரி 3556]
[11] [📚 புகாரி 3552]
[12] [📚 புகாரி 5906]

### 📌 *நபி (ﷺ) அவர்களின் கண்கள்:*
ஜாபிர் இப்னு ஸமுறஹ் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்கள் கூறினார்கள்: அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் விசாலமான வாயும் விழி வெண்படலத்தில் சிறிதளவு சிவப்புக் கலந்த கண்களும் சதை குறைவான குதிகால்களும் உடையவர்களாக இருந்தார்கள்.[13]

### 📌 *நபி (ﷺ) அவர்களின் வியர்வை:*
அனஸ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்கள், எங்களது வீட்டுக்கு வந்து மதிய ஓய்வெடுத்தார்கள். அப்போது அவர்களது உடலில் வியர்வை ஏற்பட்டது. என் தாயார் (உம்மு ஸுலைம் -றளியள்ளாஹு அன்ஹா-) அவர்கள் ஒரு கண்ணாடிக் குடுவையுடன் வந்து வியர்வையை அந்தக் குடுவையில் சேகரிக்கலானார்கள். நபி (ﷺ) அவர்கள் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்து, "உம்மு ஸுலைமே! என்ன செய்து கொண்டிருக்கிறீர்?" என்று கேட்டார்கள். என் தாயார், "இது தங்களது வியர்வை. இதை எங்கள் நறுமணப் பொருளில் சேர்க்கிறோம். இது வாசனைப் பொருட்களில் அதிக மனம் கமழக் கூடியவையில் ஒன்றாகும்" என்று சொன்னார்கள்.[14]

### 📌 *நபி (ﷺ) அவர்களின் நபித்துவ முத்திரை*
அவர்களது இரண்டு தோள்பட்டைகளுக்கும் மத்தியில் நபித்துவ முத்திரை காணப்பட்டது. அது அவர்களின் உடம்பில் மச்சத்தைப் போன்று வெளிப்படையாக இருந்தது.
ஜாபிர் இப்னு ஸமுறஹ் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்கள் கூறினார்கள்: "நபி (ﷺ) அவர்களது முதுகில் தோள்பட்டையின் அருகில் நபித்துவ முத்திரையை நான் கண்டேன். அது (அளவில்) புறா முட்டையைப் போன்றிருந்தது. மேலும், அது (நிறத்தில்) அவர்களது உடலை ஒத்திருந்தது."[15]

---

[13] [📚முஸ்லிம் 2339]
[14] [📚முஸ்லிம் 2331]
[15] [📚முஸ்லிம் 2344]

## 💎 நபி (ﷺ) அவர்களின் நற்பண்புகள்

***📌 நபி (ﷺ) அவர்களது தோழர்கள் அவர்களுக்கு அளித்த கண்ணியம்:***

அம்ர் இப்னுல் ஆஸ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: எனக்கு அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களைவிட மிகவும் பிரியமானவர் வேறெவரும் இருக்கவில்லை; எனது பார்வைக்கு அவர்களை விட மிகவும் கண்ணியமானவர் வேறெவரும் இருக்கவில்லை. அப்போது அவர்கள் மீது நான் வைத்திருந்த மரியாதையினால் என் கண்கள் நிரம்ப அவர்களைப் பார்க்கக்கூட என்னால் முடியவில்லை. அவர்களை வர்ணித்துக் கூறும்படி நான் கேட்டுக்கொள்ளப்பட்டால் அதற்கும் என்னால் இயலாது. ஏனெனில், நான் அவர்கள் மீது வைத்திருந்த மரியாதையின் காரணத்தால் என் கண்கள் நிரம்ப அவர்களை நான் பார்த்திருக்கவில்லை.[16]

உர்வஹ் இப்னு மஸ்ஊத் அஸ்ஸகஃபீ (றளியள்ளாஹு அன்ஹு) இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் குறைஷிகளின் சார்பாக ஹுதைபியஹ் உடன்படிக்கைக்கு வந்துசென்று குறைஷிகளிடம் பின்வருமாறு கூறினார்: என் சமுதாயத்தாரே! நான் பல அரசர்களிடம் தூதுக் குழுவில் ஒருவனாகச் சென்றுள்ளேன். (ரோம மன்னன்) சீசரிடமும், (பாரசீக மன்னன்) கிஸ்ராவிடமும், (அபிசீனிய மன்னன்) நஜாஷியிடமும் தூதுக் குழுவில் சென்றுள்ளேன். அள்ளாஹ்வின் மீதாணையாக! முஹம்மதின் தோழர்கள் முஹம்மத்துக்கு அளிக்கின்ற கண்ணியத்தைப் போல் எந்த அரசருக்கும் அவரின் தோழர்கள் கண்ணியம் அளிப்பதை நான் பார்த்ததேயில்லை. அள்ளாஹ்வின் மீதாணையாக! அவர் சளியைத் துப்பினால் அதை அவரின் தோழர்களில் ஒருவர் தம் கையில் ஏந்திக் கொள்கிறார். அதை அவர் தம் முகத்திலும், மேனியிலும் தேய்த்துக் கொள்கிறார். அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டால் அவரின் கட்டளையை நிறைவேற்ற அவர்கள் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு முன்வருகிறார்கள். அவர் வுளூஃச் செய்தால் அவர் வுளூஃச் செய்து எஞ்சிய தண்ணீரைப் பெறுவதற்காக, ஒருவரோடொருவர் சண்டையிடும் அளவிற்குச் செல்வார்கள். அவர் பேசினால், அவரிடம் அவர்கள் தங்களின் குரல்களைத் தாழ்த்திக் கொள்கிறார்கள். அவரை கண்ணியப்படுத்தும் நோக்கத்தில் அவரைக் கூர்ந்து (நேருக்கு நேர்) பார்ப்பதில்லை.[17]

---

[16] [📚 முஸ்லிம் 121]
[17] [📚 புகாரி 2732]

### 📌 *அள்ளாஹ்வுடன் நபி (ﷺ) அவர்கள் பேணிய ஒழுக்கம்:*

அப்துள்ளாஹ் இப்னு ஷிஃக்கீர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நாம் நபி (ﷺ) அவர்களை நோக்கி நீங்கள் எங்கள் தலைவர் என்று கூறினோம். அதற்கவர்கள், (யதார்த்தத்தில்) தலைவன் அள்ளாஹ் -தபாறக வதஆலா- தான் என்று கூறினார்கள். நீங்கள் (அந்தஸ்தில்) எங்களில் மிகச் சிறந்தவர், மேலும் கொடையில் எங்களில் மிக மகத்தானவர் என்று கூறினோம். அதற்கவர்கள், "உங்களின் வார்த்தையை கூறிக் கொள்ளுங்கள் அல்லது அவற்றில் சிலதை கூறிக் கொள்ளுங்கள். ஷைத்தான் உங்களை (அளவுகடப்பதின் பக்கம்) ஓட்டிச் சென்று விடக்கூடாது" என்று கூறினார்கள்.[18]

### 📌 *நபி (ﷺ) அவர்களின் வீரம்:*

பறாஃ இப்னு ஆஸிப் (றளியள்ளாஹு அன்ஹு) கூறினார்கள்: அள்ளாஹ்வின் மீதாணையாக! போர் (உச்சகட்டமடைந்து) சிவந்து (கனன்று) கொண்டிருந்த போது நபியவர்களையே கேடயமாக்கி நாங்கள் தப்பித்துக்கொண்டிருந்தோம். எங்களில் வீரர்கள்கூட நபியவர்களுக்கு நேராக (அவர்களுக்குப் பின்னாலேயே) நின்று கொண்டிருந்தனர்.[19]

### 📌 *நபி (ﷺ) அவர்களின் இறையச்சம்:*

அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "... அள்ளாஹ்வின் மீதாணையாக! உங்களை விட அதிகமாக நான் அள்ளாஹ்வை அஞ்சுபவன் ஆவேன். அள்ளாஹ்வைப் பயந்து நடப்பவன் ஆவேன்".[20]

### 📌 *நபி (ﷺ) அவர்கள் தம் குடும்பத்தோடு பேணிய நளினம்:*

அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் சிறந்தவர் தன் குடும்பத்திடம் சிறந்தவரே; நானும் என் குடும்பத்திடம் சிறந்தவனாக இருக்கின்றேன்".[21]

### 📌 *நபி (ﷺ) அவர்களின் வெட்கம் - நாணம்:*

அபூ ஸஈத் அல் குத்ரீ (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்கள் திரைக்குள் இருக்கும் கன்னிப் பெண்ணை விடவும் அதிக வெட்கமுடையவர்களாயிருந்தார்கள். தாம் விரும்பாத ஒன்றை அவர்கள் பார்த்துவிட்டால், அந்த வெறுப்பினை அவர்களின் முகத்திலிருந்தே நாங்கள் அறிந்துவிடுவோம்.[22]

---

[18] [📚அபூதாவூத் 4806, அல்பானி: ஸஹீஹ்]
[19] [📚முஸ்லிம் 1776]
[20] [📚புகாரி 5063]
[21] [📚திர்மிதி 3895, அல்பானி: ஸஹீஹ்]
[22] [📚புகாரி 6102]

📌 ***நபி (ﷺ) அவர்களின் எதையும் இலகுபடுத்தும் தன்மை:***
ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் கூறினார்கள்: (பொதுவாக) இரண்டு விஷயங்களில் விரும்பியதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படி நபி (ﷺ) அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டால் அவர்கள் அவ்விரண்டில் இலேசானதையே - அது பாவமான விஷயமாக இல்லாதிருக்கும் பட்சத்தில் எப்போதும் தேர்வு செய்வார்கள். அது பாவமான விஷயமாக இருந்தால் அதிலிருந்து மனிதர்களில் வெகு தொலைவில் (விலகி) நிற்பவராக அவர்களே இருப்பார்கள்.[23]

📌 ***நபி (ﷺ) அவர்கள் யாரையும் பழிவாங்கமாட்டார்கள்:***
ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் கூறினார்கள்: அள்ளாஹ்வின் மீதாணையாக! தனக்கிழைக்கப்பட்ட (கொடுமைகளில்) எதற்காகவும் தமக்கென்று எவரையும் ஒரு போதும் அவர்கள் பழிவாங்கியதில்லை; அள்ளாஹ்வின் புனித(ச் சட்ட)ங்கள் சீர்குலைக்கப்பட்டு, (அதற்காக) அள்ளாஹ்வின் சார்பாகத் தண்டிக்க வேண்டுமென்று இருந்தாலே தவிர.[24]

📌 ***நபி (ﷺ) அவர்கள் உணவைக் குறை கூறமாட்டார்கள்:***
அபூ ஹுறைறஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்கள் எந்த உணவையும் ஒருபோதும் குறை சொன்னதில்லை. பிடித்தால் அதை உண்பார்கள். பிடிக்காவிட்டால் அதை (உண்ணாமல்) விட்டுவிடுவார்கள்.[25]

📌 ***நபி (ﷺ) அவர்கள் அன்பளிப்பை (ஹதீய்யஹ்வை) ஏற்றுக் கொள்வார்கள்:***
ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் கூறினார்கள்: அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் அன்பளிப்பை ஏற்றுக்கொள்வார்கள். அதற்கு (பதிலாக எதையாவது கொடுத்து) ஈடு செய்வார்கள்.[26]

📌 ***நபி (ﷺ) அவர்கள் தர்மமாக வழங்கப்படும் (ஸதகஹ் / ஸகாத்) பொருளை உண்ணமாட்டார்கள்:***
நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: “முஹம்மதின் குடும்பத்தினர் தர்மமாக வழங்கப்படும் (ஸதகஹ் / ஸகாத்) பொருளை உண்ணமாட்டார்கள்”.[27]

---

[23] [📚 புகாரி 3560]
[24] [📚 புகாரி 6786]
[25] [📚 புகாரி 5409]
[26] [📚 புகாரி 2585]
[27] [📚 புகாரி 1485]

### 📌 நபி (ﷺ) அவர்களின் பணிவு:

அபூ மஸ்வூத் அல்பத்ரி (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து பேச முற்பட்டார். (அச்சத்தால்) அவரது நெஞ்சு நடுங்கத் தொடங்கியது. அப்போது அவருக்கு நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "(என் விடயத்தில்) உன் மீது இலகுவாக நடந்து கொள்வீராக (எனக்கு நீர் பயப்படத் தேவையில்லை). ஏனெனில் நான் அரசன் இல்லை; நானோ (வெயிலில்) உலர்த்திய இறைச்சியை உண்ணும் ஒரு பெண்ணின் மகன் தான்".[28]

### 📌 நபி (ﷺ) அவர்கள் தமது குடும்பத்திற்கு வீட்டுப் பணிகளில் ஒத்துழைப்பார்கள்:

அஸ்வத் இப்னு யஸீத் (றஹிமஹுள்ளாஹ்) கூறினார்: நபி (ﷺ) அவர்கள் தங்களின் வீட்டில் என்ன செய்வார்கள்? என ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களிடம் கேட்டேன். அதற்குத் தம் குடும்பத்திற்கு வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்வார்கள்; தொழுகை நேரம் வந்ததும் தொழுகைக்காக வெளியே செல்வார்கள்' என ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) பதில் கூறினார்கள்.[29]

### 📌 நபி (ﷺ) அவர்கள் அறிவீனர்களைப் பொருட்படுத்தவில்லை:

(குறைஷி நிராகரிப்பாளர்கள் நபி (ﷺ) அவர்களைத் திட்டும்போது, 'முஹம்மத்' -புகழப்படுபவர்- என்ற பெயரைக் கூறாமல் 'முதம்மம்' -இகழப்படுவர்- என்று கூறுவர், அதனால்) அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "குறைஷிகளின் திட்டுதலையும், அவர்களின் சபித்தலையும் என்னைவிட்டு அள்ளாஹ் எப்படித் திருப்பி விடுகிறான் என்பதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவில்லையா? அவர்கள் 'முதம்மமை' (ஒரு இகழப்படுவரை) ஏசுகிறார்கள்; சபிக்கிறார்கள். ஆனால் நானோ 'முஹம்மத்' ஆவேன்".[30]

### 📌 நபி (ﷺ) அவர்களின் உண்மைத் தன்மை:

அப்துள்ளாஹ் இப்னு மஸ்ஊத் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: உண்மையே பேசியவரும் உண்மையே அறிவிக்கப்பட்டவருமான அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் எங்களிடம் கூறினார்கள்: ...[31]

---

[28] [📚 இப்னு மாஜஹ் 3312, அல்பானி: ஸஹீஹ்]
[29] [📚 புகாரி 676]
[30] [📚 புகாரி 3533]
[31] [📚 புகாரி 3208]

📌 ***நபி (ﷺ) அவர்கள் தமது பணியாளருடன் பேணிய நற்குணங்கள்:***
அனஸ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நான் நபி (ﷺ) அவர்களுக்குப் பத்து ஆண்டுகள் ஊரிலும் பிரயாணத்திலும் பணிவிடை செய்திருக்கிறேன். அள்ளாஹ்வின் மீது சத்தியமாக (மனம் வேதனைப்படும்படி) என்னை 'ச்சீ' என்றோ, நான் செய்த எதைப் பற்றியும் 'இதை ஏன் நீ இப்படிச் செய்தாய்?' என்றோ, நான் செய்யாத எதைப் பற்றியும் 'இதை ஏன் நீ இப்படிச் செய்யவில்லை?' என்றோ நபியவர்கள் என்னிடம் சொன்னதில்லை.[32]

📌 ***நபி (ﷺ) அவர்கள் தமது தோழர்களிடமிருந்து தம்மை வித்தியாசமாக அடையாளப்படுத்திக் கொள்ளவில்லை. தாராள, பரந்த மனப்பான்மையுடையவர்களாக இருந்தார்கள்:***
அனஸ் இப்னு மாலிக் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்களுடன் நாங்கள் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தபோது ஒட்டகத்தின் மீது அமர்ந்தவராக ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தார். பள்ளியினுள்ளே ஒட்டகத்தைப் படுக்கவைத்து பின்னர் அதனைக் கட்டினார். பின்பு அங்கு அமர்ந்திருந்தவர்களிடம் 'உங்களில் முஹம்மத் யார்?' என்று கேட்டார். நபி (ﷺ) அவர்களோ மக்களிடையே சாய்ந்து அமர்ந்திருந்தார்கள். 'இதோ சாய்ந்து அமர்ந்திருக்கும் இந்த வெண்மை மனிதர்தாம் (முஹம்மத் (ﷺ)) என்று நாங்கள் கூறினோம். உடனே அம்மனிதர் நபி (ﷺ) அவர்களை 'அப்துல் முத்தலிபின் மகனே!' என்றழைத்தார். அதற்கு நபியவர்கள் 'ஆம்' என்று கூறினார்கள். அப்போது அம்மனிதர் நபி (ﷺ) அவர்களிடம் 'நான் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்கப் போகிறேன். கேள்வி கேட்பதில் கடினமாக நடந்து கொள்வேன். அதற்காக நீங்கள் என் மீது வருத்தப்படக் கூடாது' என்றார். அதற்கவர்கள் “நீர் விரும்பியதைக் கேளும்” என்றார்கள். உடனே அம்மனிதர் 'உம்முடையதும் உமக்கு முன்னிருந்தோரதும் இரட்சகன் மீது ஆணையாகக் கேட்கிறேன்; அள்ளாஹ்தான் உம்மை மனித இனம் முழுமைக்கும் தூதராக அனுப்பினானா?' என்றார். அதற்கு அவர்கள் “அள்ளாஹ் சாட்சியாக ஆம்!” என்றார்கள். அடுத்து அவர் 'அள்ளாஹ்வின் மீது ஆணையிட்டு உம்மிடம் கேட்கிறேன்; அள்ளாஹ்தான் இரவிலும், பகலிலுமாக நாங்கள் ஐந்து நேரத் தொழுகையைத் தொழுது வரவேண்டுமென்று உமக்குக் கட்டளையிட்டிருக்கிறானா?' என்றார். அதற்கவர்கள் “ஆம்! அள்ளாஹ் சாட்சியாக” என்றார்கள். அடுத்து அவர் 'அள்ளாஹ் மீது ஆணையாக உம்மிடம் கேட்கிறேன்; அள்ளாஹ்தான் ஒவ்வோர் ஆண்டிலும் குறிப்பிட்ட இந்த மாதத்தில் நாங்கள் நோன்பு நோற்க வேண்டும் என்று உமக்குக் கட்டளையிட்டிருக்கிறானா?' என்றார். அதற்கவர்கள் “ஆம்! அள்ளாஹ் சாட்சியாக” என்றார்கள். அடுத்து அவர், 'அள்ளாஹ் மீது ஆணையாக உம்மிடம் கேட்கிறேன்; அள்ளாஹ்தான்

---

[32] [📚 புகாரி 6038, முஸ்லிம் 2309]

எங்களில் வசதியுள்ளவர்களிடமிருந்து இந்த (ஸகாத் என்னும்) தர்மத்தைப் பெற்று எங்களில் ஏழைகளுக்கு நீர் அதனை வினியோகிக்க வேண்டுமென்று உமக்குக் கட்டளையிட்டிருக்கிறானா?' என்றார். அதற்கு நபி (ﷺ) அவர்கள் "ஆம் அள்ளாஹ் சாட்சியாக" என்றார்கள். உடனே அம்மனிதர் 'நீங்கள் (அள்ளாஹ்விடமிருந்து) கொண்டு வந்தவற்றை நான் நம்பி ஏற்கிறேன்' என்று கூறிவிட்டு 'நான், என்னுடைய கூட்டத்தார்களில் இங்கு வராமல் இருப்பவர்களின் தூதுவனாவேன். நான்தான் 'ளிமாம் இப்னு ஸஃலபஹ்', அதாவது பனூ ஸஃது இப்னு பக்ர் கோத்திரத்தைச் சேர்ந்தவன்' என்றும் கூறினார்'.[33]

📌 ***நபி (ﷺ) அவர்களின் உரட்டி:***
ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் கூறினார்: அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் மரணிக்கும் வரை அவர்களின் குடும்பத்தார் தொடர்ந்து இரண்டு நாட்கள் வாற்கோதுமை உரொட்டியால் வயிறு நிரம்ப உணவு உண்டதில்லை.[34]

📌 ***நபி (ﷺ) அவர்களின் உலகப் பற்றற்ற தன்மை:***
நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: இந்த உஹுத் மலை போல் எனக்கு தங்கம் கிடைத்து, மூன்றாவது இரவு வரும் போது அதிலிருந்து ஒரேயொரு பொற்காசு கூட என்னிடம் (எஞ்சி) இருப்பது எனக்கு மகிழ்ச்சியளிக்காது. (வாங்கிய) கடனை அடைப்பதற்காக நான் (அதிலிருந்து) எடுத்துவைக்கும் சிலதைத் தவிர! மேலும் அள்ளாஹ்வின் அடியார்களிடையே இப்படி இப்படியெல்லாம் செலவு செய்யுமாறு நான் சொல்லிக்கொண்டு இருந்தாலே தவிர.[35]

📌 ***நபி (ﷺ) அவர்கள் யாரையும் திட்டமாட்டார்கள்:***
ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் கூறினார்கள்: நபி (ﷺ) அவர்கள் இயல்பில் அருவருப்பாகப் பேசுபவராக இருக்கவில்லை; செயற்கையாகவும் அருவருப்பாகப் பேசுபவராக இருக்கவில்லை. கடைவீதிகளில் கூச்சலிட்டுச் சச்சரவு செய்பவராகவும் இருக்கவில்லை. கெடுதிக்குக் கெடுதியைப் பிரதியாகச் செய்யமாட்டார்கள். ஆனாலும் (மனதால்) மன்னிப்பவராகவும் (தனக்குக் குற்றமிழைத்தவரின் குற்றத்தை வெளிப்படையில்) பொருட்படுத்தாதவராகவும் இருந்தார்கள்.[36]

---

[33] [📚 புகாரி 63]
[34] [📚 புகாரி 5374]
[35] [📚 புகாரி 6444]
[36] [📚 திர்மிதி 2016, அல்பானி: ஸஹீஹ்]

📌 ***நபி (ﷺ) அவர்கள் எந்த ஒரு அன்னியப் பெண்ணின் கையைக் கூடத் தொட்டதில்லை:***

அல்லாஹ்வின் மீது ஆணையாக. அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களின் கை (மஹ்றமில்லாத) எந்தப் பெண்ணின் கையையும் ஒரு போதும் தொட்டதில்லை.[37]

📌 ***நபி (ﷺ) அவர்களின் எளிமையான வாழ்க்கையும் வாழ்விடமும்:***

உமர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: நான் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம் சென்றேன். அவர்கள் ஒரு பாயில் சாய்ந்து படுத்திருந்தார்கள். நான் அமர்ந்ததும் அவர்கள் தமது வேஷ்டியை தம் மீது நீட்டி (ஒழுங்குபடுத்தி)ப்போட்டுக்கொண்டார்கள். அப்போது அவர்களின் உடலில் அந்த ஆடையைத் தவிர வேறெதுவும் இருக்கவில்லை. அந்தப் பாய் அவர்களது விலாப் புறத்தில் அடையாளம் பதித்திருந்தது. அப்போது நான் அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களது கருவூல அறையை நோட்டமிட்டேன். அங்கு ஒரு 'ஸா:' அளவு வாற்கோதுமையும், அறையின் ஒரு மூலையில் அதே அளவு கருவேல இலையும் இருந்தன. நன்கு பதனிடப்படாத ஒரு தோல் அங்கு தொங்கவிடப்பட்டிருந்தது.
(இதைக் கண்ட) என் கண்கள் (என்னையும் அறியாமல்) கண்ணீர் சொரிந்தன. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், "கத்தாபின் மகனே! ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார்கள். நான், 'அல்லாஹ்வின் நபியே! என்னால் எவ்வாறு அழாமலிருக்க முடியும்? இந்தப் பாய் உங்களது விலாப் புறத்தில் அடையாளப்படுத்தியுள்ளதே. (இதோ) இதுதான் உங்களது கருவூல அறை; இதில் நான் காணுகின்ற (விலை மலிவான) சில பொருட்களைத் தவிர வேறெதையும் நான் காணவில்லை. அந்த (பாரசீகம் மற்றும் இத்தாலி அரசர்களான) குஸ்ருவும் சீசரும் கனி வர்க்கங்களிலும் நதிகளிலும் (உல்லாசமாக) இருக்கின்றனர். நீங்களோ அல்லாஹ்வின் தூதரும் அவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஆவீர்கள். ஆனால், உங்களது கருவூல அறை இவ்வாறு இருக்கிறதே!' என்றேன்.
அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், "கத்தாபின் மகனே! நமக்கு மறுமையும் அவர்களுக்கு இம்மையும் இருப்பது உங்களுக்குத் திருப்தி இல்லையா?" என்று கேட்டார்கள். நான் 'ஆம் (திருப்திதான்)' என்றேன்.[38]

---

[37] [📚 புகாரி 5288, முஸ்லிம் 1866]
[38] [📚 முஸ்லிம் 1479]

# முதலாவது பரீட்சை

| சரி, பிழையிடுக | ☑ | ☒ |
|---|---|---|
| அடியார்களின் ஈருலகச் சுபீட்சமும் நபிவழியைப் பின்பற்றுவதில் தங்கியிருக்கின்றது | | |
| இறைத்தூதர்கள் தமது சமூகத்தில் சிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்ட வம்சத்தில் இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் | | |
| "நான் முஹம்மத்; அள்ளாஹ்வின் அடியானும் அவனுடைய தூதருமாவேன்" என்று நபி (ﷺ) அவர்கள் தன்னைப் பற்றி வர்ணித்த வார்த்தையே அவர்களைப் பற்றி குறிப்பிடப்படும் ஒரு பரிபூரணமான வர்ணனையாகும் | | |
| பட்டு நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் கையை விட மென்மையானது | | |
| அள்ளாஹ் தனது நபி முஹம்மத் (ﷺ) அவர்களுக்கு பூரணமான நற்பண்புகளையும் அழகான தன்மைகளையும் ஒருசேரக் கொடுத்து இருந்ததோடு, உலகத்தார் எவருக்கும் கொடுக்காத அறிவையும் அருட் பாக்கியங்களையும் இம்மையிலும் மறுமையிலும் எதனால் ஈடேற்றமும் வெற்றியும் சுபீட்சமும் பெறமுடியுமோ அவற்றையும் வழங்கினான் | | |
| நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத உம்மியாக இருந்தார்கள்; மனிதர்களில் எவரும் அவர்களுக்கு ஆசானாக இருக்கவில்லை | | |

| நபி (ﷺ) அவர்கள் மனிதர்களிலே | மிக அழகான | மிக மென்மையான | மிக மணமான | மிகச் சிறந்த முறையில் | மிகவும் கடுமையான |
|---|---|---|---|---|---|
| கை உள்ளவர்களாக இருந்தார்கள் | | | | | |
| வாசனை உள்ளவர்களாக இருந்தார்கள் | | | | | |
| நெருங்கிப்பழகும் குணம் **கொண்ட**வர்களாக இருந்தார்கள் | | | | | |
| நற்குணமும் உடற்**த்** தோற்றமும் உள்ளவர்களாக இருந்தார்கள் | | | | | |
| பயபக்தி உள்ளவர்களாக இருந்தார்கள் | | | | | |

| நபி (ﷺ) அவர்களின் வம்சம் | ஹாஷிம் | அப்துல் முத்தலிப் | அப்துல்லாஹ் | முஹம்மத் | இஸ்மாஈல் | இப்றாஹீம் |
|---|---|---|---|---|---|---|
| நபி (ﷺ) அவர்களின் பெயர் | | | | | | |
| தந்தையின் பெயர் | | | | | | |
| பாட்டனின் பெயர் | | | | | | |
| பாட்டனின் தந்தையின் பெயர் | | | | | | |
| மிக உயர்ந்த பாட்டன் | | | | | | |
| மிக உயர்ந்த பாட்டனுக்கு முன்னாள் உள்ளவர் | | | | | | |

| ஒவ்வொரு பெயரையும் அதன் விளக்கத்துடன் இணைக்க. | முஹம்மத் | அஹ்மத் | ஆகி(ب)ப் | ஹாஷ் |
|---|---|---|---|---|
| தன்னுடைய இரட்சகனை மனிதர்களிலே அதிகம் புகழ்கின்றவர் | | | | |
| சுட்டெரிக்காத ஒளியைத் தரக்கூடியது | | | | |
| புகழுக்குரிய நிறைய பண்புகளைக் கொண்டவர் | | | | |
| அவருக்குப் பிறகு எந்த நபியும் இல்லை; அவர் இறுதியானவர் | | | | |

| நபி (ﷺ) அவர்கள் | அல்லாஹ்வுக்காக | உணவை | தமக்காக | தர்மத்தை | அன்பளிப்பை |
|---|---|---|---|---|---|
| பழிவாங்க மாட்டார்கள் | | | | | |
| தண்டிப்பார்கள் | | | | | |
| குறை கூறியதில்லை | | | | | |
| ஏற்றுக்கொண்டு அதற்குப் பிரதி செய்வார்கள் | | | | | |
| ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் | | | | | |

சரியான விடையைத் தெரிவு செய்க

- **மொத்தத்தில் பூமியில் வாழ்பவர்களில் மிகச் சிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்ட பரம்பரையில் வந்தவர்:**

A- யூனுஸ் இப்னு மத்தா அலைஹிஸ்ஸலாம் B- முஹம்மத் இப்னு அப்தில்லாஹ் ஸல்லல்ளாஹு அலைஹிவஸல்லம்

- **நபி (ﷺ) அவர்களின் பெயர்கள்:**

A- அவை அனைத்தும் அவர்களைப் பற்றிய வர்ணனையைத் தருகின்றவை
B- அவை ஏனைய மனிதர்களின் பெயர்களைப் போன்று அர்த்தம் கருத்தில் கொள்ளப்படாமல் சாதாரணமாக ஆள் அடையாளத்தை அறிந்துகொள்வதற்காக வைக்கப்படும் வெறும் பெயர்களாகும்
C- புகழையும் பூரணத்துவத்தையும் எடுத்தியம்பும் அவர்களிடம் காணப்படும் பண்புகளில் இருந்து எடுக்கப்பட்ட பெயர்களாகும்
D- மேலுள்ள அனைத்தும் E- முதலாவதும் மூன்றாவதும் மாத்திரம்

- **நபி (ﷺ) அவர்களுடைய குணம் அல்குர்ஆனாக இருந்தது:**

A- அல்குர்ஆன் விரும்பியதை விரும்பினார்கள் B- அது வெறுத்ததை வெறுத்தார்கள் C- மேற்படி அனைத்தும்

- **ஃகலீலுல்லாஹ் - அள்ளாஹ்வின் உற்ற நண்பர்:**

A- இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் B- முஹம்மத் ஸல்லல்ளாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் C- மேலுள்ள அனைத்தும் சரியானவை

- **அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களின் நிறம்:**

A- கோதுமை நிறம் B- சிவப்பு கலந்த வெள்ளை நிறம்
C- கடுமையான வெள்ளை நிறம்

- **அதிக நறுமணம் கமழும் வாசனைத்திரவியம்:**

A- கஸ்தூரி B- நபி (ﷺ) அவர்களின் வியர்வை

- **நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் உயரம்:**

A- நடுத்தரமான உயரம் உடையவர்கள் B- மிக நீளமான உயர்ந்தவர்கள்

- **நபி (ﷺ) அவர்களின் நபித்துவ முத்திரை:**

A- இரு தோள்புஜங்களுக்கும் இடையில் இருந்தது B- உடம்பின் நிறத்தை ஒத்திருந்தது C- புறாவின் முட்டையைப் போலிருந்தது
D- மேற்கூறப்பட்ட அனைத்துப் பதில்களும் சரியானவை

## 🟢 நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் வழிமுறைகள்:

## 🟢 هدي النبي (ﷺ)

### 💎 உடை, உணவு, பானம் ஆகியவற்றில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை

***📌 நபி (ﷺ) அவர்களுக்கு விருப்பமான நிறம்:***

அவர்களுக்கு விருப்பமான நிறம் வெள்ளை நிறமாகும். நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: உங்கள் ஆடைகளில் வெண்மையானவற்றை அணிந்து கொள்ளுங்கள். அவை உங்கள் ஆடைகளில் மிகச் சிறந்தவையில் உள்ளவையாகும். அவற்றாலேயே உங்களில் மரணித்தவர்களை ‘க.ஃபன்’ செய்யுங்கள்.[39]

***📌 நபி (ﷺ) அவர்களின் ஆடை:***

கம்பளி, பருத்தி, லினன் ஆகிய ஆடைவகைகளில் தமக்கு வசதிப்பட்டதை அணிந்து கொள்வார்கள். தமது ஆடையை அணிகின்ற போது வலது பக்கத்தால் ஆரம்பிப்பவர்களாக இருந்தார்கள்.

***📌 நபி (ﷺ) அவர்கள் உடையில் நடுநிலைமை பேணினார்கள்:***

ஸலபு ஸாலிஹீன்களில் ஒரு அறிஞர் கூறுகின்றார்: முன் சென்ற நல்லவர்கள் ஆடைகளில் மிக உயர்ந்த மற்றும் மிகத் தாழ்ந்த இரு தரங்களைக் கொண்ட பிரபல்யத்தை ஏற்படுத்தும் ஆடைகளை விரும்பாதவர்களாக இருந்தார்கள். இப்னு உமர் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்கள் கூறினார்கள்: யார் இவ்வுலகில் பிரபல்யத்தை ஏற்படுத்தும் ஆடை அணிகின்றாரோ எழுப்பப்படும் (மறுமை) நாளில் அவருக்கு அள்ளாஹ் இழிவை ஏற்படுத்தும் ஆடையை அணிவிப்பான். பின்னர் அதில் நெருப்புப் பற்றும்.[40]
அவன் அதன் மூலம் பெருமையை விரும்பியதால் அள்ளாஹ் அவனைத் தண்டிக்கிறான்.
நபி (ﷺ) அவர்கள் கூறியதாக இன்னொரு ஹதீஸில் இப்னு உமர் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவித்தார்கள்: “எவன் பெருமைக்காக தன்னுடைய ஆடையை (நிலத்தில்) இழுத்துச் செல்கிறானோ எழுப்பப்படும் (மறுமை) நாளில் அள்ளாஹ் அவனைப் பார்க்கமாட்டான்”.[41]

---

[39] [📚திர்மிதி 994, அபூதாவூத் 3878, அல்பானி: ஸஹீஹ்]
[40] [📚அபூதாவூத் 4029,4030 , இப்னுமாஜஹ் 3606, அஹ்மத் 5664, அல்பானி, ஷுஅர்ணாஊத்: ஹஸன், அபூஹாதிம்: மவ்கூ.ஃப்]
[41] [📚புகாரி 3665]

### 📌 நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் உணவு:

இருக்கும் உணவை மறுக்கமாட்டார்கள். இல்லாததை சிரமப்பட்டுத் தேடமாட்டார்கள். அவர்களுக்காகக் கொடுக்கப்படும் சுத்தமான நல்ல எந்த உணவையும் சாப்பிடுவார்கள். ஆனாலும் அவர்களது மனம் விரும்பாவிட்டால் ஹறாமாக்காமல் விட்டுவிடுவார்கள். ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) கூறினார்கள்: நபி (ﷺ) அவர்கள் எந்த ஒரு உணவையும் ஒருபோதும் குறை கூறியதில்லை. அவர்கள் விரும்பினால் சாப்பிடுவார்கள்; இல்லையென்றால் விட்டுவிடுவார்கள்.[42]

உதாரணமாக தமக்குக் பழக்கம் இல்லாததன் காரணமாக 'ளப்' (ضَبّ) சாப்பிடவில்லை.[43]

### 📌 நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் உணவு உண்ணும் முறை:

- அவர்களின் பெரும்பாலான உணவு பூமியில் (ஸுஃப்றஹ்) விரிப்பில் வைக்கப்படும்.
- தமது மூன்று விரல்களால் சாப்பிடுவார்கள்.
- சாய்ந்தபடி சாப்பிடமாட்டார்கள்.
- உணவு உண்ண ஆரம்பிக்கும் போது அள்ளாஹ்வின் பெயரைக் குறிப்பிடுவார்கள். உண்டு முடித்த பிறகு அள்ளாஹ்வைப் புகழ்வார்கள்.
- உண்டு முடித்த பிறகு தமது விரல்களை சூப்பிக்கொள்வார்கள்.

### 📌 நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் பானங்கள் அருந்தும் முறை:

- அவர்கள் பெரும்பாலும் உட்கார்ந்து கொண்டே குடிப்பார்கள். நின்றுகொண்டு குடிப்பதைத் தடுத்தும் இருக்கிறார்கள். எனினும் உட்கார முடியாத சந்தர்ப்பத்தில் நின்று நிலையில் குடிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளது.
- குடித்து முடித்த பிறகு தனது வலப்பக்கத்தில் இருப்பவருக்கு அதனை முதலில் பகிர்வார்கள். இடதுபக்கத்தில் இருப்பவர் வலப் பக்கத்திலுள்ளவரை விடப் பெரியவராக இருந்தாலும் சரியே.

---

[42] [📚 புகாரி3563 ]

[43] ['ளப்' (ضَبّ) என்பது உடும்பின் அமைப்புக்கு நெருக்கமான ஓர் ஊர்வன. இது உடும்பல்ல; இது ஒரு தாவர உண்ணி, மிக மிக அரிதாகவே நீர் அருந்தும், இதன் முகமும் உடும்பின் முகத்தை விடச் சற்று வித்தியாசமாக இருக்கும். உடும்பு ஒரு ஊனுண்ணியாகும். மேலும், எமது நாட்டிலுள்ள உடும்பு நஜிஸ்களையும் அருவருப்பான சிறிய உயிரினங்களையும் சாப்பிடுகிறது; நீருக்கும் செல்கிறது.]

## 💎 குடும்ப வாழ்க்கையில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை

🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: உலக விடயங்களில் எனக்குப் பெண்களும் வாசனைத் திரவியமும் விருப்பமானதாக ஆக்கப்பட்டிருக்கின்றன. எனது கண் குளிர்ச்சி தொழுகையில் வைக்கப்பட்டுள்ளது.[44]

🔹 தமது மனைவியர் இடையே இரவில் தங்குவதையும் தங்குமிட வசதியையும் செலவு செய்வதையும் சமமாகப் பகிர்ந்தளிப்பார்கள்.

🔹 ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் கூறினார்கள்: அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் பிரயாணம் செய்ய நாடினால் தம் மனைவிமார்களுக்கிடையே (எவரைத் தம்முடன் அழைத்துச் செல்வது என்று) சீட்டுக் குலுக்கிப் போடுவார்கள். எவரது பெயர் (குலுக்கலில்) வருகின்றதோ அவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டு புறப்படுவார்கள்.[45]

🔹 அவர்கள் தமது மனைவியருடன் அழகான நெருக்கமான குடும்ப உறவையும் நற்குணத்தையும் பேணுவார்கள்.

🔹 அன்சாரிச் சிறுமிகள் ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களுடன் விளையாடுவதற்காக வழி செய்வார்கள். ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) தடைசெய்யப்படாத ஏதாவது ஒன்றை விரும்பும் பொழுது அதற்கு இடமளிப்பார்கள்; உடன்படுவார்கள்.

🔹 மனைவியின் மடியில் சாய்ந்திருப்பார்கள். அந்நிலையில் குர்ஆன் ஓதுவார்கள். அம்மனைவி மாதவிடாய்க் காலத்தில் இருந்தாலும் சரியே.

🔹 மனைவிக்கு மாதவிடாய் ஏற்பட்டிருக்கும்போது இடுப்பில் ஆடையைக் கட்டிக் கொள்ளுமாறு கூறுவார்கள். பின்னர் மனைவியை அணைத்துக் கொள்வார்கள்.

🔹 நோன்பு நோற்றிக்கும் நிலையிலும் மனைவியை முத்தமிடுவார்கள்.

🔹 தமது மனைவிக்கு விளையாடுவதற்கு இடமளிப்பது அவர்களின் நற்குணத்திற்கும் மென்மைக்கும் எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. பிரயாணத்தில் இரு முறைகள் தமது மனைவியுடன் போட்டிக்காக ஓட்டத்தில் ஈடுபட்டார்கள். இருவரும் ஒரு முறை வீட்டில் இருந்து வெளியேறும் போது விளையாட்டுக்காகத் தள்ளிக்கொண்டார்கள்.

🔹 பிரயாணம் செய்தால் இரவில் மனைவியிடம் திரும்பிவரமாட்டார்கள். அவ்வாறு செய்வதைத் தடுத்தும் இருக்கின்றார்கள்.[46]

---

[44] [📚நஸாஈ 3940, அஹ்மத் 12293, அல்பானி, வாதிஈ: ஸஹீஹ்]

[45] [📚புகாரி 2593]

[46] [குறிப்பு: திடீர் என்று வரும் போது சில வேளை மனைவி தன்னைக் கனவனுக்காகச் சுத்தம்செய்து தயார் நிலையில் வைத்திருக்கமாட்டாள் என்பது இத்தடைக்குக் காரணமாகும்.]

## 💎 தூங்குவதிலும் விழித்தெழுவதிலும் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை

🔹 நபி (ﷺ) அவர்கள் உறங்குவதற்காக தமது படுக்கைக்குச் சென்றால், 'அள்ளாஹும்ம பிஸ்மிக அஹ்யா வஅமூத்' (அள்ளாஹ்வே! உன் பெயரைக் கொண்டு நான் உயிர் வாழ்கிறேன் மற்றும் மரணிக்கிறேன்) என்று கூறுவார்கள்.[47]

🔹 ஒவ்வோரு இரவிலும் நபி (ﷺ) அவர்கள் தமது படுக்கைக்கு உறங்கச் சென்றால் தம் உள்ளங்கைகளை இணைத்து, அதில் 'குல் ஹுவள்ளாஹு அஹத்', 'குல் அஊது பிறப்பில் ஃபலக்', ' குல் அஊது பிறப்பின்னாஸ்' ஆகிய அத்தியாயங்களை ஓதி ஊதிக்கொள்வார்கள். பிறகு தம் இரண்டு கைகளால் தம் உடலில் இயன்ற வரையில் (அவை எட்டும் அளவுக்குத்) தடவிக் கொள்வார்கள். முதலில் தலை, முகம், தம் உடலின் முற்பகுதியில் ஆரம்பித்து கைகளால் தடவிக் கொள்வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள்.[48]

🔹 நபி (ﷺ) அவர்கள் தூங்கும் போது தமது வலக்கரத்தை வலது கன்னத்திற்குக் கீழ் வைத்துக்கொண்டு தூங்குவார்கள். பின்வரும் துஆவையும் ஓதுவார்கள்: ‘அள்ளாஹும்ம கினீ அதாபக யவ்ம த<sup>b</sup>ப்அஸு இபாதக்’ (அள்ளாஹ்வே! உனது அடியார்களை நீ எழுப்புகின்ற நாளில் உனது வேதனையை விட்டும் என்னைக் காப்பாற்றுவாயாக!)[49]

🔹 தூக்கத்தில் இருந்து எழுந்ததும் பின்வரும் துஆவை ஓதுவார்கள் 'அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃதமா அமாதனா வஇலைஹிந் நுஷூர்' (எல்லாப் புகழும் அள்ளாஹ்வுக்கே. அவன் எங்களை இறக்கச் செய்த பின்னர் எங்களுக்கு உயிரூட்டினான். மேலும் (மண்ணறையிலிருந்து வெளியேறி) அவனிடமே செல்ல வேண்டியுள்ளது)[50]

🔹 பின்னர் பல் துலக்குவார்கள்.[51]

🔹 இரவின் ஆரம்பப் பகுதியில் உறங்குவார்கள். இறுதிப் பகுதியில் எழுந்து தொழுவார்கள். ஆரம்ப இரவிலும் சில வேளை முஸ்லிம்களின் நலன்களைக் கவனிப்பதற்காக விழித்திருப்பார்கள்.[52]

🔹 அவர்களின் கண்கள் தான் உறங்கும்; உள்ளம் உறங்குவதில்லை.[53]

🔹 அவர்கள் உறங்கினால் அவர்களாகவே எழும்பும் வரையில் எவரும் அவர்களை எழுப்பமாட்டார்கள்.[54]

🔹 அவர்கள் உறங்கும் காலஅளவு மிக நேர்த்தியான அளவாக இருந்தது. அதுவே மிகவும் பயனுள்ள உறக்கமாகும்.

---

47 [📚 புகாரி 7394] اللَّهُمَّ بِاسْمِكَ أَحْيَا وَأَمُوْتُ
48 [📚 புகாரி 5017]
49 [📚 திர்மிதி 3399, அல்பானி, வாதிஈ: ஸஹீஹ்] اَللَّهُمَّ قِنِي عَذَابَكَ يَوْمَ تَبْعَثُ عِبَادَكَ
50 [📚 புகாரி 7394] الْحَمْدُ لِلَّهِ الَّذِي أَحْيَانَا بَعْدَمَا أَمَاتَنَا وَإِلَيْهِ النُّشُورُ
51 [📚 புகாரி 245]
52 [📚 புகாரி 1147]
53 [📚 புகாரி 1147]
54 [📚 புகாரி 344]

## 💎 சமூகம் சார்ந்த நடத்தையில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை

🔹 நபி (ﷺ) அவர்கள் நகைச்சுவையாகப் பேசியுள்ளார்கள். அதிலும் உண்மையே பேசுவார்கள்.

🔹 நபி (ﷺ) அவர்கள் சில சந்தர்ப்பங்களில் நலன் கருதி இரு அர்த்தம் தரும் வார்த்தைகளைப் பயன்படுத்தி, மறைமுக அர்த்தத்தை நாடியுள்ளார்கள். அதிலும் கூட அவர்கள் பொய்யுரைக்கவில்லை.

🔹 நபி (ﷺ) அவர்கள் ஆலோசனை கூறுபவர்களாகவும் ஆலோசனை கேட்பவர்களாகவும் இருந்துள்ளார்கள்.

🔹 நபி (ﷺ) அவர்கள் நோயாளியை நோய் விசாரிக்கச் செல்வார்கள். ஜனாஸஹ்வில் கலந்து கொள்வார்கள். விருந்திற்கு அழைக்கப்பட்டால் சமுகமளிப்பார்கள். விதவை, ஏழை, பலவீனமானவர் போன்றவர்களுடன் சென்று அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்து கொடுப்பார்கள்.

🔹 நபி (ﷺ) அவர்கள் புகழ்பாடும் கவிகளைக் கேட்டு, அவற்றிற்கு சன்மானம் வழங்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு இருக்கும் புகழ்ச்சிகளில் சிறிய ஒரு பகுதியே கூறப்பட்டுள்ளது. பொதுவாக ஏனையவர்களைப் பற்றிக் கூறப்படும் புகழ்ச்சிகளில் பெரும்பாலானவை பொய்யானவையாகவே இருக்கும்.

🔹 நபி (ﷺ) அவர்கள் தமது செருப்பை தம் கையாலேயே தைத்திருக்கிறார்கள். தம் ஆடையில் தம் கையாலேயே ஒட்டுத்தையல் போட்டிருக்கிறார்கள். தமது வாளியை தாமே ஒட்டுப்போட்டிருக்கிறார்கள். தமது ஆட்டில் தாமே பால் கறந்து இருக்கிறார்கள். தமது ஆடையில் இருந்து தாமே அழுக்கு நீக்கியிருக்கிறார்கள். தமக்கும் தம் குடும்பத்திற்கும் பணி செய்திருக்கிறார்கள். மஸ்ஜித் கட்டப்படும் போது தாமும் மக்களுடன் கற்களைச் சுமந்து சென்றிருக்கிறார்கள்.

🔹 நபி (ﷺ) அவர்கள் சிலவேளை பசியின் காரணமாக தமது வயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டிருந்திருக்கிறார்கள். சில வேளை வயிறாரச் சாப்பிட்டும் இருக்கிறார்கள்.

🔹 நபி (ﷺ) அவர்கள் விருந்து அளித்திருக்கிறார்கள். அவர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டும் இருக்கிறது.

🔹 நபி (ﷺ) அவர்கள் தமது உச்சந்தலையிலும், பாதத்திற்கு மேலாலும், பிடரியிலும், பிடரி மேலிருக்கும் இரு நரம்புகளிலும் ஹிஜாமஹ் எனும் இரத்தம் குத்தி எடுக்கும் சிகிச்சை செய்துள்ளார்கள்.

🔹 நபி (ﷺ) அவர்கள் சிகிச்சை எடுத்திருக்கிறார்கள். சூடு போடும் சிகிச்சையை மற்றவர்களுக்கு செய்திருக்கிறார்கள். தமக்குச் சூடு போட்டுக் கொண்டதில்லை. ஓதிப் பார்த்திருக்கிறார்கள்.[55] தமக்கு ஓதிப்பார்க்குமாறு எவரிடமும் கேட்டதில்லை. நோயாளிக்குப் பத்தியம் பேண வைத்திருக்கிறார்கள்.

🔹 நபி (ﷺ) அவர்கள் கொடுக்கல்-வாங்கலில் மிகச் சிறந்த முறையில் நடந்து கொள்பவர்களாக இருந்தார்கள். பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்கும்போது பெற்றதை விட அதிகமாக / சிறந்த முறையில் திருப்பிக் கொடுப்பார்கள்.

## 💎 நடையில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை

📌 மனிதர்களிலே நபி (ﷺ) அவர்களின் நடை வேகமாகவும் அழகாகவும் அமைதியாகவும் இருந்தது.
📌 நபி (ﷺ) அவர்கள் தமது தோழர்களை விட விரைவாக நடப்பார்கள். அவர்கள் நபி (ﷺ) அவர்களை அடைந்து கொள்வது சிரமமாக இருக்கும்.
📌 நபி (ﷺ) அவர்கள் செருப்பு அணிந்தவர்களாக நடப்பார்கள். சில வேளை செருப்பு அணியாதவர்களாகவும் நடப்பார்கள்.
📌 பொதுவாக நபித்தோழர்கள், நபி (ﷺ) அவர்களுக்கு முன்னால் நடப்பார்கள். நபி (ﷺ) அவர்கள் பின்னால் செல்வார்கள்.
📌 நபி (ﷺ) அவர்கள் ஒரு நபித்தோழரோடும், நபித்தோழர் கூட்டத்தோடும் நடந்துசென்றுள்ளார்கள்.

## 💎 திக்ரில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை

📌 மனிதர்களிலேயே நபி (ﷺ) அவர்கள் அள்ளாஹ்வை நினைவு கூர்வதில் பூரணமானவர்களாக இருந்தார்கள். அவர்களின் பேச்சே அள்ளாஹ்வை நினைவு கூர்வதும் அதையொட்டியதாகவும் இருந்தது.
📌 நபி (ﷺ) அவர்கள் உறக்கத்திலிருந்து கண் விழிக்கும் போதும், தொழுகையை ஆரம்பிக்கும் போதும், வீட்டிலிருந்து வெளியேறும் போதும், மஸ்ஜிதில் நுழையும் போதும், காலை, மாலை நேரங்களிலும், ஆடை அணிகின்ற போதும், வீட்டுக்குள் நுழையும் போதும், மலஜலம் கழிக்கச் செல்லும் போதும், வுளூ செய்வதற்கு முன்னாலும், அதற்குப் பிறகும், அதானைச் செவிமடுக்கும் போதும், உணவு உண்ண முன்னாலும், உணவு உண்ட பிறகும், தும்மலின் போதும்... அள்ளாஹ்வை சதாவும் நினைவு கூர்கின்றவர்களாக இருந்தார்கள்.

---

[55] [றுக்யஹ் எனும் நிவாரணம் பெறுவதற்கு ஓதுதல்]

💎 **இயற்கை மரபு (ஸுன்னஹ்)களும் அவற்றை ஒட்டிய ஸுன்னஹ்களும்**

📌 ***இயற்கை மரபு (ஸுன்னஹ்)கள்:***

🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: பத்து இயற்கை மரபு (ஸுன்னஹ்)களாவன:

1️⃣ மீசையைக் கத்தரித்தல்
2️⃣ தாடியை வளர்வதற்கு விட்டு விடுதல்
3️⃣ பல் துலக்குதல்
4️⃣ மூக்கினுள் தண்ணீர் செலுத்திக் கழுவுதல்
5️⃣ நகங்களை வெட்டுதல்
6️⃣ விரல்களின் மூட்டுக்களைக் கழுவுதல்
7️⃣ அக்குள் முடியைப் பிடுங்குதல்
8️⃣ மர்மஸ்தான முடியை மழித்தல்
9️⃣ (மலசலம் கழித்துவிட்டு) தண்ணீரால் சுத்தம் செய்தல்.
🔟 பத்தாவதை அறிவிப்பாளர் மறந்து விட்டார்.[56]

📌 ***வலது பக்கத்தை முற்படுத்தல்:***

நபி (ﷺ) அவர்கள் செருப்பு அணிவதிலும், தலைமுடி சீவுவதிலும், சுத்தம் செய்வதிலும், கொடுப்பதிலும், வாங்குவதிலும் வலது பக்கத்தை முற்படுத்துவதை விரும்புவார்கள். தமது வலக்கரத்தை உண்ணுவதற்கும், பருகுவதற்கும், வுளூ செய்வதற்கும் பயன்படுத்துவார்கள். தமது இடக்கரத்தை இயற்கைத் தேவைகளை நிறைவேற்றுதல், அழுக்குகளை நீக்குதல் போன்ற விடயங்களுக்குப் பயன்படுத்துவார்கள்.

📌 ***தலை முடி மழித்தல்:***

தலைமுடியை மழிப்பதில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை யாதெனில் தலையை முழுமையாக மழிப்பார்கள். அல்லது முழுமையாக விட்டுவிடுவார்கள்.[57]

📌 ***பல் துலக்குதல்:***

நபி (ﷺ) அவர்கள் பல் துலக்குவதை விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள். நோன்பு நோற்ற நிலையிலும் நோற்காத நிலையிலும் பல் துலக்குவார்கள். நபி (ﷺ) அவர்கள் தூக்கத்திலிருந்து விழிக்கின்ற போதும் வுளூச் செய்கின்ற போதும் தொழுகைக்கு முன்னாலும் வீட்டிற்குள் நுழைகின்ற போதும் பல் துலக்குபவர்களாக இருந்தார்கள். அறாக் (உகாய்) குச்சியால் பல் துலக்குபவர்களாக இருந்தார்கள்.

---

[56] [📚 முஸ்லிம் 261]

[57] [நபி (ﷺ) அவர்கள் தலையின் ஒரு பகுதியை விட்டுவிட்டு இன்னொரு பகுதியை மழித்துக்கொள்வதைத் தடை செய்துள்ளார்கள். 📚 புகாரி 5920, முஸ்லிம் 2120, அபூதாவூத் 4195]

📌 ***வாசனைத் திரவியம் பூசுதல்:***
நபி (ﷺ) அவர்கள் அதிகமாக வாசனைத் திரவியத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள். வாசனைத் திரவியத்தை விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள்.

📌 ***மீசையும், தாடியும்:***
நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: இணைவைப்பாளர்களுக்கு மாறுசெய்யுங்கள்: தாடிகளை வளரவிடுங்கள். மீசையை ஒட்ட நறுக்குங்கள் (கத்தரியுங்கள்).[58]

📌 ***மேற்படி விடயங்களுக்கான காலக்கெடுவு:***
அனஸ் (றளியள்ளாஹு அன்ஹு) கூறினார்கள்: மீசையைக் கத்தரித்தல், நகங்களை வெட்டுதல், அக்குள் முடியைப் பிடுங்குதல், மர்மஸ்தான முடியை மழித்தல் ஆகிய விடயங்களில் நபி (ﷺ) அவர்கள் எங்களுக்கு அவற்றை நாற்பது இரவுகளை விட அதிகமாக விட்டுவைக்கக்கூடாது என்று காலக்கெடுவு வழங்கினார்கள்.[59]

## 💎 பேச்சு, சிரிப்பு, அழுகை, சொற்பொழிவு என்பவற்றில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை

📌 ***நபி (ﷺ) அவர்களது பேச்சு:***
🔹 ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) கூறினார்கள்: நீங்கள் ஹதீஸ்களை ஒன்றன் பின் ஒன்றாக, வேகவேகமாக அறிவிப்பதைப் போல் அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் அவசரமாக அறிவித்ததில்லை'[60]
🔹 தமது பேச்சை மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அதிகமான நேரங்களில் மூன்று முறை திரும்பத் திரும்பச் சொல்லுவார்கள். ஸலாம் கூறினால் மூன்று முறை கூறுவார்கள்.
🔹 தேவையில்லாமல் பேசமாட்டார்கள். அதிகமான அர்த்தங்களைக் குறைவான சொற்களில் பேசுவார்கள்.
🔹 தமக்கு அவசியமில்லாததைப் பேசமாட்டார்கள். நற்கூலியை எதிர்பார்த்தே தவிர பேசமாட்டார்கள்.
🔹 நபி (ﷺ) அவர்கள் இயல்பாகவோ, செயற்கையாகவோ கெட்டவார்த்தை பேசுபவர்களாகவோ, வீண் கூச்சலிட்டுச் சர்ச்சை செய்பவர்களாகவோ இருக்கவில்லை.[61]

---

[58] [📚புகாரி 5892]
[59] [📚முஸ்லிம் 258]
[60] [📚புகாரி 3568] ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) கூறினார்கள்: நபி (ﷺ) அவர்கள் ஒரு விஷயத்தைப் பேசுகிறார்கள், அதை (சொல் சொல்லாகக் கணக்கிட்டு) எண்ணக்கூடிய ஒருவர் எண்ணினால், ஒன்றுவிடாமல் எண்ணிவிடுவார். (அந்த அளவு நிறுத்தி நிதானமாக, தெளிவாகப் பேசுவார்கள்.) [📚புகாரி 3567]
[61] [📚புகாரி 3559, திர்மிதி 2016]

### 📌 *நபி (ﷺ) அவர்களின் சிரிப்பு:*

🔹 நபி (ﷺ) அவர்களின் சிரிப்புகள் அனைத்தும் புன்முறுவலாகவே இருந்தது. அவர்களின் சிரிப்பின் உச்சகட்டம் அவர்களது கடைவாய்ப் பற்கள் தென்படுவதேயாகும்.

### 📌 *நபி (ﷺ) அவர்களின் அழுகை:*

🔹 மூச்சை சுவாசப் பைக்குள் உள்வாங்கி சப்தத்தை உயர்த்தி அழமாட்டார்கள். எனினும் அவர்களின் கண்கள் அதிகமாக கண்ணீரைச் சொரியும். அதனால் அடுப்பில் வைக்கப்பட்ட பாத்திரம் கொதிக்கும் போது ஏற்படும் சப்தத்தைப் போன்ற சப்தம் அவர்களின் நெஞ்சிலிருந்து வெளிப்படும்.

🔹 மரணித்த ஒருவர் மீது கொண்ட பாசத்தின் காரணமாக அல்லது தனது உம்மத்தின் மீது அச்சப்பட்டு, கருணையால் அல்லது அள்ளாஹ்வின் பயத்தால் அல்லது குர்ஆனைச் செவிமடுக்கும் போது எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அழுதிருக்கிறார்கள்.

### 📌 *நபி (ﷺ) அவர்களின் சொற்பொழிவு:*

🔹 நிலத்தில் நின்றும் மிம்பர் மேடையின் மீது நின்றும் ஒட்டகத்தின் மீது இருந்தும் உரை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

🔹 ஜாபிர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் உரை நிகழ்த்துகின்ற போது அவர்களின் கண்கள் சிவந்துவிடும், சப்தம் உயர்ந்துவிடும், கோபம் அதிகரித்துவிடும்; ஒரு படையை எச்சரிப்பவரைப் போல இருப்பார்கள்.[62]

🔹 நபி (ﷺ) அவர்கள் எந்த உரையையும் அள்ளாஹ்வைப் புகழ்ந்தே ஆரம்பம் செய்வார்கள்.

🔹 உரை நிகழ்த்தப்படும் மக்களின் தேவைக்கும் நலனுக்கும் ஏற்பவே நபி (ﷺ) அவர்களின் அனைத்து உரைகளும் அமைந்திருக்கும்.[63]

---

[62] [📚 முஸ்லிம் 867]

[63] [மேலதிக தகவலுக்குப் பார்க்க: 📚 ஸாதுல் மாஆத்]

## ● நபி (ﷺ) அவர்களின் தனித்துவங்கள்:

● خَصائِص النبي (ﷺ)

💎 **நபி (ﷺ) அவர்கள் "ஹனீஃபிய்யஹ்" மற்றும் "ஸம்ஹஹ்" ஆகிய கொள்கைகளைக் கொண்டு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்:**[64]
("ஹனீஃபிய்யஹ்" என்பது அனைத்திலும் ஏகத்துவம் சார்ந்தது, "ஸம்ஹஹ்" என்பது விட்டுக்கொடுத்தல், தாராளத் தன்மை, இலகுத்தன்மை போன்ற அர்த்தங்களைக் கொடுக்கும்)

🔹 இமாம் இப்னுல் கைய்யிம் (றஹிமஹுல்லாஹ்) கூறினார்: இந்த மார்க்கம் "ஹனீஃபிய்யஹ்" என்ற கொள்கையைக் கொண்டிருக்கின்ற அதேநேரம் "ஸம்ஹஹ்" என்ற கொள்கையையும் கொண்டிருக்கிறது. அது ஏகத்துவத்தில் "ஹனீஃபிய்யஹ்" ஆகவும் செயல்பாட்டில் "ஸம்ஹஹ்" ஆகவும் இருக்கிறது. இவ்விரண்டிற்கும் எதிராக இருக்கின்றவை: இணைவைத்தலும் ஹலாலை (ஆகுமாக்கப்பட்டதை) ஹறாமாக்குவதுமாகும்.[65]

💎 **நபி (ﷺ) அவர்கள் அனைத்து மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் தூதராக அனுப்பப்பட்டுள்ளார்கள்:**[66]
🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு நபியும் தங்களின் சமூகத்திற்கு மட்டுமே நபியாக அனுப்பப்பட்டார்கள். ஆனால், நானோ மனிதர்கள் அனைவருக்கும் நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்.[67]

💎 **நபி (ﷺ) அவர்களுக்கு வழங்கப்பட்ட வேதமும் அவர்களின் பிரச்சாரமும்:**
🔹 {அலிஃப், லாம், றா. (நபியே! இது) வேதமாகும்; மனிதர்களை அவர்களுடைய இரட்சகனின் அனுமதியைக் கொண்டு இருள்களிலிருந்து வெளியேற்றி வெளிச்சத்தின் பக்கம் நீர் கொண்டுவருவதற்காக; அதாவது புகழுக்குரியவனும், வல்லமை மிக்கோனுமாகிய (அல்லாஹ்வின்) பாதையின் பக்கம் அவர்களை நீர் கொண்டுவருவதற்காக இ(வ் வேதத்)தை நாமே உம்மீது இறக்கியிருக்கின்றோம்.} (அல்குர்ஆன் 14:1)

---

[64] [பார்க்க: 📚ஸஹீஹஹ் 2924]
[65] [பார்க்க: 📚இகாஸதுல் லஹ்பான் 1/157]
[66] [🔹 நபி (ﷺ) அவர்களின் தூதுத்துவம் ஜின்களுக்கும் மனிதர்களுக்கும் பொதுவானது என்பதில் முஸ்லிம்களுக்கு மத்தியில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. ஸூறதுர் றஹ்மான், ஸூறதுல் ஜின் ஆகியனவும் இதற்கு ஆதாரங்களாக உள்ளன.]
[67] [📚புகாரி 335]

💎 **நபி (ﷺ) அவர்களுக்கு வழங்கப்பட்ட அத்தாட்சிகள்:**

🔹 அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அத்தாட்சிகளில் மிகப்பெரியது அல்குர்ஆனாகும். அவர்களுக்கு முன் வாழ்ந்த ஒவ்வொரு றஸூலுக்கும் அல்லது நபிக்கும் கொடுக்கப்பட்ட அத்தாட்சிகளைப் போன்ற அல்லது அதைவிடப் பலமான அத்தாட்சிகள் நபி (ﷺ) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன.

💎 **நபி (ﷺ) அவர்களை நேசிப்பது மார்க்கத்தில் முக்கிய அம்சமாகும்:**

🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவருக்கு தனது பிள்ளை, தனது பெற்றோர், ஏனைய மனிதர்கள் அனைவரையும் விட நான் நேசத்திற்குரியவராக இருக்கும் வரையில் அவர் (உண்மையான) முஃமினாகமாட்டார்".[68]

💎 **நபி (ﷺ) அவர்களை வெறுப்பவனுக்குரிய தீர்ப்பு:**

🔹 அத்தகையவன் பெரும் குப்ரைச் செய்யும் காஃபிராவான். அல்லாஹ் கூறுகிறான்: {(நபியே!) நிச்சயமாக உம்மை வெறுப்பவனே (அனைத்து நலவுகளிலிருந்தும்) துண்டிக்கப்பட்டவனாவான்.} (அல்குர்ஆன் 108:3)

💎 **நபி (ﷺ) அவர்கள் அல்லாஹ்வின் கலீல் - உற்ற நண்பராவார்கள்:**

🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "நிச்சயமாக அல்லாஹ் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை உற்ற நண்பராக எடுத்துக் கொண்டதைப் போன்று என்னையும் உற்ற நண்பராக எடுத்துக்கொண்டான்".[69]

💎 **நபி (ﷺ) அவர்கள் உலுல் அ(z)ஸ்ம் எனும் உறுதிமிக்க றஸூல்மார்களில் ஒருவராவார்கள்:**

🔹 அல்லாஹ் கூறுகிறான்: {மேலும், நபிமார்களிடமிருந்தும் (குறிப்பாக) உம்மிடமிருந்தும், நூஹிடமிருந்தும் இன்னும், இப்றாஹீம், மூஸா, மர்யமுடைய மகன் ஈஸா ஆகியோரிடமிருந்தும் அவர்களின் உறுதிமொழியை நாம் எடுத்தோம் (என்பதை இவர்களுக்கு நினைவுபடுத்துவீராக!). அவர்களிடமிருந்து மிக்க உறுதியான உறுதிமொழியையே நாம் எடுத்தோம்.} (அல்குர்ஆன் 33:7)

---

[68] [📚 புகாரி 15, முஸ்லிம் 44]
[69] [📚 முஸ்லிம் 532]

### 💎 நபி (ﷺ) அவர்களின் அறிவு:

🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: “உங்களில் (அள்ளாஹ்வை) மிகவும் அஞ்சக்கூடியவரும் அள்ளாஹ்வைப் பற்றி மிகவும் அறிந்தவரும் நானே”.[70]

🔹 {(நபியே!) நீர் கூறும்: “என்னிடத்தில் அள்ளாஹ்வின் பொக்கிஷங்கள் இருக்கின்றன என்று நான் உங்களிடம் கூறவில்லை. மறைவானவற்றை நான் அறியமாட்டேன்; நிச்சயமாக நான் ஒரு மலக்காக இருக்கின்றேன் என்றும் நான் உங்களிடம் சொல்லவில்லை...} (அல்குர்ஆன் 6:50)

### 💎 நபி (ﷺ) அவர்களுக்கு மாறுசெய்பவருக்கும் மற்றும் அவர்களுக்கு வழிப்படுபவருக்குமுரிய தீர்ப்புகள்:

🔹 {(நபியே! மனிதர்களிடம்,) நீர் கூறுவீராக: நீங்கள் அள்ளாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், என்னை நீங்கள் பின்பற்றுங்கள்; (அவ்வாறு நீங்கள் செய்தால்) உங்களை அள்ளாஹ் நேசிப்பான்; உங்கள் பாவங்களையும் உங்களுக்காக அவன் மன்னித்துவிடுவான்; அள்ளாஹ் மிக்க மன்னிப்பவன், மிக்க கிருபையுடையவன்.} (அல்குர்ஆன் 3:31)

🔹 {(விசுவாசங்கொண்டோரே!) நீங்கள் தைரியத்தை இழந்துவிட வேண்டாம், கவலையும் பட வேண்டாம், (உண்மையாகவே) நீங்கள் விசுவாசங் கொண்டவர்களாக இருந்தால், நீங்கள் தாம் மிக்க மேலானவர்கள்.} (அல்குர்ஆன் 3:139)

🔹 (ஒரு முறை) அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், 'என் சமுதாயத்தார் அனைவரும் சொர்க்கம் செல்வார்கள்; மறுத்தவரைத் தவிர (அதாவது அதனை விரும்பாதவரைத் தவிர)' என்று கூறினார்கள். மக்கள், 'அள்ளாஹ்வின் தூதர் அவர்களே! யார் மறுப்பார் (அதனை விரும்பமாட்டார்!)?' என்று கேட்டார்கள். நபி (ﷺ) அவர்கள், 'எனக்குக் கீழ்ப்படிந்தவர் சொர்க்கம் புகுவார்; எனக்கு மாறு செய்தவர் மறுத்தவராவார்' என்று பதிலளித்தார்கள்.[71]

🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: “என்னுடைய கட்டளைக்கு மாறுசெய்தவருக்கு இழிவும் சிறுமையும் ஏற்படுத்தப்பட்டுவிட்டது”.[72]

---

[70] [📚 புகாரி 20]
[71] [📚 புகாரி 7280]
[72] [📚 புகாரியில் முஅல்லக், அஹ்மத் 5667, அல்பானி: ஹஸன்]

### 💎 நபி (ﷺ) அவர்களின் உம்மத் - சமுதாயம்:

🔹 {(விசுவாசிகளே!) மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட (சமுதாயத்தார்களிலெல்லாம்) மிகச் சிறந்த சமுதாயமாக நீங்கள் இருக்கிறீர்கள், (ஏனெனில்) நன்மையான காரியங்களை நீங்கள் ஏவுகிறீர்கள், தீமையை விட்டும் (அவர்களை) நீங்கள் விலக்குகிறீர்கள், மேலும், நீங்கள் அள்ளாஹ்வை விசுவாசிக்கின்றீர்கள்} (அல்குர்ஆன் 3:110)

🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "...என் உயிர் எவன் கையிலுள்ளதோ அவன் மீதாணையாக! நீங்கள் சொர்க்கவாசிகளில் பாதிப்பேராக இருக்கவேண்டுமென நான் பேராவல் கொள்கிறேன்..."[73]

### 💎 நபி (ﷺ) அவர்களின் ஊர்:

🔹 அவர்களின் ஊர் "மக்கஹ்" ஆகும்.

{(இவ்வுலகில், அள்ளாஹ்வை வணங்குவதற்கென) மனிதர்களுக்காக (உருவாக்கி) வைக்கப்பட்ட முதல் வீடு நிச்சயமாக பக்கஹ் (எனும் மக்கஹ்)வில் இருப்பது தான். அது பறகத் செய்யப்பட்டதாகவும், அகிலத்தாருக்கு நேர்வழியாகவும் இருக்கின்றது.

அதில் தெளிவான அத்தாட்சிகளும், இப்றாஹீம் நின்ற இட(மான 'மகாமு இப்றாஹீ')மும் இருக்கின்றது, மேலும் எவர் அதில் நுழைகின்றாரோ அவர், (அபயம் பெற்று) அச்சமற்றவராகி விடுகின்றார். (ஆகவே) எவர்கள் அங்கு யாத்திரை செல்லச் சக்தியுடையவர்களாக இருக்கின்றார்களோ, அத்தகைய மனிதர்கள் மீது அள்ளாஹ்வுக்காக (அங்கு சென்று அவ்)வீட்டை ஹஜ்ஜு செய்வது கடமையாகும். எவரேனும் (இதை) நிராகரித்தால் அப்போது (அதனால் அள்ளாஹ்வுக்கு ஒன்றும் குறைந்து விடுவதில்லை ஏனென்றால்,) நிச்சயமாக அள்ளாஹ் அகிலத்தார் அனைவரை விட்டும் தேவையற்றவன்.} (அல்குர்ஆன் 3:96,97)

🔹 மக்கஹ் புனிதம் மிக்க ஊராகும்.

அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "வானங்களையும் பூமியையும் படைத்த நாள் முதலாய் இந்த நகரத்தை அள்ளாஹ் புனிதமாக்கியுள்ளான். அது அள்ளாஹ் புனிதமாக்கியதைக் கொண்டு மறுமை நாள் வரை புனிதமானதாகவே இருக்கும்".[74]

🔹 மறுமை நாள் வரையில் அது முஸ்லிம்களுக்குரிய ஊராகும்.

நபி(ﷺ) அவர்கள் மக்கஹ் வெற்றி கொள்ளப்பட்ட நாளில் கூறினார்கள்: "(மக்கஹ்வின்) வெற்றிக்குப் பின்பு (மக்கஹ்விலிருந்து) ஹிஜ்றஹ் என்பது கிடையாது".[75]

---

[73] [📚 புகாரி 6530]
[74] [📚 புகாரி 3189]
[75] [📚 புகாரி 2825]

💎 **நபி (ﷺ) அவர்களின் கிப்லஹ்:**

🔹 நபி (ﷺ) அவர்களின் தொழும் திசை மக்கஹ்வை நோக்கி அமைந்துள்ளது. ஆரம்பத்தில் அது பைதுல் மக்திஸை நோக்கி இருந்தது.

{(நபியே!) நாம் உம் முகம் அடிக்கடி வானத்தை நோக்குவதைக் காண்கிறோம்; எனவே நீர் விரும்பும் கிப்லஹ்வின் பக்கம் உம்மைத் திடமாகத் திருப்பிவிடுகிறோம்; ஆகவே நீர் இப்பொழுது (மக்கஹ்வின்) மஸ்ஜிதுல் ஹறாம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்வீராக. (முஸ்லிம்களே!) இன்னும் நீங்கள் எங்கிருந்தாலும் (தொழுகையின் போது) உங்கள் முகங்களை அந்த (கிப்லஹ்வின்) பக்கமே திருப்பிக் கொள்ளுங்கள்.} (அல்குர்ஆன் 2:144)

🔹 மஸ்ஜிதுல் ஹறாமே பூமியில் முதலாவது உருவாக்கப்பட்ட மஸ்ஜிதாகும்.

அபூதர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: பூமியில் முதலாவது உருவாக்கப்பட்ட மஸ்ஜித் எது என நபி (ﷺ) அவர்களிடத்தில் வினவினேன். அதற்கு அவர்கள் "மஸ்ஜிதுல் ஹறாம்" என்று பதிலளித்தார்கள்.[76]

🔹 அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "மனைவியுடன் உடலுறவு கொள்ளாமல், எந்தப் பாவமும் செய்யாமல், இந்த ஆலயத்தை ஹஜ் செய்கிறவர் அன்று பிறந்த குழந்தை போல் திரும்புகிறார்".[77]

🔹 அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "என்னுடைய மஸ்ஜிதில் தொழும் ஒரு தொழுகை, மஸ்ஜிதுல் ஹறாமைத் தவிர்ந்த ஏனைய பள்ளிகளில் தொழும் ஆயிரம் தொழுகைகளைவிடச் சிறந்ததாகும். மஸ்ஜிதுல் ஹறாமில் தொழும் ஒரு தொழுகை ஏனைய மஸ்ஜிதுகளில் தொழும் ஒரு இலட்சம் தொழுகைகளை விடச் சிறந்ததாகும்".[78]

🔹 நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "மஸ்ஜிதுல் ஹறாம், என்னுடைய மஸ்ஜித், மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மூன்று மஸ்ஜித்களைத் தவிர (வேறு இடங்களுக்கு அவ்விடங்களின் புனிதத்துவம் கருதி)ப் பயணம் செய்யக் கூடாது!"[79]

🔹 அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் மலம் கழிக்கச் சென்றால் கிப்லஹ்வை முன்பக்கமாகவோ, பின்பக்கமாகவோ ஆக்கி உட்காராதீர்கள். கிழக்குத் திசையையோ மேற்குத் திசையையோ முன்னோக்குங்கள்".[80]

---

[76] [📚 முஸ்லிம் 520]
[77] [📚 புகாரி 1819]
[78] [📚 அஹ்மத் 15271, அல்பானி, வாதிஈ: ஸஹீஹ்]
[79] [📚 புகாரி 1864]
[80] [📚 புகாரி 394]

## 🟢 நபி (ﷺ) அவர்களின் உறவினர்களும் மனைவியரும்:

🟢 قرابة النبي (ﷺ) وأزواجه

### 💎 நபி (ﷺ) அவர்களின் பிள்ளைகள்:

அவர்கள் ஏழு பேராவர். அவர்கள் மூன்று ஆண்களும் நான்கு பெண்களுமாவர்.

1️⃣ காஸிம்: இப்பிள்ளையின் பெயரின் காரணமாகத்தான் நபி (ﷺ) அவர்களுக்கு அபுல் காஸிம் (காஸிமின் தந்தை) என்ற குறிப்புப் பெயரும் இருக்கின்றது.

2️⃣ ஸைனப் (றளியள்ளாஹு அன்ஹா)

3️⃣ றுகையஹ் (றளியள்ளாஹு அன்ஹா)

4️⃣ உம்முகுல்ஸூம் (றளியள்ளாஹு அன்ஹா)

5️⃣ ஃபாதிமஹ் (றளியள்ளாஹு அன்ஹா)

6️⃣ அப்துள்ளாஹ்: இவருக்கு தைய்யிப், தாஹிர் ஆகிய சிறப்புப் பெயர்களும் உள்ளன.

7️⃣ இப்றாஹீம்: இவரின் தாயார் நபி (ﷺ) அவர்களின் ஸுர்ரிய்யஹ் (அடிமைப் பெண்) ஆக இருந்த மாரியதுல் கிப்திய்யஹ் (றளியள்ளாஹு அன்ஹா) ஆவார்கள். ஏனைய பிள்ளைகள் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) மூலமாக பிறந்தவர்கள். வேறெந்த மனைவியர் மூலமாகவும் நபி (ﷺ) அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை.

📌 ஃபாதிமஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களைத் தவிர நபி (ﷺ) அவர்களின் அனைத்துப் பிள்ளைகளும் அவர்களுக்கு முன்னரே மரணமடைந்துவிட்டனர். நபி (ﷺ) அவர்கள் மரணித்து ஆறு மாதங்களுக்குப் பின்னரே ஃபாதிமஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் மரணித்தார்கள். நன்மையை எதிர்பார்த்து அவர்கள் செய்த பொறுமையின் காரணமாக அள்ளாஹ் அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்தினான், இதனால் உலகத்துப் பெண்கள் அனைவரை விடவும் சிறப்பிக்கப்பட்டார்கள். பொதுவாக ஃபாதிமஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் தான் நபி (ﷺ) அவர்களின் பெண் பிள்ளைகளில் மிகச் சிறந்தவர்களாவார்கள்.

### 💎 நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரர்கள்:

அவர்கள் 11 பேர் இருந்தனர்.

1- *ஷுஹதாக்களின் தலைவர் ஹம்ஸஹ்* (றளியள்ளாஹு அன்ஹு)
2- *அப்பாஸ்* (றளியள்ளாஹு அன்ஹு)
3- அபூ தாலிப் (அவரது பெயர்: அப்து மனாஃப்)
4- அபூ லஹப் (அவனது பெயர்: அப்துல் உஸ்ஸா)
5- ஸுபைர்
6- அப்துல் கஃபஹ்
7- முகவ்விம்
8- ளிறார்
9- குஸம்
10- முகீறஹ் (இவரது பெயர்: ஹஜல்)
11- கய்தாக் (இவரது பெயர்: முஸ்அப்)

### 📌 *நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரர்களில் இஸ்லாத்தை ஏற்றவர்கள்:*

அவர்களில் ஹம்ஸஹ் (றளியள்ளாஹு அன்ஹு), அப்பாஸ் (றளியள்ளாஹு அன்ஹு) ஆகிய இருவரையும் தவிர ஏனையவர்கள் இஸ்லாத்தை ஏற்கவில்லை.

### 💎 நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரிகள்:

அவர்கள் 6 பேர் இருந்தனர்.

1- *ஸஃபிய்யஹ்* (றளியள்ளாஹு அன்ஹா). இவர் ஸுபைர் இப்னுல் அவ்வாம் -றளியள்ளாஹு அன்ஹு- அவர்களின் தாய்.
2- உம்மு ஹகீம் - பைளாஃ
3- ஆதிகஹ்
4- பர்ரஹ்
5- அர்வா
6- உமைமஹ்

## 💎 நபி (ﷺ) அவர்களின் மனைவியர்:

அவர்கள் 11 பேர். அவர்களின் பெயர்களின் முதல் எழுத்துக்களை பின்வரும் அறபு வாக்கியத்தில் உள்ளடக்கலாம் *حَجَزَ صَخْرٌ سَمْعَهُ*

1- *ஹ:ப்ஸஹ்* - பின்து உமர் (றளியள்ளாஹு அன்ஹுமா) ↔ ح
2- *ஜுவைரியஹ்* - பின்துல் ஹாரிஸ் (றளியள்ளாஹு அன்ஹா) ↔ ج
3- *ஸைனப்* - பின்து ஜஹ்ஷ் (றளியள்ளாஹு அன்ஹா) ↔ ز
4- *ஸைனப்* - பின்து குஸைமஹ் (றளியள்ளாஹு அன்ஹா) ↔ ز
5- *ஸ:பிய்யஹ்* - பின்து ஹுயய் (றளியள்ளாஹு அன்ஹா) ↔ ص
6- *கதீஜஹ்* - பின்து குவைலித் (றளியள்ளாஹு அன்ஹா) ↔ خ
7- *உம்மு ஹபீபஹ்* - றம்லஹ் பின்து அபீ ஸு:ப்யான் (றளியள்ளாஹு அன்ஹுமா) ↔ ر
8- *ஸவ்தஹ்* - பின்து ஸம்அஹ் (றளியள்ளாஹு அன்ஹா) ↔ س
9- *மைமூனஹ்* - பின்துல் ஹாரிஸ் (றளியள்ளாஹு அன்ஹா) ↔ م
10- *ஆஇஷஹ்* - பின்து அபீ பக்ர் (றளியள்ளாஹு அன்ஹுமா) ↔ ع
11- *உம்மு ஸலமஹ்* - ஹிந்த் பின்து அபீ உமைய்யஹ் (றளியள்ளாஹு அன்ஹா) ↔ ه

## 💎 நபி (ﷺ) அவர்களின் மனைவியர் ஒவ்வொருவரையும் பற்றிய சுருக்கமான அறிமுகம்:

### *1 மு:மின்களின் தாய் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா):*

இவர்கள் நபி (ﷺ) அவர்களின் முதல் மனைவி. குறைஷிக் கோத்திரத்தின் பனூ அஸத் கிளையைச் சேர்ந்தவர்கள். நபித்துவத்திற்கு முன்னர் நபி (ﷺ) அவர்கள் அன்னையவர்களை மணந்து கொண்டார்கள். அப்போது அன்னையின் வயது 40.[81]
அன்னையவர்கள் மரணிக்கும் வரை அவர்களுடன் இணைத்து வேறு எந்தப் பெண்ணையும் நபி (ﷺ) அவர்கள் மணக்கவில்லை.
இப்றாஹீமைத் தவிர நபி (ﷺ) அவர்களின் அனைத்துப் பிள்ளைகளும் அன்னையவர்கள் மூலமாகவே பிறந்தார்கள்.
நபித்துவம் கிடைத்த போது நபி (ﷺ) அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக நின்றார்கள். அவர்களோடு சேர்ந்து போராடினார்கள். தன்னுடைய உயிராலும் பொருளாலும் தியாகத்துடன் நபி (ﷺ) அவர்களை அரவணைத்தார்கள்.
அள்ளாஹ்வே அவர்களுக்கு ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) மூலமாக ஸலாம் கூறி அனுப்பினான். இத்தனிச் சிறப்பு அவர்களைத் தவிர வேறு எந்தப் பெண்களுக்கும் கிடைக்கவில்லை.
ஹிஜ்றஹ்விற்கு 3 வருடங்களுக்கு முன்னர் அவர்கள் மரணித்துவிட்டார்கள்.

---

[81] [40 என்பது பிரபல்யமான கருத்தாக இருந்தாலும், அது பலவீனமான அறிவிப்பாகும். மேலும் 25, 28, 30, 35 போன்ற கருத்துக்களும் உள்ளன. இத்திருமணத்தின் போது அன்னை அவர்களின் வயது குறித்து அறிவிக்கப்படும் மேற்படி எந்த அறிவிப்பும் பலமான அறிவிப்பாளர் வரிசையைக் கொண்டதாக இல்லை. ஆனாலும் 25 அல்லது 28 என்பவை ஏனைய அறிவிப்புகளை விட குறைவான பலவீனத்தைக் கொண்டவையாகவும் அதிக சாத்தியமானவையாகவும் காணப்படுகின்றன.]

***2 முஃமின்களின் தாய் ஸவ்தஹ் - பின்து ஸம்அஹ் (றளியள்ளாஹு அன்ஹா):***

நபி (ﷺ) அவர்கள் அன்னை கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களின் மரணத்திற்குப் பிறகு [தம்மை விட மூத்த] ஸவ்தஹ் அவர்களைத் திருமணம் முடித்தார்கள். அவர்களின் தந்தையின் பெயர் "ஸம்அஹ்". அவர்கள் குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவர்கள். [தனக்கு வயது முதிர்ந்த போது] தன்னுடன் நபியவர்கள் தங்கும் நாளை ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்கள்.

***3 முஃமின்களின் தாய் ஆஇஷஹ் - பின்து அபீ பக்ர் (றளியள்ளாஹு அன்ஹுமா):***

நபி (ﷺ) அவர்கள், ஸவ்தஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களுக்குப் பிறகு ஆஇஷஹ் அவர்களைத் திருமணம் முடித்தார்கள். அவர்களுக்கு உம்மு அப்தில்லாஹ், ஸித்தீக்கஹ் போன்ற சிறப்புப் பெயர்களும் உள்ளன. ஏழு வானங்களுக்கு மேலாக இருந்து அள்ளாஹ்வால் அவர்கள் தூய்மைப்படுத்தப்பட்டவர்கள். நபி (ﷺ) அவர்களுக்கு மிகப் பிரியமானவர்கள். நபி (ﷺ) அவர்கள் ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களைத் திருமணம் முடிப்பதற்கு முன்னரே ஒரு வானவர் நபி (ﷺ) அவர்களின் கனவில் வந்து, ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களை ஒரு பட்டுத்துணியில் வைத்துக் காண்பித்து, இது உங்களுடைய மனைவி என்று கூறினார்கள். ஷவ்வால் மாதத்தில் அவர்களது ஆறு வயதில் அவர்களை மணந்துகொள்ள நபி (ﷺ) அவர்கள் திருமண ஒப்பந்தம் செய்தார்கள். ஹிஜ்ரி முதலாம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் அவர்களது 9 வயதில் நபி (ﷺ) அவர்கள் அவர்களுடன் குடும்பமாக வாழ ஆரம்பித்தார்கள். இவர்களைத் தவிர எந்த ஒரு கன்னிப் பெண்ணையும் நபி (ﷺ) அவர்கள் திருமணம் முடித்ததில்லை. இவர்களைத் தவிர நபி (ﷺ) அவர்கள் வேறு எந்த மனைவியுடனும் ஒரே போர்வைக்குள் இருக்கும் போதும் வஹ்ய்-இறைச்செய்தி இறங்கியதில்லை. அன்னை அவர்களை அவதூறு கூறுபவர்கள் காஃபிர்கள் என்பது முஸ்லிம் உம்மத்தின் ஏகமனதான முடிவாகும். நபி (ﷺ) அவர்களின் மனைவியர்களிலேயே மிகவும் புத்திசாலியாகவும் அறிவுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அதையும் தாண்டி இந்த உம்மத்துப் பெண்களிலேயே மிகச் சிறந்த மார்க்க அறிவுள்ளவர்களாக இருந்தார்கள். மூத்த நபித்தோழர்கள் கூட அன்னையின் கருத்தை அறிந்துகொள்ள விரும்புவார்கள். அவர்களிடத்தில் மார்க்கத் தீர்ப்புக் கேட்பார்கள்.

***4 முஃமின்களின் தாய் ஹஃப்ஸஹ் (றளியள்ளாஹு அன்ஹா):***

இவர்கள் உமர் இப்னுல் கத்தாப் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் மகளாவார். தனது முதல் கணவரான குனைஸ் இப்னு ஹுதாஃபஹ் அஸ்-ஸஹ்மீ (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களுடன் சேர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். இருவருமாக மதீனஹ்வுக்கு

ஹிஜ்றஹ் செய்தனர். கணவர் உஹுத் போருக்குப் பிறகு மரணமானார். பின்னர் நபி (ﷺ) அவர்கள் இவர்களை மணந்தார்கள்.

***5 முஃமின்களின் தாய் ஸைனப் பின்து குஸைமஹ் (றளியள்ளாஹு அன்ஹா):***

அடுத்ததாக, நபி (ﷺ) அவர்கள், குஸைமஹ் இப்னுல் ஹாரிஸ் என்பவரின் மகளான ஸைனப் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களை மணந்து கொண்டார்கள். இவர்கள் "பனூ ஹிலால் இப்னு ஆமிர்" என்ற கோத்திரத்தின் "கைஸ்" கிளையைச் சேர்ந்தவராவார். நபி (ﷺ) அவர்கள் இவர்களைத் திருமணம் முடித்து இரண்டு மாதங்களில் இவர்கள் மரணமானார்கள். உம்முல் மஸாகீன் என்ற சிறப்புப் பெயரும் இவர்களுக்குண்டு.

***6 முஃமின்களின் தாய் உம்மு ஸலமஹ் (றளியள்ளாஹு அன்ஹா):***

அடுத்தாக, நபி (ﷺ) அவர்கள் உம்மு ஸலமஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள். ஹிந்து பின்து அபீ உமைய்யஹ் என்பது இவர்களின் பெயர். இவர்கள் குறைஷிக் குலத்தின் மக்ஸூம் கிளையைச் சேர்ந்தவர்கள். இவர்களின் தந்தையான அபூ உமைய்யஹ் என்பவரின் இயற்பெயர் ஹுதைஃபஹ் இப்னுல் முகீறஹ் என்பதாகும். இவர்கள்தான் நபி (ﷺ) அவர்களின் மனைவியர்களிலேயே இறுதியாக மரணித்தவராவார்கள். ஹிஜ்ரி 62 ஆவது ஆண்டு மரணமானார்கள்.

***7 முஃமின்களின் தாய் ஜுவைரியஹ் (றளியள்ளாஹு அன்ஹா):***

இவர்கள் பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் தலைவரான அல்-ஹாரிஸ் இப்னு அபீ ளிறார் என்பவரின் மகளாவார்.[82] அக்கூட்டத்தோடு நடந்த யுத்தத்தில் ஜுவைரியஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களின் தந்தையும் கணவரும் கொல்லப்பட்டனர். பனூ முஸ்தலிக் கோத்திரத்திலிருந்து கைதியாக பிடிக்கப்பட்டவர்களில் ஒருவராக இருந்த இப்பெண்மணி தன்னை விடுவித்துக் கொள்வதற்காக உரிமைச் சீட்டு எழுதினார். அதற்குரிய பணம் தன்னிடம் இல்லாததன் காரணமாக நபிகள் நாயகம் (ﷺ) அவர்களிடம் வந்து உதவி வேண்டினார். நபி (ﷺ) அவர்கள் உரிமைச்சீட்டுக்குரிய செலவைச் செலுத்தி அக்கூட்டத்தின் தலைவரின் மகளான இப்பெண்மணியை உரிமையிட்டது மட்டுமல்லாமல், அப்பெண்ணின் விருப்பத்தோடு அவர்களைத் திருமணமும் செய்து; அவர்களை கண்ணியப்படுத்தினார்கள்.[83]

---

[82] [அவர் நபி (ﷺ) அவர்களையும் முஸ்லிம்களையும் அழிப்பதற்காக படை திரட்டியவர்.]

[83] [இவர்கள் நபி (ﷺ) அவர்களின் மனைவியானதும், நபித் தோழர்களிடம் கைதிகளாக இருந்த இவர்களது கூட்டத்தைச் சேர்ந்த 100 குடும்பங்கள் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் நபி (ﷺ) அவர்களின் மனைவியின் சொந்தக்காரர்கள் என்பதால் அவர்களைக் கைதிகளாக வைத்துக் கொள்ள நபித்தோழர்கள் விரும்பவில்லை. ஜுவைரியஹ் (றளியள்ளாஹு அன்ஹா) நபி (ﷺ) அவர்களுடன் இணைந்ததற்குப் பிறகு அள்ளாஹ்வை அதிகமதிகமாக வணங்குகின்ற ஒருவராகத் திகழ்ந்தார்கள்.]

***⑧ முஃமின்களின் தாய் ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (றளியள்ளாஹு அன்ஹா):***

அடுத்ததாக, நபி (ﷺ) அவர்கள் இப்பெண்மணியை மணந்தார்கள். இவர்கள் பனூ அஸத் இப்னு குஸைமஹ் என்ற கிளையைச் சேர்ந்தவர்கள். நபி (ﷺ) அவர்களின் உமைமஹ் எனும் மாமியின் மகளாவார்கள். இம்மனைவி விடயத்தில் தான் பின்வரும் அல்குர்ஆன் வசனம் இறங்கியது:

{ஸைத் (என்பவர் ஸைனபைத் திருமணம் செய்து தாம்பத்திய வாழ்க்கை எனும் தன்) தேவையை அவளிடமிருந்து நிறைவேற்றி முடித்(து விவாகவிலக்களித்)த போது, நாம் அவளை உமக்குத் திருமணம் செய்து வைத்தோம்.} (அல்குர்ஆன் 33:37)

இதனால்தான் இவர்கள் நபி (ﷺ) அவர்களின் ஏனைய மனைவியாரிடத்தில் 'உங்களையெல்லாம் உங்களுடைய குடும்பத்தவர்கள் திருமணம் செய்துவைத்தனர். என்னை அள்ளாஹ் ஏழு வானங்களுக்கு மேலாக இருந்து திருமணம் செய்து வைத்தான்' என்று பெருமிதமாகக் கூறிக்கொள்வார்கள். இவர்கள் உமர் இப்னுல் கத்தாப் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சியின் ஆரம்பப் பகுதியில் மரணமானார்கள். ஆரம்பத்தில் zஸய்த் இப்னு ஹாரிஸஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களுக்கு மனைவியாக இருந்தார்கள். அவர்கள் இவர்களைத் 'தலாக்' விட்டார்கள். ஸைத் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை நபி (ﷺ) அவர்கள் இஸ்லாத்திற்கு முன்னர் தமது பிள்ளையாகத் தத்தெடுத்து இருந்தார்கள். [பின்னர் எவரும் தனது பிள்ளை இல்லாத ஒருவரைத் தனது பிள்ளை என அழைப்பது கூடாது என்று அள்ளாஹ் தடை செய்தான்.] தத்தெடுக்கப்பட்டவரால் 'தலாக்' விடப்பட்ட பெண்ணை தத்தெடுத்தவர் மணமுடிப்பது குற்றமில்லை; ஏனெனில் அவர் இவரது உண்மையான பிள்ளை அல்ல என்ற சட்டத்தை இந்த உம்மத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காக அள்ளாஹ் இந்தத் திருமணத்தைச் செய்து காட்டினான்.

**⑨ முஃமின்களின் தாய் உம்மு ஹபீபஹ் (றளியள்ளாஹு அன்ஹா):**

அதற்குப்பிறகு நபி (ﷺ) அவர்கள் உம்மு ஹபீபஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களை மணந்து கொண்டார்கள். இவர்களது இயற்பெயர் றம்லஹ் பின்து அபூ ஸுஃப்யான் என்பதாகும். இவர்கள் குறைஷிக் குலத்தில் உமைய்யஹ் கிளையை சேர்ந்தவர்கள். அபீசீனியாவுக்கு ஹிஜ்றஹ் செய்து, தனது கணவனை இழந்த விதவையாக இருந்த இவர்களை அங்கு இருக்கும் நிலையிலேயே நபி (ﷺ) அவர்கள் மணந்துகொண்டார்கள். நபிகள் நாயகம் (ﷺ) சார்பாக நஜாஷி மன்னர் இவர்களுக்கு 400 தீனார்களை - தங்க நாணயங்களை மஹராகக் கொடுத்தார். அங்கிருந்து மதீனஹ்விற்கு நபி (ﷺ) அவர்களிடம் அழைத்துவரப்பட்டார்கள். அன்னை அவர்கள் தனது சகோதரன் முஆவியஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக்காலத்தில் மரணமானார்கள்.

***🔟 மு:ஃமின்களின் தாய் ஸபிய்யஹ் (றளியள்ளாஹு அன்ஹா):***
இவர்கள் நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் சகோதரரான நபி ஹாறூன் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பரம்பரையில் வந்த, பனூன் நளீர் எனும் யூதக் கோத்திரத்தின் தலைவரான ஹுயை இப்னு அக்தப் என்பவரின் மகளாவார். மிக அழகான பெண்களில் ஒருவராக இருந்தார்கள். யூதத் தரப்பிலிருந்து கைபர் போரில் கைது செய்யப்பட்டார்கள்.[84] நபி (ﷺ) அவர்கள் இவர்களை விடுதலை செய்து, விடுதலையை மஹறாக ஆக்கித் திருமணம் செய்துகொண்டார்கள்.

***⑪ மு:ஃமின்களின் தாய் மைமூனஹ் பின்துல் ஹாரிஸ் (றளியள்ளாஹு அன்ஹா):***
அடுத்ததாக, நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் இவர்களைத் திருமணம் முடித்தார்கள். இவர்கள் ஹிலால் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இறுதியாக இவர்களையே நபி (ﷺ) அவர்கள் மணம் முடித்தார்கள். நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள்[85] உம்றதுல் களாவுக்குச் சென்றிருந்த நேரத்தில் மக்கஹ்வில் வைத்து இஹ்றாம் கலைந்த பிறகு இவர்களைத் திருமணம் செய்து கொண்டார்கள்.

***✅ நபிகள் நாயகம் (ﷺ) அவர்கள் மரணிக்கும் போது அவர்களிடம் இருந்த மனைவியர்:***
அவர்கள் ஒன்பது பேராவர். அவர்களில் நபியவர்களுக்குப் பிறகு முதலில் மரணித்தவர் ஸைனப் பின்து ஜஹ்ஷ் (றளியள்ளாஹு அன்ஹா) ஆவார்கள். இவர்கள் ஹி 20 ஆம் ஆண்டு மரணமானார்கள். அவர்களில் இறுதியாக மரணித்தவர் உம்மு ஸலமஹ் (றளியள்ளாஹு அன்ஹா) ஆவார்கள். இவர்கள் ஹி 62 ஆம் ஆண்டு யஸீத் இப்னு முஆவியஹ்வின் ஆட்சிக்காலத்தில் மரணமானார்கள்.

[84] [இவர்கள் ஒரு கோத்திரத்தின் தலைவரின் மகளாக இருந்ததனால் ஒரு நபித்தோழரின் ஆலோசனைப்படி நபி (ﷺ) அவர்கள் இவர்களை மணந்து கொண்டார்கள்.]
[85] [ஹி 7இல்]

# இரண்டாவது பரீட்சை

| சரி, பிழையிடுக | ☑ | ☒ |
|---|---|---|
| நபி (ﷺ) அவர்கள் தமது ஆடையை அணிகின்ற பொழுது தம் வலது பக்கத்திற்கு முதலில் அணிவிப்பார்கள் | | |
| அவர்களின் பெரும்பாலான உணவு நிலத்தில் விரிப்பில் வைக்கப்படும். அதுதான் அவர்களின் சாப்பாட்டுத் தட்டாக இருந்தது. | | |
| அவர்கள் பிரயாணம் செய்து திரும்பி வந்தால் இரவில் தம் குடும்பத்தாரிடம் வரமாட்டார்கள். அதனைத் தடைசெய்பவர்களாகவும் இருந்தார்கள். | | |
| சிலவேளை பசியின் காரணமாக வயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டிருந்திருக்கிறார்கள். சில வேளை வயிறார சாப்பிட்டும் இருக்கிறார்கள். | | |
| சிகிச்சை செய்திருக்கிறார்கள், சூடும் போட்டிருக்கிறார்கள், தமக்கு சூடு போட்டுக் கொண்டதில்லை. நிவாரணத்திற்காக ஓதிப் பார்த்திருக்கிறார்கள். தமக்கு ஓதுமாறு மற்றவர்களிடம் வேண்டிக் கொண்டதில்லை. | | |
| வஸ்வாஸினால் பாதிக்கப்பட்டவர்கள் செய்வதைப் போன்று சிறுநீர் கழித்து விட்டு சுத்தம் செய்கின்ற போது மர்மஸ்தானத்தை உதருவது, கனைப்பது, துள்ளுவது, படிகளில் ஏறுவது, கயிற்றைப் பிடித்து முயற்சிப்பது, பஞ்சை விடுவது, அடிக்கடி சிறு நீர்த்துளிகள் வெளிவந்திக்கிறதா என்பதை கவனிப்பது, தண்ணீரை அதிகமாக கொட்டுவது போன்ற விடயங்களை நபி (ﷺ) அவர்கள் செய்பவர்களாக இருக்கவில்லை. | | |
| ஹனீபிய்யஹ் மற்றும் இலகுவான மார்க்கத்தைக் கொடுத்து அனுப்பப்பட்டார்கள். இவ்விரண்டுக்கும் எதிரானது இணைவைத்தல் மற்றும் ஹறாமை ஹலாலாக்குவதுமாகும். | | |
| நபி (ﷺ) அவர்களின் பிள்ளைகளின் எண்ணிக்கை ஏழு. மூவர் பெண்கள்; நால்வர் ஆண்கள். | | |
| அவர்களின் அனைத்துக் குழந்தைகளும் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) மூலம் பெறப்பட்டார்கள். வேறு எந்த மனைவி மூலமாகவும் எந்தக் குழந்தையும் கிடைக்கவில்லை. | | |
| அனைத்துக் குழந்தைகளும் அவர்களுக்கு முன்னரே மரணித்துவிட்டனர். | | |
| அவர்களுக்கு ஆஇஷஹ், ஹப்ஸஹ், ஸைனப் பின்து ஜஹ்ஷ், உம்மு ஸலமஹ், ஸபிய்யஹ், உம்மு ஹபீபஹ், மைமூனஹ், ஸவ்தஹ், ஜுவைரியஹ் ஆகிய ஒன்பது மனைவியர் அவர்கள் மரணிக்கும் பொழுது இருந்தார்கள் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. | | |
| அள்ளாஹ் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) மூலமான ஸலாம் சொல்லி அனுப்பினான். இந்தத் தனிச்சிறப்பு வேறு எந்தப் பெண்ணுக்கும் கிடையாது. | | |

| *சரியான விடையைத் தெரிவு செய்க* |
|---|
| நபி (ﷺ) அவர்களுக்கு மிக விருப்பமான நிறம்: |
| A- **வெள்ளை** B- **கருப்பு** C- **வசதிப்பட்ட எந்த நிறமாக இருந்தாலும் சரியே** |
| நபி (ﷺ) அவர்களின் ஆடை: |
| A- **கம்பளி அணிய மாட்டார்கள்** B- **பருத்தி மற்றும் லினன் அணிவார்கள்** C- **தமக்கு வசதிப்பட்டதை அணிவார்கள்** D- **A, B ஆகிய 2 பதில்கள் மாத்திரம்** |
| நபி (ﷺ) அவர்களின் ஆடை: |
| A- **மிக உயர்ந்த தரமானதாக இருக்கும்** B- **அவர்களின் பற்றற்ற தன்மை காரணமாகத் தாழ்ந்த ஆடையாக இருக்கும்** C- **நடுத்தரமான ஆடையாக இருக்கும்** |
| நபி (ﷺ) அவர்கள் ............... அள்ளாஹ்வின் பெயரைக் கூறுவார்கள் மற்றும் அள்ளாஹ்வைப் புகழ்வார்கள். |
| A- **உணவு உட்கொள்ள ஆரம்பிக்கும் பொழுது** B- **உணவு உண்டு முடித்த பிறகு** C- **உண்ண ஆரம்பிக்கும் பொழுது மற்றும் உண்டு முடித்தபிறகும்** |
| நபி (ﷺ) அவர்கள் பெரும்பாலும் .............. அருந்துவார்கள். |
| A- **உட்கார்ந்து** B- **நின்ற நிலையில்** C- **இரு நிலையிலும்** |
| நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: உங்களது உலகத்தில் எனக்கு விருப்பம் ஆக்கப்பட்டுள்ள விடயங்கள்: .......... |
| A- **பெண்கள்** B- **வாசனை திரவியம்** C- **இரண்டும்** |
| எனது கண் குளிர்ச்சி (சந்தோசம்) .......... வைக்கப்பட்டுள்ளது என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள். |
| A- **சுவனத்தில்** B- **தொழுகையில்** C- **இரண்டிலும்** |
| நபி (ﷺ) அவர்கள் தமது மனைவியருடன் .......... |
| A- **அழகான நெருக்கமான குடும்ப உறவைப் பேணுவார்கள்.** B- **நற்குணத்தை பேணுவார்கள்.** C- **இரண்டும் சரியான விடைகள்.** |
| அனஸ் (றளியள்ளாஹு அன்ஹு) கூறினார்கள்: 'மீசையைக் கத்தரித்தல், நகங்களை வெட்டுதல், அக்குள் முடியைப் பிடுங்குதல், மர்மஸ்தான முடியை மழித்தல் ஆகியவற்றில் நபி (ﷺ) அவர்கள் எங்களுக்கு ............ இரவுகளை விட அதிகமாக அவற்றை விட்டு வைக்கக் கூடாது என்று காலக்கெடுவு வழங்கினார்கள். |
| A- **முப்பது** B- **நாற்பது** C- **ஐம்பது** |
| தலைமுடியை மழிப்பதில் நபி (ﷺ) அவர்களின் வழிமுறை யாதெனில்: |
| A- **ஒரு பகுதியை மழித்து மற்றொரு பகுதியை விட்டு விடுவார்கள்.** B- **தலையை முழுமையாக மழிப்பார்கள் அல்லது முழுமையாக விட்டுவிடுவார்கள்.** |
| நபி (ﷺ) அவர்கள் ............ பல் துலக்குவதை விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள். |
| A- **நோன்பு நோற்ற நிலையில்** B- **நோன்பு நோற்காத நிலையில்** C- **இரு நிலைகளிலும்** |
| நபி (ﷺ) அவர்களின் ............ புன்முறுவலாகவே இருந்தது. |
| A- **அனைத்து சிரிப்புகளும்** B- **பெரும்பாலான சிரிப்புகள்** |
| நபி (ﷺ) அவர்கள் ............ தூதராக அனுப்பப்பட்டது: |
| A- **அனைத்து மனிதர்களுக்கும்** B- **மனு, ஜின் வர்க்கங்களுக்கு** |

| | | |
|---|---|---|
| பொதுவாக நபி (ﷺ) அவர்களின் பெண் பிள்ளைகளில் மிகச் சிறந்தவர்: | | |
| A- **அனைவரும்** | B- **ஃபாதிமஹ்** | C- (z)**ஸைனப்** |
| நபி (ﷺ) அவர்கள் ஒரு மனைவியுடன் ஒரே போர்வைக்குள் இருக்கும் போதும் அவர்களுக்கு வஹீ அருளப்பட்டது. யார் அந்தப் பெண்? | | |
| A- **ஹப்ஸஹ்** | B- **ஆஇஷஹ்** | C- **உம்மு ஸலமஹ்** |

| **நபி (ﷺ) அவர்கள்:** | நோய் விசாரிக்கச் செல்வார்கள் | கலந்து கொள்வார்கள் | சமூகமளிப்பார்கள் | நிவர்த்தி செய்து கொடுப்பார்கள் |
|---|---|---|---|---|
| ஜனாஸஹ்வில் | | | | |
| விருந்திற்கு அழைக்கப்பட்டால் | | | | |
| விதவை, ஏழை, பலவீனமானவர் போன்றவர்களுடன் சென்று அவர்களின் தேவைகளை | | | | |
| நோயாளியை | | | | |

| **நபி (ﷺ) அவர்கள்:** | ஆட்டில் | மஸ்ஜித் கட்டப்படும் போது | தம் ஆடையை | தம் செருப்பை | குடும்பத்திற்கும் தமக்கும் |
|---|---|---|---|---|---|
| **தம் கையாலே தைத்திருக்கிறார்கள்.** | | | | | |
| **தம் கையால் ஒட்டுத்தையல் போட்டிருக்கிறார்கள்.** | | | | | |
| **பால் கறந்து இருக்கிறார்கள்.** | | | | | |
| **பணி செய்திருக்கிறார்கள்.** | | | | | |
| **தாமும் மக்களுடன் கற்களைச் சுமந்து சென்றிருக்கிறார்கள்.** | | | | | |

| **இயற்கை மரபு (ஸுன்னஹ்)களாவன:** | மீசையை | தாடியை | நகங்களை | அக்குள் முடியை | மர்மஸ்தான |
|---|---|---|---|---|---|
| பிடுங்குதல் | | | | | |
| வெட்டுதல் | | | | | |
| கத்தரித்தல் | | | | | |
| முடியை மழித்தல் | | | | | |
| வளர்வதற்கு விட்டு விடுதல் | | | | | |

| நபி (ﷺ) அவர்கள்: | ஹறாம் ஆக்காமல் விட்டுவிடுவார்கள். | தேடமாட்டார்கள். | மறுக்கமாட்டார்கள். | சாப்பிடுவார்கள். |
|---|---|---|---|---|
| இருப்பதை | | | | |
| இல்லாததைச் சிரமப்பட்டு | | | | |
| அவர்களுக்காகக் கொடுக்கப்படும் சுத்தமான நல்ல எந்த உணவையும் | | | | |
| ஆனாலும் அவர்களது மனம் விரும்பாவிட்டால் | | | | |

| நபி (ﷺ) அவர்கள்: | மூன்று விரல்களால் | உண்டு முடித்த பிறகு தமது விரல்களை | உணவு உட்கொள்ளும் முறைகளில் | பெருமையுடையவர்கள் | பேராசை கொண்டவர்கள் |
|---|---|---|---|---|---|
| ஒரு விரலால் சாப்பிடுவார்கள். | | | | | |
| நக்கிக்கொள்வார்கள். | | | | | |
| அதுவே மிகச் சிறந்த முறையாகும். | | | | | |
| ஐந்து விரல்களாலும் சாப்பிடுவார்கள், தனது கையால் முழுமையாக உணவை எடுத்துக் கொள்வார்கள். | | | | | |
| சாப்பிடுவார்கள். | | | | | |

📖 *அத்தியாயம் - 2:*

# நபி (ﷺ) அவர்களின் சீறஹ் - வாழ்க்கை வரலாறு

## ◆ பிரிவு - 1: நபித்துவத்திற்கு முன்னர்:

### 💎 நபி (ﷺ) அவர்களின் பிறப்பு:

அவர்கள் மக்கஹ் நகரில் 'ஆமுல்ஃபீல்' எனும் யானை வருடத்தில் றபீஉனில் அவ்வல் மாதத்தில் ஒரு திங்கட்கிழமையில் பிறந்தார்கள். அது ஹிஜ்றஹ்விற்கு முன் 53வது ஆண்டு; கிறிஸ்துவுக்கு பின்னர் 571வது ஆண்டு. யானைப்படை நிகழ்வும் அதனை அள்ளாஹ் முறியடித்ததும், தனது நபி மற்றும் கஃபஹ் ஆலயம் ஆகியவை குறித்த ஒரு முன்னேற்பாடாக அமைந்திருந்தது.

### 💎 நபி (ﷺ) அவர்களின் தந்தை:

அவர் அப்துல் முத்தலிபின் மகன் *அப்துள்ளாஹ்* ஆவார். அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தாய்வயிற்றில் இருக்கின்ற போதே அவர்களது தந்தை மரணித்துவிட்டார். இதனால், அவர்கள் ஒரு அனாதையாகவே பிறந்தார்கள்.

### 💎 நபி (ﷺ) அவர்களின் தாய்:

அவர் பனூ ᶻஸுஹ்றஹ் என்ற கோத்திரத்தைச் சேர்ந்த வஹ்ப் என்பவரின் மகளான *ஆமினஹ்* ஆவார். அவர் மரணிக்கும் போது நபி (ﷺ) அவர்கள் ஏழு வயதைப் பூரணப்படுத்தியிருக்கவில்லை.

### 💎 நபி (ﷺ) அவர்களைப் பொறுப்பேற்றல்:

அவர்களது தாயின் மரணத்திற்குப் பிறகு *அப்துல் முத்தலிᵇப்* எனும் அவர்களது பாட்டனே (தந்தையின் தந்தையே) அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பின்னர் அவரும் மரணித்துவிடுகிறார். அப்பொழுது அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுக்கு சுமாராக எட்டு வயது இருக்கும். அதனைத் தொடர்ந்து அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை அவர்களது தந்தையின் உடன்பிறந்த சகோதரர் *அபூதாலிᵇப்* ஏற்றுக் கொள்கிறார். அபூதாலிபின் இயற்பெயர் அப்து மனாஃப் என்பதாகும்.

💎 **நபி (ﷺ) அவர்களுக்குப் பாலூட்டிய தாய்மார்கள்:**

*1- ஸுவ(ث்)வைபஹ்:*

இவர் நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரனான அபூலஹபின் அடிமைப் பெண்ணாவார். இவர் தனது மகன் மஸ்றூஹை பெற்றிருந்த நேரத்தில் நபி (ﷺ) அவர்களுக்கும், அபூஸலமஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களுக்கும் பாலூட்டினார். மேலும் இவர் ஹம்ஸஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களுக்கும் பாலூட்டியிருக்கிறார்.

*2- ஹலீமஹ் அஸ்-ஸஃதிய்யஹ்:*

இவர் அப்துள்ளாஹ் எனும் தனது குழந்தையைப் பெற்றிருந்த நேரத்தில் நபி (ﷺ) அவர்களுக்கும் பாலூட்டினார். இந்த அப்துள்ளாஹ்வுக்கு இரு சகோதரிகளும் உள்ளனர். அவர்கள் உனைஸஹ் மற்றும் ஷைமாஃ என்று அழைக்கப்படும் ஜுதாமஹ் ஆகியோராவர் . இவர்களுடைய தந்தையின் பெயர் ஹாரிஸ் இப்னு அப்தில் உஸ்ஸா அஸ்-ஸஃதி என்பதாகும். நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரர்களில் ஒருவரான ஹாரிஸ் என்பவரின் மகனான அபூ ஸுஃப்யான் என்பவருக்கும் இப்பெண்மணி பாலூட்டியிருக்கிறார்.

💎 **நபி (ﷺ) அவர்களை வளர்த்துப் பராமரித்த தாய்மார்கள்:**

1 அவர்களது தாய் ஆமினஹ்

2 அபூலஹபின் அடிமைப்பெண் ஸுவைபஹ்

3 ஹலீமதுஸ் ஸஃதிய்யஹ்

4 ஷைமாஃ:

இவர் ஹலீமஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களின் மகளாவார். பால்குடி முறையில் நபி (ﷺ) அவர்களின் சகோதரியாவார். இவர்தான் ஹவாஸின் கோத்திரத் தூதுக்குழுவில் நபி (ﷺ) அவர்களிடம் வந்தவர். அப்போது நபி (ﷺ) அவர்கள் இவர் உட்காருவதற்காக தமது மேலாடையை விரித்துக் கொடுத்து கௌரவப்படுத்தினார்கள். இவருக்கு தாம் கடமைப்பட்டுள்ளதனாலேயே இவ்வாறு நடந்து கொண்டார்கள்.

5⃣ உம்மு அய்மன்:

இவரது பெயர் பறகஹ். இவர் அபீசீனியாவைச் சேர்ந்தவர். அடிமையாக இருந்த இவரை நபி (ﷺ) அவர்கள் அனந்தரச் சொத்தாகப் பெற்றார்கள். இவர் நபி (ﷺ) அவர்களை வளர்கின்ற பெண்ணாக இருந்தார். பிற்காலத்தில் இவரை நபி (ﷺ) அவர்கள் தமது பாசத்திற்குரிய ᶻஸைத் இப்னு ஹாரிஸஹ்விற்கு மணமுடித்து வைத்தார்கள். இதனால் உஸாமஹ் இப்னு ஸைதைப் பெற்றெடுத்தார். [நபி (ﷺ) அவர்கள் இவரைச் சந்திக்கச் செல்பவர்களாக இருந்தார்கள்.] அவர்களின் மரணத்திற்குப் பிறகு அபூபக்ர், உமர் (றளியள்ளாஹு அன்ஹுமா) ஆகிய இரு நபித்தோழர்களும் இவரைச் சந்திக்கச் சென்றனர். அவர்கள் சென்ற போது, இவர் அழுதுவிட்டார். அதற்கவர்கள், ஏன் அழுகிறீர்கள்? அள்ளாஹ்விடம் இருப்பதே தன் தூதருக்கு மிகச் சிறந்தது என்று கூறினார்கள். அப்போது, இவர் கூறினார்: 'அள்ளாஹ்விடம் இருப்பதுதான் தன் தூதருக்கு மிகச் சிறந்தது; அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தாம் இருந்ததை விடச் சிறந்ததை நோக்கிச் சென்றுவிட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் நான் அழுவது; வானத்தில் இருந்து இறங்கிக்கொண்டிந்த வஹ்ய் எங்களை விட்டும் நின்றுவிட்டது என்பதற்காகத்தான்'. இதனை கேட்ட அவ்விருவரும் இவருடன் அழலானார்கள்.

### 💎 நபி (ﷺ) அவர்களின் தொழில்:

நபி (ﷺ) அவர்கள் ஆடுமேய்த்திருக்கிறார்கள். இந்தப் பயிற்சி அவர்களது பொறுமை, பலவீனர்கள் விடயத்தில் அவர்கள் காட்டிய இரக்கம், அரவணைப்பு போன்றவற்றிற்குக் காரணமாக அமைந்துள்ளது. நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "அள்ளாஹ் அனுப்பிய எந்த நபியும் ஆடுகளை மேய்க்காமல் இருக்கவில்லை". அப்போது அவர்களின் தோழர்கள், நீங்களுமா? என்று வினவினார்கள். "ஆம், நான் சில நாணயங்களிற்காக மக்கஹ்வாசிகளுக்கு ஆடுகளை மேய்த்துக் கொடுத்திருக்கின்றேன்" என்று கூறினார்கள்.

### 💎 நபி (ﷺ) அவர்களது வியாபாரமும் திருமணமும்:

தமது 25ஆவது வயதில் வியாபாரத்திற்காக ஷாம் தேசத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். அங்குள்ள புஸ்றா என்னும் நகரத்திற்குச் சென்று வந்தார்கள். அதையடுத்து தமது முதல் மனைவி கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களைத் திருமணம் முடித்தார்கள்.

### 💎 க..்பஹ்வின் கட்டுமானப் பணி:

நபி (ﷺ) அவர்கள் 35ஆவது வயதை அடைந்திருக்கும் போது க..்பஹ் ஆலயத்தின் கட்டுமானம் பலவீனமடைந்திருந்தது. குறைஷிகள் அதனை புணர் நிர்மாணம் செய்தனர். குறைஷிக் கோத்திரத்தின் கிளைகள் தங்களுக்கு மத்தியில் பங்கு போட்டுக்கொண்டு, க..்பஹ்வின் ஒவ்வொரு பகுதியையும் கட்ட ஆரம்பித்தனர். கட்டுமானம் ஹஜருல் அஸ்வத் கல் இருக்க வேண்டிய இடத்தை அடைந்ததும், யார் அந்த இடத்தில் அந்தக் கல்லை வைப்பது என்பதில் கருத்து முரண்பட்டனர். நான்கு அல்லது ஐந்து நாட்களாக இந்நிலை தொடர்ந்தது. பிறகு மஸ்ஜிதின் வாயிலினால் முதலாவது எவர் நுழைகிறாரோ அவருக்குத் தீர்ப்புச் சொல்லும் அதிகாரத்தை வழங்குவோம் என்று உடன்பட்டனர். அப்போது, முதல் முதலாக நபி (ﷺ) அவர்கள்தான் நுழைந்தார்கள். அவர்களும் நபி (ﷺ) அவர்களைத் தீர்ப்பு வழங்குபவராக இருக்க ஏற்றுக் கொண்டார்கள். நபி (ﷺ) அவர்கள், ஒரு துணியைக் கொண்டு வருமாறு கூறி, அதிலே அந்தக் கல்லை வைத்து, ஒவ்வொரு கிளைக் கோத்திரத்தின் பிரதிநிதியும் அந்தத் துணியின் ஒரு ஓரத்தினால் பிடித்து, அனைவரும் சேர்ந்து அதனைத் தூக்குமாறு கூறினார்கள். பிறகு ஹஜருல் அஸ்வத் கல் வைக்க வேண்டிய இடத்தை அடைந்ததும் தாமே தம்முடைய கையினால் அதனை எடுத்து அந்த இடத்தில் பொருத்தினார்கள்.

### 💎 நபி (ﷺ) அவர்களுக்கு தனிமையில் ஏற்பட்ட விருப்பம்:

ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) கூறினார்கள்: 'தனிமையிலிருப்பது நபி (ﷺ) அவர்களுக்கு விருப்பமானதாக ஆக்கப்பட்டது. ஹிறா..் குகையில் அவர்கள் தனித்திருந்தார்கள். பல இரவுகள் (அங்கே தங்கியிருந்து) வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள்'.
இதற்குக்காரணம் சிலைகளும் தமது கூட்டத்தினரின் மதமும் அவர்களுக்கு விருப்பமற்றதாகிவிட்டன. அவர்களுக்கு அதனை விட வெறுப்பான எதுவும் இருக்கவில்லை.

## 🔷 பிரிவு - 2: வஹ்யின் (இறைச்செய்தியின்) ஆரம்பம்:

நபி (ﷺ) அவர்களுக்கு நாற்பது வயது பூர்த்தியான போது நபித்துவத்தின் ஒளி அவர்களின் மீது பிரகாசித்தது. அல்லாஹ் அவர்களை ஒரு திங்கட்கிழமை தனது ரிஸாலஹ் - தூதுத்துவத்தின் மூலம் கண்ணியப்படுத்தினான்.

### 💎 நபி (ﷺ) அவர்களின் நபித்துவம்:

ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) கூறினார்கள்: 'நபி (ﷺ) அவர்களுக்கு ஆரம்பத்தில் இறைச்செய்தி தூக்கத்தில் தோன்றும் நல்ல கனவுகளிலேயே வந்தது. அப்போது அவர்கள் எந்தக் கனவு கண்டாலும் அது அதிகாலைப் பொழுதின் விடியலைப் போன்று தெளிவாக இருக்கும். பின்னர் தனிமையிலிருப்பது அவர்களின் விருப்பமாயிற்று. ஹிறாஃ குகையில் அவர்கள் தனித்திருந்தார்கள். தங்களின் குடும்பத்தாரிடம் திரும்பி வருவதற்கு முன் பல இரவுகள் (அங்கே தங்கியிருந்து) வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அந்த நாட்களுக்குத் தேவையான உணவைத் தம்மோடு கொண்டு செல்வார்கள். (அது முடிந்ததும்) மீண்டும் (தங்களின் துணைவியார்) கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களிடம் திரும்புவார்கள். அதே போன்று பல நாட்களுக்குரிய உணவைக் கொண்டு செல்வார்கள். இந்த நிலை ஹிறாஃ குகையில் அவர்களுக்கு சத்தியம் வரும் வரை நீடித்தது. (ஒரு நாள்) வானவர் அவர்களிடம் வந்து, 'ஓதும்' என்றார். அதற்கவர்கள் 'நான் ஓதத் தெரிந்தவனில்லையே!' என்றார்கள்'.
அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் இந்நிலையைப் பின்வருமாறு விளக்கினார்கள். "அவர் என்னைப் பிடித்து நான் சிரமப்படும் அளவிற்கு இறுகக்கட்டியணைத்தார். பிறகு என்னைவிட்டுவிட்டு மீண்டும் 'ஓதும்' என்றார். (அப்போதும்) நான் ஓதத் தெரிந்தவனில்லையே! என்றேன். இரண்டாவது முறையும் அவர் என்னைப் பிடித்து நான் சிரமப்படும் அளவிற்கு இறுகக்கட்டி அணைத்து என்னைவிட்டுவிட்டு மீண்டும் 'ஓதும்' என்றார். (அப்போதும்) நான் ஓதத் தெரிந்தவனில்லையே! என்றேன். அவர் என்னைப் பிடித்து மூன்றாவது முறையும் கட்டி அணைத்துவிட்டுவிட்டு, {படைத்தவனாகிய உம்முடைய இரட்சகனின் பெயரால் ஓதும்! அவனே மனிதனை இரத்தக்கட்டியில் (கருவளர்ச்சியின் ஆரம்பநிலையில்) இருந்து படைத்தான். ஓதும்! உம்முடைய இரட்சகன் மிகப் பெரும் கொடையாளன்} [...] என்றார்.'
மேலும், ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) கூறினார்கள்: 'பிறகு இதயம் படபடத்தவர்களாக அந்த வசனங்களுடன் திரும்பிவந்தார்கள். (தம் துணைவியார்) குவைலிதின் மகள் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா)விடம் வந்து, “என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள்” என்று கூறினார்கள். அவர்களும் நபி (ﷺ) அவர்களை

விட்டும் அச்சம் நீங்கும் வரை போர்த்திவிட்டார்கள். பின்னர் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா)விடம் நடந்ததைத் தெரிவித்தார்கள்; எனக்கு ஏதும் நேர்ந்து விடுமோ என நான் உறுதியாக அஞ்சுகிறேன் என்றும் கூறினார்கள். அப்போது கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் 'நிச்சமாக அவ்வாறில்லை; அள்ளாஹ்வின் மீது ஆணையாக உங்களை ஒருபோதும் அள்ளாஹ் இழிவுபடுத்தமாட்டான்; (ஏனெனில்) நீங்கள் உறவினர்களுடன் சேர்ந்து நடக்கிறீர்கள்; (சிரமப்படுவோரின்) சுமைகளைச்சுமந்து கொள்கிறீர்கள்; இல்லாதவர்களுக்காக உழைக்கிறீர்கள்; விருந்தினர்களை உபசரிக்கிறீர்கள்; உண்மையான சோதனைகளில் (ஆட்பட்டோருக்கு) உதவி புரிகிறீர்கள்' என்றார்கள். பின்னர் நபி (ﷺ) அவர்களைத் தம் தந்தையின் உடன்பிறந்தவரான நவ்ஃபல் என்பவரின் மகன் 'வறகஹ்'விடம் அழைத்துச் சென்றார்கள். நவ்ஃபல், அசது என்பவரின் மகனும் அசது, அப்துல் உஸ்ஸாவின் மகனுமாவார்.

'வறகஹ்' அறியாமைக் காலத்திலேயே கிறித்தவ சமயத்தைத் தழுவியவராக இருந்தார். மேலும் அவர் ஹீப்ரு மொழியில் எழுதத் தெரிந்தவராகவும் இஞ்ஜீல் வேதத்தை, ஹீப்ரு மொழியில் அவர் அள்ளாஹ் நாடிய அளவுக்கு எழுதுகிறவராகவும் கண் பார்வையற்ற பெரும் வயோதிகராகவும் இருந்தார். அவரிடம் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா), 'என் தந்தையின் சகோதரன் மகனே! உம் சகோதரன் மகன் கூறுவதைக் கேளுங்கள்' என்றார்கள். அப்போது வறகஹ் நபி (ﷺ) அவர்களிடம், 'என் சகோதரர் மகனே! நீர் எதைக் கண்டீர்?' எனக் கேட்டார். நபி (ﷺ) அவர்கள் தாம் பார்த்ததைப் பற்றிய செய்திகளை அவரிடம் எடுத்துக் கூறினார்கள். (அதைக் கேட்டதும்) வறகஹ், (நபி (ﷺ) அவர்களிடம்) 'இவர்தாம், மூஸாவிடம் அள்ளாஹ் அனுப்பிய 'நாமூஸ்' (இரகசியத் தகவலுக்குரியவர்-ஜிப்ரீல்) ஆவார்' என்று கூறிவிட்டு, 'உம்முடைய சமூகத்தார் உம்மை (உம்முடைய நாட்டிலிருந்து) வெளியேற்றும் சமயத்தில் நான் உயிருடன் திடகாத்திரமான இளைஞனாக இருந்திருக்க வேண்டுமே!' என்றும் அங்கலாய்த்தார். அப்போது அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள், "மக்கள் என்னை வெளியேற்றுவார்களா?" என்று கேட்டார்கள். அதற்கவர் 'ஆம்! நீர் கொண்டு வந்திருப்பது போன்ற (சத்தியத்)தைக் கொண்டு வந்த எந்த மனிதரும் (மக்களால்) பகைத்துக் கொள்ளப்படாமல் இருந்ததில்லை. (நீர் வெளியேற்றப்படும்) அந்நாள் என்னை அடைந்தால் உமக்குப் பலமாக உதவுவேன்' என்று கூறினார். அதன்பின்னர் வறகஹ் நீண்ட நாள் வாழாமல் இறந்துவிட்டார். (இந்த முதற் செய்தியுடன்) வஹ்ய் (இறைச்செய்தி) சிறிது காலம் நின்று போயிற்று.[86]

அதற்குப் பிறகு நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "நான் நடந்து

[86] [புகாரி 3]

சென்றுகொண்டிருந்தபோது வானத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டு என் பார்வையை உயர்த்திப் பார்த்தேன். அப்போது ஹிறா஁ குகையில் என்னிடம் வந்த அதே வானவர் வானத்துக்கும் பூமிக்குமிடையே ஓர் ஆசனத்தில் அமர்ந்திருக்கக் கண்டு அச்சமுற்றேன். (வீட்டிற்குத்) திரும்பி வந்து (கதீஜஹ்விடம்) என்னைப் போர்த்துங்கள் என்றேன்". அப்போது, 'போர்வை போர்த்தியவரே எழும்! (மக்களுக்கு) எச்சரிக்கை செய்யும்!' (குர்ஆன் 74:01) என்பது தொடங்கி 'அசுத்தங்களைவிட்டும் வெறுத்து ஒதுங்கிவிடும்!' என்பது வரை ஐந்து வசனங்களை அள்ளாஹ் அருளினான்'. அதன் பின்னர் வஹ்ய் (இறைச்செய்தி) அடிக்கடி தொடர்ந்து வரலாயிற்று.[87]

💎 **வஹ்யின் வகைகள் / படித்தரங்கள்:**

**1 உண்மையான கனவு:**

இதுவே வஹ்யின் ஆரம்ப கட்டமாக இருந்தது. 'அப்போது நபி (ﷺ) அவர்கள் எந்தக் கனவு கண்டாலும் அது அதிகாலைப் பொழுதின் விடியலைப் போன்று தெளிவாக இருக்கும்'.[88]

**2 உள்ளத்தில் போடப்படும் வஹ்ய்:**

மலக்-வானவர் நபி (ﷺ) அவர்களின் உள்ளத்தில் போடுவார். அப்போது அவர் நபி (ﷺ) அவர்களின் கண்களுக்கு தோற்றமளிக்கமாட்டார். நபி (ﷺ) அவர்கள் ஒரு ஹதீஸில் பின்வருமாறு கூறினார்கள்: "... என்று கூறி எனது உள்ளத்தில் ரூஹுல் குத்ஸ் (என்றழைக்கப்படும் வானவர் ஜிப்ரீல்) ஊதினார்".[89]

**3 வானவர் மனித உருவத்தில் தோற்றமளித்தல்:**

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "... சில வேளைகளில் அந்த வானவர் ஒரு மனிதரைப் போன்று காட்சியளித்து என்னுடன் பேசுவார். அப்போது அவர் கூறுவதை நினைவிலிருத்திக் கொள்வேன்".[90]

சில வேளைகளில் இந்த நிலையில் நபித்தோழர்களும் வானவரைக் காண்பார்கள்.

**4 மணியோசையைப் போன்ற வஹ்ய்:**

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "சில வேளைகளில் அது மணி ஓசையைப் போன்று என்னிடம் வரும். அவ்வாறு வருவது எனக்கு மிகக் கடினமாக இருக்கும். அவர் (வானவர்) கூறியதை நான் நினைவுபடுத்திய நிலையில் அவர் என்னைவிட்டுப் பிரிந்துவிடுவார்".[91]

---

87 [📚புகாரி 4]
88 [📚புகாரி 3] [அதாவது கனவில் கண்டது நிதர்சனத்தில் நடக்கும்.]
89 [📚ஸஹீஹுல் ஜாமிஃ 2085]
90 [📚புகாரி 3215]
91 [📚புகாரி 2]

ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) கூறினார்கள்: 'கடும் குளிரான நாட்களில் நபி (ﷺ) அவர்களுக்கு வஹ்ய் (இறைச்செய்தி) இறங்குவதைக் கண்டேன். வானவர் நபி (ﷺ) அவர்களைவிட்டு விலகிச் செல்லும் போது (குளிரிலும்) அவர்களின் நெற்றியிலிருந்து வியர்வை சொட்டும்'[92]

நபி (ﷺ) அவர்கள் ஒட்டகத்தில் இருக்கும் போது வஹ்ய் வந்தால் அது பூமியில் சாய்ந்து விடும்.[93]

**5 மலக்-வானவர் தனது சொந்த உருவத்தில் தோற்றமளித்தல்:**

இந்த நிலையில் நபி (ﷺ) அவர்கள், வானவர் ஜிப்ரீலை அவர் படைக்கப்பட்டுள்ள அதே வடிவத்தில் காண்பார்கள். நபி (ﷺ) அவர்களுக்கு அவர் அள்ளாஹ் வஹ்ய்யாக இறக்கியருள நாடியதை வஹ்ய்யாக அறிவிப்பார். இவ்வாறு நபி (ﷺ) அவர்களுக்கு இரண்டு முறைகள் நடந்துள்ளன. அதனை அள்ளாஹ் ஸூறதுன் நஜ்மில் குறிப்பிட்டுள்ளான். (53:1-14)

**6 அள்ளாஹ்விடம் இருந்து நேரடியாக வழங்கப்படும் வஹ்ய்:**

இது மிஃறாஜ் இரவில் அள்ளாஹ் நபி (ﷺ) அவர்களுக்கு ஏழு வானங்களுக்கு மேலால் வைத்து நேரடியாக அறிவித்த வஹ்ய்-இறைச்செய்தி. உதாரணமாக ஐவேளை கடமையான தொழுகையை வழங்கியது.

**7 அள்ளாஹ் அவர்களுடன் பேசுவது:**

அள்ளாஹ் நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடன் உரையாடியதைப் போன்று வானவர் ஊடாக இல்லாமல் நபி (ﷺ) அவர்களுடன் உரையாடுவது.

**💎 நபி (ﷺ) அவர்களுக்கு முதலில் இறங்கிய வஹ்ய்:**

ஸூறதுல் அலக்கின் முதல் ஐந்து ஆயத்களே[94] அவர்கள் மீது ஆரம்பமாக இறக்கியருளப்பட்டன. அவை:

1- (யாவற்றையும்) படைத்த உம்முடைய இறைவனின் நாமத்தைக் கொண்டு ஓதுவீராக.

2- மனிதனை (அட்டைப்பூச்சி போன்று) ஒட்டிக்கொண்டிருக்கும் இரத்தக்கட்டியிலிருந்து அவன் படைத்தான்.

3- ஓதுவீராக: உமதிரட்சகன் மாபெரும் கொடையாளி.

4- அவனே எழுது கோலைக் கொண்டு (எழுதக்) கற்றுக் கொடுத்தான்.

5- மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்.

---

92 [📚 புகாரி 2]

93 [📚 பார்க்க: அஹ்மத் 24868]

94 [96:1-5]

💎 **நபி (ﷺ) அவர்களின் தஃவஹ்-பிரச்சாரத்தின் படித்தரங்கள்:**
1️⃣நபித்துவம் ⬇️
2️⃣நெருக்கமான உறவினர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்தல் ⬇️
3️⃣தமது (குறைஷி) கூட்டத்திற்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்தல் ⬇️
4️⃣இதற்கு முன்னர் அச்சமூட்டி எச்சரிக்கும் எந்த நபியும் வராத முழு அரேபிய சமூகத்திற்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்தல் ⬇️
5️⃣இறுதிக்காலம் வரை வருகின்ற, தஃவஹ் சென்றடையும் அனைத்து மனிதர்களுக்கும் ஜின்களுக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்தல்.

💎 **நபி (ﷺ) அவர்களின் தஃவஹ் பிரச்சாரத்தின் கட்டங்கள்:**
1️⃣**இரகசியப் பிரச்சாரம்:**
இது நபித்துவம் கிடைத்ததில் இருந்து மூன்று வருடங்கள்.[95]
2️⃣**பகிரங்கப் பிரச்சாரம்:**
பின்வரும் குர்ஆன் வசனம் இறங்கியதில் இருந்து ஆரம்பமானது:
ஆகவே, உமக்கு ஏவப்பட்டதை(த் தயக்கமின்றி) நீர் அவர்களுக்குத் தெளிவாகக் கூறி விடுவீராக! இணை வைத்துக் கொண்டிருப்போரை புறக்கணித்தும் விடுவீராக! (அல்குர்ஆன் 15:94)

💎 **முதலில் நபி (ﷺ) அவர்களை ஈமான் கொண்டவர்கள்:**
● ஆண்களில்: அபூபக்ர் ஸித்தீக் (றளியள்ளாஹு அன்ஹு)
● பெண்களில்: கதீஜஹ் பின்து குவைலித் (றளியள்ளாஹு அன்ஹா)
● சிறுவர்களில்: அலீ இப்னு அபீ தாலிப் (றளியள்ளாஹு அன்ஹு)
● உரிமையிடப்பட்ட அடிமைகளில்: ஸைத் இப்னு ஹாரிஸஹ் (றளியள்ளாஹு அன்ஹு)
● அடிமைகளில்: பிலால் இப்னு றபாஹ் (றளியள்ளாஹு அன்ஹு)

💎 **ஆரம்பமாக நபி (ﷺ) அவர்களை ஏற்ற நபித்தோழர்களில் சிலர்:**
முன்பு குறிப்பிட்டவர்களுக்குப் பிறகு நபி (ﷺ) அவர்களை ஈமான் கொண்டவர்கள்: நபி (ﷺ) அவர்களின் குடும்பத்தவர்கள், பின்னர் உஸ்மான் இப்னு அஃப்பான், தல்ஹஹ் இப்னு ʿஉபைதில்லாஹ், ஸுபைர் இப்னுல் ʿஅவ்வாம், ஸஃத் இப்னு அபீ வக்காஸ், ʿஅப்துர் றஹ்மான் இப்னு அவ்ஃப், ʿஹப்பாப் இப்னுல் அறத், ஸுஹைபுர் றூமி, ʿஅம்மார் இப்னு யாஸிர், அவர்களது தயார் ஸுமைய்யஹ், அபூ ʿஉபைதஹ் ʿஆமிர் இப்னுல் ஜர்ராஹ், ʿஉஸ்மான் இப்னு மள்ஊன், அபூ ஸலமஹ் இப்னு ʿஅப்துல் அஸத், ʿஉத்பஹ் இப்னு ʿகஸ்வான் (றளியள்ளாஹு அன்ஹும் - அள்ளாஹ் இவர்கள் அனைவரையும் பொருந்திக் கொள்வானாக).

[95] [அது 3 வருடங்கள் நீடித்தது என்பது பிரபலமான கருத்து. ஆனாலும், இந்தக் காலவரையறைக்கு உறுதியாக சான்றில்லை]

## ◆ பிரிவு - 3: மக்கஹ் காலம்:

**💎 நபி (ﷺ) அவர்களுக்கும் அவர்களின் தோழர்களுக்கும் முஷ்ரிக்கள் செய்த கொடுமைகள்:**

நபி (ﷺ) அவர்களின் தஃவஹ்-பிரச்சாரத்தின் உண்மைத் தன்மையையும் அவர்களைச் சூழ மனிதர்கள் ஒன்று சேர்வதையும் முஷ்ரிக்கள் அவதானித்த போது, அவர்களுக்கு மிகக் கடுமையான கொடுமைகளைக் கொடுத்து வந்தனர். அவர்கள் கொடுத்த துன்புறுத்தல்களின் சில வடிவங்கள்:

● நபி (ﷺ) அவர்கள் ஒரு சூனியக்காரர் என்று பரப்பி, அவர்களை விட்டும் மனிதர்கள் விரண்டோடவும், பயப்படவும் வேண்டும் என்று விரும்பினர்.

● நபி (ﷺ) அவர்களை மனிதர்கள் புத்தியில்லாதவர் என்று சொல்ல வேண்டும் என்பதற்காக அவர்கள் ஒரு பைத்தியக்காரர் என்று பரப்பினர்.

● நபி (ﷺ) அவர்களை ஒரு பொய்யர் என்று பரப்பினார்கள். ஆனாலும் அவர்களின் வாய்மை, நாணயம் காரணமாக அவர்கள் அல்அமீன் - நம்பிக்கையாளர் என்று மக்களிடத்தில் அறியப்பட்டிருந்தது இந்த வாதத்தை முறியடித்தது.

● நபி (ﷺ) அவர்களையும் அவர்கள் கொண்டு வந்த கொள்கையையும் பரிகாசித்தனர்.

● நபி (ﷺ) அவர்கள் பிரச்சாரம் செய்வதற்கு மக்களிடம் செல்லும் போது, இறைச் செய்தியை மக்கள் கேட்காமலும், சத்தியத்தை விளங்காமலும் தடுப்பதற்காக கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்தினர்.

● மக்கஹ்வுக்கு வெளியிலிருந்து எவராவது உம்றஹ், ஹஜ் போன்றவற்றிற்கு வந்தால் அவரிடம் சென்று நபியவர்களைப் பற்றிக் கூறி, எச்சரிக்கை செய்தார்கள்.

● நபி (ﷺ) அவர்களுக்கு உடல் ரீதியாகவும் நோவினை கொடுத்தனர். உக்பஹ் இப்னு அபீ முஈத் என்பவன் அவர்களுடைய ஆடையை கடுமையாக இழுத்து, அதனால் அவர்களுடைய கழுத்தை இறுக்கி, உயிரை மாய்க்கப் பார்த்தான். இதனைக் கண்ட அபூபக்ர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் அதனைத் தடுத்து நிறுத்தினார்கள். இன்னொரு முறை அவன், நபி (ﷺ) அவர்கள் ஸுஜூதில் இருக்கும் போது அவர்கள் மீது ஒட்டகத்தின் கருச்சவ்வைக் கொட்டினான். இதனைக் கேள்விப்பட்ட அவர்களது மகள் ஃபாதிமஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள் வந்து அதனை அகற்றினார்கள்.

● நபி (ﷺ) அவர்களைக் கொலை செய்ய முயற்சித்தார்கள். அபூதாலிபிடம் சென்று, நபி (ﷺ) அவர்களைக் கொன்றுவிடுவதற்காக தங்களிடம் ஒப்படைத்து விடுமாறும், அதற்குப் பகரமாக அவர்களுக்கு 'உமாறஹ் இப்னுல் வலீத்' என்ற வாலிபரைத் தருவதாகவும் பேசினார்கள். அதேபோன்று நபி (ﷺ) அவர்கள் ஹிஜ்றஹ் செய்ய முற்பட்ட நேரத்திலும் கொலை செய்ய முயற்சித்தனர்.

● இஸ்லாத்தை ஏற்றிருந்த பலவீனமான முஃமின்களை முடியுமான அளவு கடுமையாக வேதனை செய்தனர். உதாரணம்: பிலால் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களது மேனியில் கற்களை வைத்து கொடுமை செய்தனர். அம்மார் இப்னு யாஸிர் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்களின் குடும்பத்தைக் கடுமையான முறையில் வேதனை செய்தனர்.

💎 **ஹபஷஹ்வுக்கு (அபீசீனியாவுக்கு) ஹிஜ்றஹ் செல்லுதல்:**
இஸ்லாத்தை ஏற்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டிருந்தது; இதைக்கண்ட நிராகரிப்பாளர்களின் அச்சமும் அதிகரித்தது; அவர்கள் நபி (ﷺ) அவர்களையும் முஸ்லிம்களையும் கடுமையாகத் துன்புறுத்த ஆரம்பித்தனர். நபி (ﷺ) அவர்கள் முஸ்லிம்களுக்கு ஹபஷஹ்வுக்கு நாடுதுறந்து ஹிஜ்றஹ் செல்வதற்கு அனுமதி வழங்கினார்கள். "அப்பூமியில் ஒரு அரசன் இருக்கிறார், அவரிடம் மனிதர்கள் அநீதியிழைக்கப்பட மாட்டார்கள்" என்று நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

***1 முதலாவது ஹபஷஹ் ஹிஜ்றஹ்:***
இதில் (12)பன்னிரண்டு ஆண்களும் (4)நான்கு பெண்களும் ஹிஜ்றஹ் மேற்கொண்டனர். அவர்களில் முதலாவதாக வெளியேறியவர் உஸ்மான் இப்னு அப்பான் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களே. அவர்களுடன் அவர்களின் மனைவியும் நபி (ﷺ) அவர்களின் மகளுமான றுகைய்யஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களும் சென்றார்கள். ஹபஷஹ் சென்றவர்கள் அங்கு மிகுந்த கவனிப்புடன் தங்கியிருந்தனர். பின்னர் குறைஷிகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுவிட்டதாக ஒரு பொய்யான வதந்தி அவர்களுக்குக் கிடைத்தது. அதை நம்பி அவர்கள் மக்கஹ்விற்குத் திரும்பினர். இடையில் வைத்து முன்னர் இருந்ததை விட நிலைமை மிக மோசமானது என்பதைக் கேள்விப்பட்டனர். இதனால் சிலர் மீண்டும் ஹபஷஹ்வுக்கே திரும்பிச் சென்றனர். இன்னும் சிலர் மக்கஹ்வுக்குள் நுழைந்தனர்; குறைஷிகளின் கடுமையான துன்புறுத்தல்களைச் சந்தித்தனர். இவ்வாறு நுழைந்தவர்களுள் அப்துள்ளாஹ் இப்னு மஸ்ஊத் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களும் அடங்குவார்கள்.

***2 இரண்டாவது ஹபஷஹ் ஹிஜ்றஹ்:***
இரண்டாவது தடவையாக (83)எண்பத்து மூன்று ஆண்களும் (18)பதினெட்டுப் பெண்களும் ஹபஷஹ் நோக்கிப் புறப்பட்டனர். அங்கு நஜாஷி மன்னனின் அரவணைப்பில் நல்ல நிலையில் தங்கியிருந்தனர். இதைக் கேள்விப்பட்ட குறைஷிகள் மன்னனிடத்தில் சென்று, இவர்களுக்கு எதிராக சதி செய்வதற்காக அம்ர் இப்னுல் ஆஸ் மற்றும் அப்துள்ளாஹ் இப்னு அபீ றபீஅஹ் ஆகிய இருவரையும் ஒரு கூட்டத்துடன் அனுப்பி வைத்தனர். அள்ளாஹ் அவர்களின் சதி முயற்சியை அவர்களுக்கு எதிராகத் திருப்பிவிட்டான்.

**💎 ஹம்ஸஹ் மற்றும் உமர் (றளியள்ளாஹு அன்ஹுமா) ஆகிய இருவரும் இஸ்லாத்தை ஏற்றல்:**

நபித்துவத்திற்குப் பிறகு ஆறாவது ஆண்டு அப்துல் முத்தலிபின் மகன் ஹம்ஸஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் இஸ்லாத்தில் நுழைந்தார்கள். குறைஷிக் கோத்திரத்தில் மிகப் பலமிக்கவர் எனப் பெயர்பெற்றிருந்தார்கள். இதனால் நபி (ﷺ) அவர்கள் பலமடைந்தார்கள். பின்னர் நபி (ﷺ) அவர்களின் துஆவின் பறகத்தின் விளைவாக உமர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களும் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார்கள். அவ்விருவரின் வருகையால் மு.்மின்கள் பலமடைந்தனர்; குறைஷிகளிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொண்டனர்.

**💎 அபூதாலிப் பள்ளத்தாக்கில் முற்றுகை:**

நபி (ﷺ) அவர்களுக்கு குறைஷிகள் கொடுத்து வந்த நோவினைகள் அதிகரிக்க ஆரம்பித்தன. அவர்களையும் அவர்களது அஹ்லுல் பைத் எனும் நெருங்கிய உறவினர்களையும் அபூதாலிப் பள்ளத்தாக்கில் முற்றுகையிட்டனர். அப்துள்ளாஹ் இப்னு அப்பாஸ் (றளியள்ளாஹு அன்ஹுமா) அங்குதான் பிறந்தார்கள். நிராகரிப்பாளர்கள் நபி (ﷺ) அவர்களுக்குக் கடுமையான துன்புறுத்தல்களைக் கொடுத்தனர். நபி (ﷺ) அவர்கள் முற்றுகையில் இருந்து வெளியே வரும் போது அவர்களுக்கு நாற்பத்து ஒன்பது வயது.

**💎 அபூதாலிப் மற்றும் கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) ஆகிய இருவரினதும் மரணம்:**

முற்றுகைக்குச் சில மாதங்களுக்குப் பின் (நபி (ﷺ) அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்துவந்த) அவர்களின் தந்தையின் சகோதரர் அபூதாலிப், தனது எண்பத்து ஏழாவது வயதில் மரணமடைந்தார். அதைத் தொடர்ந்து குறுகிய காலத்தில் தமக்கு உறுதுணையாக இருந்த கதீஜஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களும் மரணித்துவிடவே நபி (ﷺ) அவர்களின் மீது கா.்பிர்களின் கொடுமைகள் அதிகரித்தன.

**💎 தாயி.்ப் நகரை நோக்கிய பயணம்:**

நபி (ﷺ) அவர்களும் ஸைத் இப்னு ஹாரிஸஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களும் அள்ளாஹ்வின் பக்கம் அழைப்பதற்காக தாயி.்ப் நகரை நோக்கிச் சென்றனர். அங்கு பல நாட்களாகத் தங்கியிருந்து பிரச்சாரம் செய்தும், எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அம்மக்கள் அவர்களைத் துன்புறுத்தி, அங்கிருந்து வெளியேற்றினர். அவர்களின் கெண்டைக்கால்களில் இரத்தம் வடியும் அளவிற்குக் கற்களால் அடித்தனர். அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் மீண்டும் மக்கஹ் நோக்கி திரும்பினார்கள்; முத்அம் இப்னு அதீ என்பவரின் பாதுகாப்பில் மக்கஹ்விற்குள் நுழைந்தார்கள்.

💎 **அdhத்தாஸ் (عليه السلام) என்பவர் இஸ்லாத்தை ஏற்றல்:**
நபி (ﷺ) அவர்கள் தாயிஃப் நகரில் இருந்து திரும்பி வருகின்ற பொழுது கிறிஸ்தவரான அத்தாஸ் என்பவரைச் சந்தித்தார்கள். அவர் நபி (ﷺ) அவர்களை ஈமான் கொண்டார்.

💎 **ஜின்கள் இஸ்லாத்தை ஏற்றல்:**
மேலும், தாயிஃப் நகரத்தில் இருந்து திரும்பும் வழியில் 'நக்லஹ்' என்ற இடத்தில் வைத்து ஏழு ஜின்கள் நபி (ﷺ) அவர்கள் ஓதும் குர்ஆனை செவிமடுத்து, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இவர்கள் 'நஸீபியின்' என்ற பிரதேசத்தில் இருந்து வந்திருந்தனர்.

💎 **இஸ்றாஃ, மிஃறாஜ் பயணம்:**
பின்னர் நபி (ﷺ) அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவை நோக்கி தமது உயிருடனும் உடலுடனும் இரவில் 'இஸ்றாஃ பயணம்' அழைத்துச் செல்லப்பட்டார்கள். பின்னர் அங்கிருந்து 'மிஃறாஜ்' பயணம் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அதாவது, மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்து தமது உயிருடனும் உடலுடனும் ஏழு வானத்துக்கு மேலால் அள்ளாஹ்வின் பக்கம் உயர்த்திச் செல்லப்பட்டார்கள். அள்ளாஹ் அவர்களுடன் உரையாடினான். ஐவேளைத் தொழுகைகளையும் அவர்கள் மீது கடமையாக்கினான்.

💎 **மக்கஹ்வுக்கு வரக்கூடிய கோத்திரங்களுக்கு இஸ்லாத்தை முன்வைத்தல்:**
நபி (ﷺ) அவர்கள் மக்கஹ்வில் வாழ்ந்துகொண்டு வெளியில் இருந்து வரும் கோத்திரங்களை அள்ளாஹ்வின் பக்கம் அழைத்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு ஹஜ்ஜுடைய காலத்திலும் தமது ரிஸாலத்தை (தூதுத்துவத்தை) எத்தி வைப்பதற்காக தம்மை அரவணைத்துக் கொள்ளுமாறு அங்கு வருகை தரும் கோத்திரங்களிடம் கோரிக்கை வைப்பார்கள். அதற்கு பதிலாக அவர்களுக்கு சுவர்க்கம் இருப்பதாகவும் கூறி வந்தார்கள். ஆனாலும் எந்த ஒரு கோத்திரமும் அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அள்ளாஹு தஆலா அந்த சிறப்பை அன்சாரிகளைச் சிறப்பிப்பதற்காக பாதுகாத்து வைத்திருந்தான். மதீனஹ்வாசிகளான அன்சாரிகளைச் சேர்ந்த ஏழு நபர்களை நபி (ﷺ) அவர்கள் சந்தித்தார்கள். அப்போது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அள்ளாஹ்வுக்கும் ரஸூலுக்கும் கட்டுப்பட்டார்கள். மதீனஹ்வுக்குத் திரும்பிச் சென்று தங்களுடைய கூட்டத்தையும் இஸ்லாத்தின் பக்கம் அழைத்தார்கள். அவர்களுக்கு மத்தியில் இஸ்லாம் பரவ ஆரம்பித்தது. அன்சாரிகளின் ஒவ்வொரு வீட்டிலும் நபிகள் நாயகம் (ﷺ) அவர்களைப் பற்றிப் பேசப்படலாயிற்று.

💎 **அன்சாரிகளும் அகபஹ் உடன்படிக்கையும்:**

**1️⃣ முதலாவது அகபஹ் பைஅத்:**

பின்னர் அடுத்த வருடம் அன்சாரிகளைச் சேர்ந்த (12)பன்னிரண்டு ஆண்கள் மக்கஹ்வுக்கு வந்தனர். அவர்களில் ஏற்கனவே வந்த ஆறு நபர்களில் ஐவர் இடம்பெற்றிருந்தனர். அவர்கள் நபியவர்களிடம் 'அகபஹ்' என்ற இடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டனர். ஸூறதுல் மும்தஹினஹ்வில் இடம்பெறும் பெண்களின் பைஅத் - உடன்படிக்கை சம்பந்தமாக வரும் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதாக அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம் அவர்கள் உடன்படிக்கை செய்தனர். பின்னர் மதீனஹ்வுக்குத் திரும்பிச் சென்றனர்.

**2️⃣ இரண்டாவது அகபஹ் பைஅத்:**

இதை அடுத்து வந்த வருடத்தின் ஹஜ் காலத்தில் (73)எழுபத்தி மூன்று ஆண்களும் (2)இரண்டு பெண்களும் மக்கஹ்விற்கு வருகை தந்தனர். அப்போது தான் இரண்டாவது அகபஹ் உடன்படிக்கை நடைபெற்றது. தங்கள் உயிர்களையும் பிள்ளைகளையும் பெண்களையும் எவ்வாறு பாதுகாப்பார்களோ அவ்வாறே அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களையும் பாதுகாப்போம் என்று அவர்களிடத்தில் உடன்படிக்கை செய்து கொண்டனர். இவர்களில் இருந்து பன்னிரண்டு நபர்களைத் தலைவர்களாக அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தேர்வு செய்தார்கள்.

இதை அடுத்து, நபி (ﷺ) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் மதீனஹ்வாசிகளை நோக்கி ஹிஜ்றஹ் பயணம் மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

## ◆ பிரிவு - 4: மதீனஹ் காலம்

### 💎 ஹிஜ்றஹ் செல்வதற்கான அனுமதி:

அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தமது தோழர்களுக்கு மதீனஹ் நோக்கி ஹிஜ்றஹ் செல்வதற்கு அனுமதி வழங்கினார்கள். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக, மறைமுகமாக வெளியேறினர். முஹாஜிர்களில் முதலாவது மதீனஹ்வுக்குச் சென்ற நபித்தோழர் அபூ ஸலமஹ் இப்னு அப்தில் அஸத் அல்-மக்ᶻஸூமி (றளியள்ளாஹு அன்ஹு) என்று கூறப்படுகிறது. முஸ்அப் இப்னு உமைர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் முதலாவதாக சென்றதாகவும் கூறப்படுகிறது. எவ்வாறாயினும், இவர்கள் ஆரம்பமாக சென்றவர்களில் அடங்குவர். முஹாஜிர்கள் அன்சாரிகளின் வாழ்விடங்களை நோக்கிச் சென்றடைந்தனர். அவர்களும் இவர்களை அரவணைத்து உதவிசெய்தனர். இதனால், மதீனஹ்வில் இஸ்லாம் பரவிற்று.

பின்னர் அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுக்கு ஹிஜ்றஹ் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. றபீஉனில் அவ்வல் மாதம் திங்கட்கிழமை மக்கஹ்விலிருந்து புறப்பட்டார்கள். அப்போது அவர்களுக்கு 53 வயது. அவர்களுடன் அபூபக்ர் ஸித்தீக் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களும் அவரது அடிமையாக இருந்த ஆமிர் இப்னு ஃபுஹைறஹ்வும் சென்றார்கள். இவர்களுக்கு வழிகாட்டியாக அப்துள்ளாஹ் இப்னு உறைகித் என்பவர் இருந்தார். நபி (ﷺ) அவர்களும் அபூபக்ர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களும் 'ᵗஸவ்ர்' குகைக்குள் சென்று மூன்று நாட்கள் தங்கியிருந்து, பின்னர் கரையோரம் வழியாக புறப்பட்டுச் சென்றனர்.

### 💎 நபி (ﷺ) அவர்கள் மதீனஹ்வுக்குள் பிரவேசித்தல்:

நபி (ﷺ) அவர்களும் அவர்களுடன் சென்றவர்களும் மதினஹ்வை சென்றடைந்தனர். அதுவும் ஒரு திங்கட்கிழமை றபீஉனில் அவ்வல் மாதத்தின் பன்னிரண்டு இரவுகள் கழிந்திருந்தன. பனூ அம்ர் இப்னு அவ்ஃப் கோத்திரத்தார் வசிக்கும் மதீனஹ்வின் உயர் நிலப் பகுதியான குபாஃ (قباء) பகுதியில் ஆரம்பமாகச் சென்று இறங்கினார்கள். அங்கு பதினான்கு நாட்கள் தங்கி இருந்தார்கள்.

### 💎 இஸ்லாத்தில் கட்டப்பட்ட முதல் மஸ்ஜித்:

நபி (ﷺ) அவர்கள் அங்கு தங்கியிருந்த நாட்களில் குபாஃ மஸ்ஜிதை உருவாக்கினார்கள்.
இப்னு உமர் (றளியள்ளாஹு அன்ஹுமா) கூறினார்கள்: 'நபி (ﷺ) அவர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் (அல்லது ஒவ்வொரு வாரமும்) நடந்தும் வாகனத்திலும் குபாஃ மஸ்ஜிதுக்கு வருவார்கள்'.[96]
மற்றுமொரு ஹதீஸில்: 'குபாஃ மஸ்ஜிதில் நிறைவேற்றப்படும் ஒரு தொழுகை உம்றஹ்வுக்குச் சமமானது' என்று இடம் பெற்றுள்ளது.[97]

### 💎 நபி (ﷺ) அவர்களின் மஸ்ஜிதை நிர்மாணித்தல்:

பின்னர் நபி (ﷺ) அவர்கள் தம்முடைய ஒட்டகத்தில் குபாஃவில் இருந்து புறப்பட்டு, மதீனஹ்வின் உள் பகுதிக்கு வந்தார்கள். மனிதர்கள் ஒட்டகத்தின் மூக்கணாங்கயிற்றைப் பிடித்துக்கொண்டு தங்களிடம் வந்து தங்குமாறு நபி (ﷺ) அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். எனினும் நபி (ﷺ) அவர்கள், "அதனை அதனது வழியில் விட்டு விடுங்கள் அதற்கு (அள்ளாஹ்வால்) கட்டளையிடப்பட்டிருக்கிறது" என்று கூறினார்கள். இன்று மஸ்ஜிதுன் நபவி இருக்கும் இடத்தில் அது சென்று அமர்ந்தது. அது பனுன் நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த ஸஹ்ல், ஸுஹைல் ஆகிய இரு சிறுவர்களுக்குச் சொந்தமான பேரீத்தம் பழங்களை உலர்த்தும் இடமாக இருந்தது. நபி (ﷺ) அவர்கள் அதற்குப் பக்கத்தில் இருந்த அபூ அய்யூப் அல் அன்ஸாரி (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் வீட்டில் தங்கினார்கள். பின்னர் பேரீத்தம்பழம் உலர்த்தும் அந்த இடத்தில் சுட்ட மண்கற்களையும் பேரீத்த மட்டைகளையும் பயன்படுத்தி, தம்முடைய கையினால் தமது தோழர்களுடன் சேர்ந்து தமது மஸ்ஜிதைக் கட்டினார்கள்.
பின்னர் அதற்குப் பக்கத்தில் தமக்கும் தமது மனைவியர்களுக்குமுரிய மனைகளைக் கட்டினார்கள். அவற்றில் மஸ்ஜிதுக்கு மிக சமீபமாக அமைந்த மனை ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களின் வீடாகும். பின்னர் ஏழு மாதங்களுக்குப் பிறகு அபூ அய்யூப் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் வீட்டிலிருந்து புதிதாகக் கட்டப்பட்ட குடிசைகளில் தங்குவதற்கு இடம்பெயர்ந்தார்கள்.

### 💎 சகோதரத்துவத்தை உருவாக்குதல்:

நபி (ﷺ) அவர்கள் மஸ்ஜிதைக் கட்டி முடித்ததற்குப் பிறகு, மக்கஹ்விலிருந்து வந்திருந்த 90 முஹாஜிர்களும் மதினஹ்வாசிகளான அன்ஸாரிகளும் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில்

---

[96] [📚 புகாரி 1193]
[97] [இப்னு மாஜஹ்வில் இடம்பெறும் இந்த ஹதீஸின் தரத்தில் கருத்து வேறுபாடுள்ளது]

அவர்களுக்கிடையில் சகோதரத்துவத்தை உருவாக்கினார்கள். அதாவது முஹாஜிர்களில் ஒவ்வொருவருக்கும் அன்சாரிகளில் இருந்து ஒருவரைச் சகோதரராக ஆக்கினார்கள். இதன் மூலம் அவர்கள் ஒருவருக்கொருவர் வாரிசுரிமைக்காரர்களாகவும் மாறினார்கள். இந்நிலை பத்ர் யுத்தம் நடைபெறும் வரையில் தொடர்ந்தது.

### 💎 யூதர்கள் (யஹூதிகள்):

மதீனஹ் வந்த நபி (ﷺ) அவர்களைப் பார்த்த யூதர்கள் இவர் உண்மையில் அள்ளாஹ்வின் தூதர் என்பதை அறிந்து கொண்டனர். இவரைப் பற்றித்தான் தம்மிடமிருக்கும் வேதமான தவ்றாத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டனர். எனினும் அவர்களில் மிகச் சிலரே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். அவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் அவர்களது மார்க்க அறிஞரான அப்துள்ளாஹ் இப்னு ஸலாம் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களும் ஒருவர். நபி (ﷺ) அவர்கள் மதீனஹ்வில் இருந்த யூத கோத்திரங்களான பனூகைனுகாஃ, பனூன்னளீர், பனூகுறைளஹ் ஆகிய கோத்திரங்களுடன் சகவாழ்வுக்கான சமாதான உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார்கள்.

### 💎 கிப்லஹ் மாற்றம்:

மிஃறாஜுடைய நிகழ்வின்போது பர்ளான தொழுகை கடமையாக்கப்பட்ட பிறகு நபி (ﷺ) அவர்கள் பைத்துல் மக்திஸை நோக்கி தொழுது வந்தார்கள். எனினும் தொழுகையில் முன்னோக்கும் கிப்லஹ் திசை கஃபஹ்வாக மாற்றப்படவேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த எதிர்பார்ப்பில் அடிக்கடி தம்முடைய முகத்தை வானத்தை நோக்கித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; ஹிஜ்ரி இரண்டாவது ஆண்டில் அள்ளாஹ் பின்வரும் ஆயத்தை அவர்கள்மீது இறக்கியருளினான்:
{(நபியே!) நாம் உம் முகம் அடிக்கடி வானத்தை நோக்கி (பல திசைகளிலும்) திரும்புவதைக் காண்கிறோம்; எனவே நீர் விரும்பும் கிப்லஹ்வின் பக்கம் உம்மைத் திடமாகத் திருப்பி விடுகிறோம்...}
(அல்குர்ஆன் 2:144)
இதையடுத்து நபி (ﷺ) அவர்கள் தம்முடைய கிப்லஹ் திசையை கஃபஹ்வை நோக்கி மாற்றிக் கொண்டார்கள்.

### 💎 யுத்தம் செய்வதற்கான அனுமதி:

நபி (ﷺ) அவர்களுக்கு அன்சாரிகள் பாதுகாப்பு அளித்தார்கள். அதனால் அவர்கள் மதினஹ்வில் ஸ்திரமான நிலையை அடைந்தார்கள். அதற்குப் பிறகு பின்வரும் அள்ளாஹ்வின் வசனம் இறங்கியது: {(மு.ஃமின்களான) போர் தொடுக்கப்பட்டோருக்கு - அவர்கள் அநியாயம் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதனால் (அவ்வாறு போர் தொடுத்த கா.ஃபிர்களை எதிர்த்துப் போரிடுவதற்கு) அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது; நிச்சயமாக அவர்களுக்கு உதவி செய்ய அள்ளாஹ் பேராற்றலுடையவன்}. (அல்குர்ஆன் 22:39)
[மதீனஹ்வில் முஸ்லிம்களுக்கு ஒரு ஆட்சி அமைந்ததற்குப் பிறகு முஸ்லிம்களை எதிர்த்துப் போராடிய] இணைவைப்பாளர்களுடன் போர் செய்வதற்கு அள்ளாஹ் இவ்வசனத்தின் மூலம் அனுமதி வழங்கினான்.

அபுவா, புவாத், உஷைறஹ் போன்ற யுத்தங்கள் நபி (ﷺ) அவர்கள் ஆரம்பமாகப் புறப்பட்டுச் சென்ற சிறிய யுத்தங்களாகும். மேலும் இவை தவிர நபி (ﷺ) அவர்கள் கலந்து கொள்ளாத ஒரு சில சிறு படைகளும் அனுப்பப்பட்டன.

### 💎 பத்ர் யுத்தம்:

ஹிஜ்ரி இரண்டாவது ஆண்டு றமளான் மாதத்தில் நபி (ﷺ) அவர்கள் 310 இற்கு மேற்பட்ட மு.ஃமினான ஆண்களுடன் புறப்பட்டுச் சென்றார்கள். இதன் நோக்கம் சிரியா தேசத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்த இஸ்லாத்தின் எதிரிகளான குறைஷிகளுக்குச் சொந்தமான ஒரு வியாபாரக் கூட்டத்தை வழிமறிப்பதாகும்.[98]
[இதனைத் துப்பறிந்துகொண்ட] குறைஷிகளின் வியாபாரக் கூட்டத்தின் தளபதியாக இருந்த அபூ ஸு.ஃப்யான் [தமக்கு முஸ்லிம்களால் ஆபத்து வந்திருக்கிறது; இதனால் தம்மைக் காப்பாற்ற வருமாறு மக்கஹ்வுக்கு தகவல் அனுப்பிவிட்டு, மேலதிக நடவடிக்கையாக] தன் பாதையை மாற்றி வேறு வழியில் சென்று [தனது வியாபாரக் கூட்டத்துடன்] மக்கஹ்வை அடைந்துவிட்டார். [அதற்கு முன்பு அபூஸுப்யான் அனுப்பிய தகவல் மக்கஹ்வுக்குக் கிடைத்தது; தமது வியாபாரப் பொருட்களைக் காப்பற்றவும் முஸ்லிம்களைத் தாக்குவதற்காகவும் அபூஜஹ்ல் தலைமையில் ஒரு பெரும் படை மக்கஹ்விலிருந்து

[98] [நபி (ﷺ) அவர்களையும் முஸ்லிம்களையும் மக்கஹ்வில் வாழவிடாமல் கொடுமைப்படுத்தி, அவர்கள் ஹிஜ்றஹ் செய்த பிறகு அவர்களின் சொத்துக்களையும் சூறையாடி, தொடர்ந்தும் மக்கஹ்விலுள்ள பலவீனமான முஸ்லிம்களைத் துன்புறுத்தி, மதீனஹ்விலுள்ள முஸ்லிம்களை அழிப்பதற்கும் திட்டம் தீட்டிக் கொண்டிருந்த அநியாயக்கார குறைஷிக் கா.ஃபிர்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும் என்பதற்காகவும் அதன்மூலம் மதீனஹ் அரசின் பலத்தை உணர்த்துவதோடு, தொடர்ந்தும் முஸ்லிம்களுக்கு அநீதியிழைப்பது மதீனஹ் ஊடக வியாபாரத்திற்குச் செல்வதற்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதை அவர்கள் உணர வேண்டும் என்பதற்காகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.]

புறப்பட்டிருந்தது.] தமது வியாபாரக் கூட்டம் தப்பித்துச் சென்று விட்டாலும் முஃமின்களை ஒரு கை பார்த்துவிட வேண்டும் என்று [மக்கஹ்வில் இருந்து புறப்பட்ட] குறைஷிகளை ஷைத்தான் தூண்டிவிட்டான். இதன் விளைவாக பத்ர் என்ற இடத்தில் இரு படைகளும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டன. அங்கேதான் 'பத்ர் அல்-குப்றா' என்ற இந்த மாபெரும் பத்ர் போர் நடைபெற்றது. 'யவ்முல் ஃபுர்கான்' என்று அந்த நாளுக்கு ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. அதன் அர்த்தம் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக்காட்டிய நாள்.
இரு படைகளும் சந்தித்துக்கொண்ட போது அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் தமது றப்பிடத்தில் பிரார்த்தித்து மன்றாடினார்கள்.

அள்ளாஹ் முஃமின்களுக்குத் துணையாகப் போரிடுவதற்கு வானவர்களை அனுப்பி உதவிசெய்தான்; [பெரும் படையான] காஃபிர்களுக்கு எதிராக முஃமின்களுக்கு வெற்றியைக் கொடுத்தான்; தனது வார்த்தையை உயர்த்தினான். பத்ர் போரில் 70 முஷ்ரிக்கள் கொல்லப்பட்டு, 14 முஃமின்கள் ஷஹீதானார்கள்.

💎 **பனூகைனுகாஃ எனும் யூதக் கோத்திரத்துடனான போர்:**

இக்கோத்திரத்தினர் 700 பேர்களாக இருந்தனர். இவர்கள் நபி (ﷺ) அவர்களுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு மோசடி செய்து வந்தனர். ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டு நபி (ﷺ) அவர்கள் இவர்களை 15 இரவுகள் முற்றுகையிட்டனர். பின்னர் தாக்குப்பிடிக்க முடியாமல் நபி (ﷺ) அவர்கள் வழங்கும் தீர்ப்புக்குத் தாங்கள் உடன்படுவதாக அவர்கள் கூறினர். அவர்கள் செய்த துரோகத்திற்குப் பெரும் தண்டனைகள் வழங்கப்படாமல் மதீனஹ்விலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

💎 **உஹுத் யுத்தம்:**

அதே வருடத்தில் ஷவ்வால் மாதம் உஹுத் யுத்தம் நடைபெற்றது. பத்ர் களத்தில் கொல்லப்பட்டவர்களுக்காகப் பழி தீர்ப்பதற்காக குறைஷிகள் சுமாராக 3000 பேர் கொண்ட படையோடு மதீனஹ் நோக்கி வந்தனர். நபி (ﷺ) அவர்கள் 700 பேர்களைக் கொண்ட படையோடு மதீனஹ்வினுள் இருந்து புறப்பட்டு உஹுத் மலையடிவாரத்திற்குச் சென்றார்கள். இதற்குள் முனாஃபிக்கள் நபி (ﷺ) அவர்களை இடைவழியில் கைவிட்டுவிட்டுத் திரும்பிவிட்டனர்.
இந்த யுத்தத்தில் ஆரம்பத்தில் முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைத்தது. பின்னர் [அவர்களில் சிலர் செய்த ஒரு தவறின் காரணமாக] அள்ளாஹ் அவர்களைச் சோதித்தான்; முஷ்ரிக்களின் கையை ஓங்கச் செய்தான். எதிரிகள் அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களையே நெருங்கி வந்தனர்; அவர்களைக் காயப்படுத்தினர்; அவர்களின் முன்பல்லை உடைத்தனர். அன்றைய தினம் வானவர்களும் நபி (ﷺ) அவர்களுடன் சேர்ந்து

போராடினார்கள். இதில் 70 ஸஹாபாக்கள் ஷஹீதானார்கள். அவர்களுள் ஹம்ஸஹ் இப்னு அப்தில் முத்தலிப், முஸ்அப் இப்னு உமைர், அனஸ் இப்னு நள்ர், ஹன்ளலஹ் அல்-கஸீல் (றளியள்ளாஹு அன்ஹும்) ஆகிய ஸஹாபிகளும் அடங்குவர். அன்றைய தினம் தல்ஹஹ் இப்னு உபைதில்லஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் அழகான முறையில் சோதிக்கப்பட்டார்கள். அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள்: “தல்ஹஹ் (சுவர்க்கத்தைக்) கட்டாயமாக்கிக் கொண்டுவிட்டார்”. அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களும், முஸ்லிம்களும் [உஹுத்] மலையை நோக்கிப் பின்வாங்கிச் சென்றார்கள். அள்ளாஹ் அவர்களை இணைவைப்பாளர்களின் கைகளைவிட்டும் பாதுகாத்தான். உஹுத் யுத்த நாள் ஒரு சோதனை நாளாகவும், சுத்தப்படுத்தும் ஒரு நாளாகவும் இருந்தது. அள்ளாஹ் மு஀மின்களைச் சோதித்தான்; முனா஀பிக்குகளை வெளிக்காட்டினான்; தான் நாடியவர்களுக்கு ஷஹீத் ஆகும் பாக்கியத்தைக் கொடுத்து கண்ணியப்படுத்தினான். யுத்தம் முடிவடைந்து (குறைஷிகள் திரும்பிச் சென்றனர்.) பின்னர் 'குறைஷிகள் மீண்டும் திரண்டு வந்து முஸ்லிம்களைப் பூண்டோடு அழிப்பதற்குப் புறப்பட்டுவிட்டார்கள்' என்று நபி (ﷺ) அவர்கள் கேள்விப்பட்டார்கள். உடனே நபி (ﷺ) அவர்கள் காயங்களுடன் மு஀மின்களையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். முஸ்லிம்கள் 'ஹம்றாஉல் அஸத்' என்ற இடத்தைச் சென்றடைந்ததும், அதுபற்றிக் கேள்விப்பட்ட குறைஷிகள் தைரியம் இழந்து மக்கஹ்வை நோக்கியே திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

### 💎 பி஀ரு மஊனஹ் சம்பவம்:

ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டில் பி஀ரு மஊனஹ் எனும் இடத்தில் 70 நபித்தோழர்கள் (அழைத்துச் செல்லப்பட்டு துரோகமாகக்) கொலை செய்யப்பட்டனர். இவர்கள் குர்ரா஀கள் என்று அழைக்கப்பட்டனர்; அதாவது அல்குர்ஆனை நன்கு மனனம் செய்து, விளங்கிச் செயல்படுத்தக் கூடியவர்களாக இருந்தனர்.

### 💎 பனுன்னளீர் யுத்தம்:

பனுன்னளீர் கோத்திரத்துடனான யுத்தமும் இந்த ஆண்டில்தான் நடைபெற்றது. இவர்கள் ஒப்பந்த மீறலில் ஈடுபட்டுத் துரோகம் செய்ததனால் நபி (ﷺ) அவர்கள் இவர்களை முற்றுகையிட்டார்கள். அள்ளாஹ் இவர்களின் உள்ளத்தில் அச்சத்தை ஏற்படுத்தினான். இறுதியாக இவர்களையும் நபி (ﷺ) அவர்கள் மதீனஹ்விலிருந்து வெளியேற்றினார்கள். இவர்கள் விடயத்தில்தான் அல்-ஹஷ்ர் எனும் அல்குர்ஆனிய அத்தியாயம் இறங்கியது.

💎 **முறைஸீஃ யுத்தம்:**

ஹிஜ்ரி 5ஆம் ஆண்டில் [மதீனஹ்மீது திடீர் தாக்குதல் நடத்துவதற்குத் திட்டம் தீட்டி; படைதயாரித்துக் கொண்டிருந்த] பனுல் முஸ்தலக் எனும் கோத்திரத்தாருடன் போரிடுவதற்காக நபி (ﷺ) அவர்கள் புறப்பட்டுச் சென்று, வெற்றியோடு திரும்பி வந்தார்கள். இந்த யுத்தத்திற்குச் சென்று வரும் வழியில்தான் தயம்முமுடைய சட்டம் இறக்கப்பட்டது. அதேபோன்று ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்கள்மீது இட்டுக்கட்டிய சம்பவமும் நடந்தது. முஃமின்களின் தாயான அவர்களைப் பற்றி முனாஃபிக்கள் அவதூறு கூறினார்கள். அது அவர்களுக்கும் அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களுக்கும் மிகவுமே கஷ்டத்தைக் கொடுத்தது. ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களோ பரிசுத்தமான பத்தினிப்பெண்ணாக இருந்தார்கள். இறுதியாக அள்ளாஹ் அன்-நூர் அத்தியாயத்தில் அவர்கள் பரிசுத்தமானவர்கள் என்பதை இறக்கியருளினான். அவதூறு பரப்பியவர்களுக்குக் கசையடி வழங்கப்பட்டது.

💎 **கந்தக் / அஹ்ஸாப் யுத்தம்:** الخَنْدق / الأحزاب

ஹிஜ்ரி 5ஆம் ஆண்டு ஷவ்வால் மாதம் கந்தக் போர் (அகழ் யுத்தம்) நடைபெற்றது. அஹ்ஸாப் போர் (கூட்டுப் படைகளின் யுத்தம்) என்றும் இதனை அழைப்பர். யூதர்களும் குறைஷிகளும் அவர்களுடன் கூட்டணி சேர்ந்தவர்களும் ஒன்றுதிரண்டு நபி (ﷺ) அவர்களையும் அவர்களது தோழர்களையும் தாக்குவதற்கு வந்தனர். குறைஷ், பனூஸுலைம், பனூஅஸத், ஃபஸாறஹ், அஷ்ஜஃ இன்னும் பல கோத்திரங்களைச் சேர்ந்த 10000 பேர் கொண்ட படைகள் மதினஹ்வை நோக்கித் திரண்டனர்.
பாரசீகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட ஸல்மான் அல்-பாரிஸி (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் நபி (ﷺ) அவர்களுக்கு பன்னாட்டுப் படைகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு அகழி தோண்டுமாறு ஆலோசனை வழங்கினார்கள். அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் 3000 பேருடன் புறப்பட்டு 'ஸிலஹ்' (سلع) என்னும் மலையை அரணாகப் பயன்படுத்தி அதற்கு முன்னால் அகழியை உருவாக்கினார்கள்.[99] நபி (ﷺ) அவர்கள் ஏற்கனவே ஒத்துழைப்பு ஒப்பந்தம் செய்திருந்த பனூ குறைளஹ் எனும் யூதக் கோத்திரத்திடம் மதீனஹ்விற்குள் எதிரிகளுக்கு இடமளிக்காமல் பாதுகாப்புத் தருமாறு வேண்டினார்கள். எனினும் அவர்கள் [இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் இரகசியமாக] உடன்படிக்கையை முறித்து பன்னாட்டுப் படைகளுக்கு ஒத்துழைப்பை வழங்கினார்கள். இதனால் நபி (ﷺ) அவர்களின் அனுமதியுடன் இவர்களுக்கும் பன்னாட்டுப் படைகளுக்கும் இடையில் நுஐம் இப்னு

[99] [மதீனஹ்விற்குள் படையாக பிரவேசிப்பதற்கு முடியுமாக இருந்த ஒரே பகுதியின் குறுக்கே இந்த அகழி தோண்டப்பட்டது.]

மஸ்ஊத் (றளியள்ளாஹு அன்ஹு) யுக்தியாக பிரிவினையை ஏற்படுத்தினார்கள்.[100] பின்னர் அள்ளாஹ் பன்னாட்டுப் படைகள் மீது ஒரு காற்றை அனுப்பினான்; அது அவர்களது கூடாரங்களை அடித்து நொறுக்கியது, அவர்களின் பாத்திரங்களை புரட்டிப் போட்டது, அவர்களையும் அசைத்துப் போட்டது; அவர்களுடைய உள்ளங்களில் அச்சத்தை ஏற்படுத்தியது. இதனால் அவர்கள் மனதளவில் பலவீனமடைந்தனர். [இதில் அள்ளாஹ் அனுப்பிய கண்களுக்குப் புலப்படாத மலக்குகளின் படையும் செயற்பட்டது.] கூட்டுப்படைகள் முஸ்லிம்களுக்குப் பெரிய விளைவுகளை ஏற்படுத்த முடியாமல் திரும்பிச் சென்றார்கள். இந்தப் போர் விடயத்தில் தான் "ஸூறதுல் அஹ்ஸாப்" இறக்கியருளப்பட்டது. இந்த யுத்தம் முடிவடைந்த பின்னர் நபி (ﷺ) அவர்கள் பனூகுறைளஹ் கோத்திரத்தினரை நோக்கிப் படையெடுத்தார்கள். இதற்குக் காரணம் இந்த யூதக் கோத்திரம் மதீனஹ்வுக்குள் இருந்துகொண்டு [அரசாங்கத்திற்குத் துரோகமிழைத்து, முஸ்லிம்களைப் பூண்டோடு அழிப்பதற்காக எதிரிகளுக்கு உதவிசெய்து] ஒப்பந்த மோசடி செய்ததாகும். [25 நாட்கள் முற்றுகையின் பிறகு, ஜாஹிலிய்யஹ் காலத்தில் அவர்களுக்கு நெருக்கமாக இருந்த] ஸஃத் இப்னு முஆத் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் தாங்கள் விடயத்தில் வழங்கும் தீர்பை ஏற்றுக்கொள்வதாக வேண்டிக் கொண்டார்கள். நபி (ﷺ) அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.[101]

### 💎 ஹுதைபியஹ் உடன்படிக்கை: حُدَيْبِيَة

ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டு நபி (ﷺ) அவர்கள் தமது 1400 தோழர்களுடன் உம்றஹ் செய்வதற்குப் புறப்பட்டார்கள். ஹுதைபியஹ் என்ற இடத்தை அவர்கள் வந்தடைந்ததும் மக்கஹ்விற்குள் அவர்கள் நுழையக் கூடாது என்று குறைஷிகள் தடுத்தனர். அந்த இடத்தில் அவர்களுக்கும் குறைஷிகளுக்கும் இடையில் 10 வருடங்களுக்கான ஒரு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது. இறுதியாக அது முஃமின்களுக்கு ஒரு வெற்றியாக அமைந்தது. அதனையே அள்ளாஹ் பின்வருமாறு கூறுகிறான்: {நிச்சயமாக நாம் உமக்கு ஒரு தெளிவான வெற்றியை தந்தோம்}. (அல்குர்ஆன் 48:1)
அந்த ஒப்பந்தத்தில் குறைஷிகள் முஃமின்களுக்கு அடுத்த வருடம் மக்கஹ்வுக்குள் நுழைவதற்கு அனுமதி அளித்திருந்தனர். அதனடிப்படையில் ஹிஜ்ரி 7 ஆம் ஆண்டு துல்கஃதஹ் மாதம் உம்றதுல் களாஃ (எனும் 6 ஆம் ஆண்டு செய்ய முடியாமல் போன உம்றஹ்வுக்குப் பதில் உம்றஹ்) நிறைவேற்றப்பட்டது.

---

[100] [என்று வரலாறு கூறுகிறது. அவர்கள் அப்போதுதான் எதிரிகளின் தரப்பிலிருந்து எவருக்கும் தெரியாமல் இஸ்லாத்தை ஏற்றிருந்தார்கள்].

[101] [ஒப்பந்த மோசடி செய்து, ராஜ துரோகம் இழைத்து, மிக இக்கட்டான கட்டத்தில் முஸ்லிம்களைப் பூண்டோடு அழிப்பதற்கு உதவி செய்த ஆண்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்று ஸஃத் இப்னு முஆத் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள்.]

## 💎 கைபர் யுத்தம்: خيبر

நபி (ﷺ) அவர்கள் ஹுதைபியஹ்வில் இருந்து திரும்பிவந்து 20 நாட்களுக்குப் பிறகு மதீனஹ்வுக்கு வடக்கே இருக்கும் 'கைபர்' எனும் பிரதேசத்தை நோக்கிப் படையெடுத்தார்கள். அங்கிருந்த யூதக் கோட்டைகளை சுமாராக 20 இரவுகள் முற்றுகையிட்டார்கள்.[102] ஆரம்பத்தில் இம் முற்றுகைக்கு யூதர்கள் அடிபணியாததால் முஸ்லிம்கள் மிகவும் களைப்படைந்தார்கள். இறுதியாக யூதர்களும் தமக்கு அழிவு நிச்சயம் என்பதை உறுதியாக அறிந்து கொண்டனர். அதனால் தாங்கள் அணிந்திருக்கும் ஆடைகளுடன் மாத்திரம் கைபரில் இருந்து வெளியேற விரும்புவதாகக் கூறி நபி (ﷺ) அவர்களிடம் உடன்படிக்கைக்கு வருமாறு வேண்டிக்கொண்டனர். அதனடிப்படையில் நபி (ﷺ) அவர்களும் அவர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்கள். [யூதர்கள் தங்களின் நிலங்களை நபி (ﷺ) அவர்களுக்கு ஒப்படைத்த] பின்னர் நபி (ﷺ) அவர்கள் அவர்களையே அங்கிருந்த விவசாயப் பூமிகளில் விவசாயம் செய்வதற்குப் பணியமர்த்தினார்கள். அதற்காக அவர்களுக்கு விளைச்சலில் சரிபாதி தருவதாக உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

## 💎 ஜஃபர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் வருகை:

நபி (ﷺ) அவர்கள் கைபரில் இருக்கும் போதுதான் அபூஹுறைஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் மதீனஹ்வுக்கு வந்து சேர்ந்தார்கள். அதே காலகட்டத்தில்தான் ஹபஷஹ்வுக்கு ஹிஜ்றஹ் மேற்கொண்டிருந்த நபி (ﷺ) அவர்களின் தந்தையின் சகோதரரான அபூதாலிபின் மகன் ஜஃபர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களும் அவர்களுடன் இருந்தவர்களும் அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களிடம் கைபரில் யுத்தம் முடிவடைந்த பிறகு வந்து சேர்ந்தார்கள். அவர்களோடு சேர்ந்து யமன் நாட்டைச் சேர்ந்த அபூ மூஸல் அஷ்அரி (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களும் அவர்களுடைய தோழர்களும் வந்தார்கள்.

## 💎 முஃதஹ் போர்: مُؤْتَة

இப்போர் ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு நடைபெற்றது. இதற்கான காரணம் நபி (ﷺ) அவர்கள் ரோம மன்னனுக்கு இஸ்லாம் பற்றி தூதனுப்பிய தூதுவரை ஷுறஹ்ᵇபீல் இப்னு அம்ர் அல்-ᵍகஸ்ஸானி என்ற ரோம

---

[102] [இதற்கான காரணம் கைபர் கோட்டைகள் முஸ்லிம்களை அழிப்பதற்குச் சதித்திட்டம் தீட்டும் மத்திய நிலையமாக செயற்பட்டன. அகழி யுத்தத்தில் பன்னாட்டுக் கூட்டுப் படைகளை ஒன்று திரட்டியதிலும் மதினஹ்வில் இருந்த 'பனூகுறைளஹ்' யூதக் கோத்திரத்தை ஒப்பந்தமீறலில் ஈடுபடத் தூண்டியதிலும் இவர்கள் பின்னிருந்து செயற்பட்டார்கள்.]

சாம்ராஜியத்திற்குக் கீழ் செயற்பட்ட அரேபிய ஆட்சியாளன் கொலை செய்ததாகும். நபி (ﷺ) அவர்கள் தமது 3000 தோழர்களை இப்போருக்காக அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு தளபதியாக தமக்கு மிக விருப்பத்திற்குரிய ஸைத் இப்னு ஹாரிஸஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை நியமித்தார்கள். “ஸைத் கொல்லப்பட்டால் ஜஃபர் இப்னு அபீதாலிப் அவர்கள் மக்களுக்கு தளபதியாக இருப்பார். ஜஃபர் கொல்லப்பட்டால் அப்துள்ளாஹ் இப்னு றவாஹஹ் அவர்கள் தளபதியாக இருப்பார்” என்று நபி (ﷺ) அவர்கள் கூறி அனுப்பினார்கள். ரோம சக்கரவர்த்தியான ஹிறக்ல் (ஹெர்குலிஸ்) மன்னனும் அவனது படையும் அவனுக்குச் சார்பாக இருந்த அரேபியக் கூட்டங்களும் சேர்ந்து இரண்டு இலட்சம் (200000) பேர்கள் கொண்ட மாபெரும் படையொன்று (ஜோர்டானில்) முஃதஹ் என்ற இடத்தில் முஸ்லிம்களோடு போரிட்டது. நபி (ﷺ) அவர்கள் நியமித்த தளபதிகள் ஷஹீதாக்கப்பட்டார்கள். பிறகு ؏காலித் இப்னுல் வலீத் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் முஸ்லிம்களின் வேண்டுகோளிற்கிணங்க இஸ்லாமியப் படையின் கொடியை ஏந்தி, சிறந்த முறையில் படையை வழிநடத்தினார்கள். முஸ்லிம்களை அவர்கள் எதிர்பார்த்திருக்காத பெரும் படையிடமிருந்து உபாயமான முறையில் பின் நகர்த்திக் காப்பாற்றினார்கள்.

### 💎 மாபெரும் மக்கஹ் வெற்றி:

ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு குறைஷிகளின் கூட்டணியிலிருந்த பனூபக்ர் கோத்திரம், நபி (ﷺ) அவர்களின் கூட்டணியில் இருந்த குஸாஅஹ் கோத்திரத்தின் மீது வரம்பு மீறியது. குறைஷிகள் தங்கள் கூட்டாளிகளுக்கு இரகசியமாக ஒத்துழைப்பு வழங்கினர். இந்த ஒப்பந்த மீறல் பற்றிய செய்தி நபி (ﷺ) அவர்களுக்குக் கிடைத்த போது மக்கஹ்வை வெற்றி கொள்ள வேண்டுமென உறுதி பூண்டார்கள். நபி (ﷺ) அவர்களிடம் இது குறித்து சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்காக அபூ ஸுஃப்யான் மதீனஹ் நோக்கி வந்தார். ஆனால் நபி (ﷺ) அவர்கள் அவரிடம் இருந்து எதனையும் செவிமடுக்க விரும்பவில்லை. அபூபக்ர், உமர், அலி (றளியள்ளாஹு அன்ஹும்) ஆகியவர்களைச் சந்தித்து நபி (ﷺ) அவர்களிடம் பேசுமாறு கேட்டுக் கொண்டபோது, அவர்களும் இந்தக் கோரிக்கையை மறுத்துவிட்டனர். பிறகு நபி (ﷺ) அவர்கள் தாம் குறைஷிகளை நோக்கிப் புறப்படவிருப்பதை அவர்கள் அறிந்துவிடாமல் அள்ளாஹ் மறைத்துவிட வேண்டும் என்று பிரார்த்தனை செய்தார்கள். அள்ளாஹ்வும் அப்பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான். நபி (ﷺ) அவர்கள் பத்தாயிரம் பேருடன் சென்று மக்கஹ்விற்குள் நுழைந்தார்கள். மக்கஹ் வெற்றிக்கு முன் அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களின் சிறிய தந்தை அப்பாஸ் இப்னு அப்தில் முத்தலிப்

இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார். நபி (ﷺ) அவர்கள் மக்கஹ் வெற்றியின் போது சொன்ன விடயங்களில் ஒன்று தான்: “யார் அபூஸுஃப்யானின் வீட்டில் நுழைகிறாரோ அவர் பாதுகாப்புப் பெற்றுவிட்டார். யார் மஸ்ஜிதில் நுழைகிறாரோ அவரும் பாதுகாப்புப் பெற்றுவிட்டார். யார் தன்னுடைய வீட்டிற்குள் நுழைந்து கதவை மூடிக் கொள்கிறாரோ அவரும் பாதுகாப்புப் பெற்றுவிட்டார்”. தங்களைத் தாக்க வந்தவர்களுடன் மாத்திரமே முஸ்லிம் படை போரிட்டது. அதேபோன்று நபி (ﷺ) அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மிகக்கடுமையாக தொந்தரவுகளைக் கொடுத்துவந்த சிலரின் மீது மாத்திரம் யுத்தம் தொடுத்து; அவர்களைக் கொலை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. நபி (ﷺ) அவர்கள் மக்கஹ்விற்குள் நுழைந்த போது இஹ்றாம் இன்றி கஃᵇபஹ்வைத் தவாஃப் செய்தார்கள், கஃᵇபஹ்வின் திறவுகோலை உஸ்மான் இப்னு தல்ஹஹ் அவர்களிடம் வேண்டி, அதற்குள்ளும் அதனைச் சூழவுமுள்ள சிலைகளை உடைத்தார்கள்[103], பின்னர் அவரிடமே திறப்பை ஒப்படைத்தார்கள்.

மக்கஹ் வெற்றிற்குப் பிறகு அதிகமான மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். பல்வேறு கோத்திரங்களும் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு நபி (ﷺ) அவர்களைச் சந்திக்க வந்தனர்.

### 💎 சிலைகளை உடைத்தல்:

அள்ளாஹ் தனது நபி (ﷺ) அவர்களுக்கு மக்கஹ் வெற்றியைக் கொடுத்த பிறகு [மக்கள் இஸ்லாத்தை ஏற்ற போது], அவர்கள் தமது தோழர்களை மக்கஹ்வுக்குச் சூழவுள்ள சிலைகளை உடைப்பதற்காக அனுப்பி வைத்தார்கள். அம்ர் இப்னுல் ஆஸ் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்களை 'ஸுவாஃ' எனும் சிலையை உடைப்பதற்காகவும், ஸஃத் இப்னு ஸைத் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை 'மனாத்' எனும் சிலையை உடைப்பதற்காகவும், காலித் இப்னுல் வலீத் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை 'உஸ்ஸா' எனும் சிலையை உடைப்பதற்காகவும், துபைல் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை "துல்கஃப்ᶠபைன்' எனும் சிலையை உடைப்பதற்காகவும், அலி (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை 'தை' கோத்திரத்தின் சிலையை உடைப்பதற்காகவும் அனுப்பி வைத்தார்கள்.

103 சிலை வணக்கத்திற்கு எதிராகப் போராடிய நபி இப்றாஹீம் மற்றும் அவர்களது மகன் நபி இஸ்மாஈல் ஆகியோரால் அள்ளாஹ்வின் கட்டளைப்படி அள்ளாஹ்வை மாத்திரம் வணங்குவதற்குக் கட்டப்பட்ட கஃபஹ் ஆலயத்தில் காலப்போக்கில் 360 சிலைகளை வைத்து அவர்களின் பரம்பரையில் வந்த குறைஷிகள் அள்ளாஹ்வுடன் சேர்த்து வணங்கினார்கள். அப்போது அந்த நபிமார்களுக்கும் உருவங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவையும் நீக்கப்பட்டன. (பார்க்க: புகாரி 4287, 4288)

💎 **ஹுனைன் யுத்தம்:**

மக்கஹ் வெற்றிகொள்ளப்பட்டதை 'ஹவாᶻஸின்' கோத்திரம் கேள்விப்பட்டபோது அவர்கள் அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்களை நோக்கிப் படையெடுப்பதற்கு முடிவு செய்தார்கள். தங்களுடன் தங்கள் சொத்துக்களையும், பெண்களையும், பிள்ளைகளையும், அழைத்துக் கொண்டு யுத்தத்திற்காக வந்தார்கள். நபி (ﷺ) அவர்கள் 12000 பேருடன் அவர்களை நோக்கிப் புறப்பட்டார்கள். முஸ்லிம்கள் தாங்கள் அதிகமாக இருப்பதால் இலகுவாக வெற்றி பெற்றுவிடலாம் என்ற சந்தோஷத்தோடு ஹுனைன் பள்ளத்தாக்கைச் சென்றடைந்தார்கள். 'ஹவாᶻஸின்' கோத்திரமோ ஒரே பாய்ச்சலாக முஸ்லிம்கள் மீது கடுமையாகப் பாய்ந்தார்கள். இதனால் கடுமையான பதட்டம் ஏற்பட்டு நபி (ﷺ) அவர்களை விட்டும் மனிதர்கள் அங்குமிங்கும் பிரிந்து சென்றுவிட்டார்கள். நபி (ﷺ) அவர்களோடு அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த சிலரும், முஹாஜிர்களில் சிலரும் மாத்திரமே எஞ்சியிருந்தார்கள். பின்னர் அள்ளாஹு தஆலா ஈமான் கொண்டவர்களுக்கு உறுதியைக் கொடுத்தான். அவர்கள் நபி (ﷺ) அவர்களை நோக்கித் திரும்பி வந்தார்கள். அவர்களுடன் சேர்ந்து போரிட்டார்கள். அள்ளாஹ் அவர்களுக்கு அவர்களின் எதிரிகளுக்கு எதிராக வெற்றியைக் கொடுத்தான். 'ஹவாᶻஸின்' கோத்திரம் தாஇᶠபை நோக்கி விரண்டோடியது. பின்னர் 'ஹவாஸின்' கோத்திரத்தைச் சேர்ந்த 14 ஆண்கள் இஸ்லாத்தை ஏற்று நபி (ﷺ) அவர்களிடத்தில் வந்தார்கள். தமது கைதிகளை விடுவிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். நபி (ﷺ) அவர்களும் மக்களும் தங்களிடமிருந்த கைதிகளை விடுவித்தார்கள்.

💎 **தாஇᶠப் யுத்தம்:**

நபி (ﷺ) அவர்கள் 'ஹவாᶻஸின்' கோத்திரத்துடனான யுத்தத்தை முடித்தபிறகு தாஇᶠபை நோக்கிப் படையெடுத்தார்கள். அங்கிருக்கும் கோட்டையை 18 நாட்கள் முற்றுகையிட்டார்கள். [கோட்டைக்குள் இருந்தவர்கள் ஒரு வருடத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களுடன் இருந்ததால்] யுத்தம் செய்து முடிக்காமல் நபி (ﷺ) அவர்கள் திரும்பி வந்தார்கள்.

💎 **தᵇபூக் யுத்தம்:**

இது ஹிஜ்ரி (9)ஒன்பதாம் ஆண்டு நடைபெற்றது. இதற்கு 'ᶜஉஸ்றஹ்' (கஷ்ட) யுத்தம் என்றும் ஒரு பெயருண்டு. மிக வெப்பமான காலநிலையில், பழங்கள் கனியும் பருவத்தில், நிழல் தேடப்படும் வெப்ப காலத்தில் இந்த யுத்தம் நடந்ததால், அதற்காகப் புறப்பட்டுச் செல்வது மனிதர்களுக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. நபி (ﷺ)

அவர்கள் இந்த யுத்தத்திற்குப் புறப்பட விரும்பியபோது அதற்காகச் செலவு செய்யுமாறு மக்களுக்கு ஆர்வமூட்டினார்கள். ʿஉஸ்மான் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் 300 ஒட்டகைகளை, அவற்றில் சவாரி செய்வதற்குத் தேவையான பொருட்களுடன் கொடையாக வழங்கினார்கள். அத்துடன் ஆயிரம் தங்க நாணயங்களையும் கொடுத்தார்கள். இதனால் நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்: "இன்றைய தினத்திற்குப் பிறகு ʿஉஸ்மான் எதை செய்தாலும் அது அவரைப் பாதிக்காது". மேலும் ஏனைய நபித் தோழர்களும் தங்களால் முடியுமான உதவிகளை வழங்கினார்கள்.

முனாஃபிக்கள் இந்த யுத்தத்திற்குச் செல்லாமல் நபி (ﷺ) அவர்களை விட்டும் பின்வாங்கினார்கள். நியாயமான காரணமின்றி மூன்று சிறந்த நபித்தோழர்கள் இப்போரில் கலந்து கொள்ளவில்லை. அவர்கள் கஃப் இப்னு மாலிக், ஹிலால் இப்னு உமைய்யஹ், மறாறஹ் இப்னுர் றபீஃ (றளியள்ளாஹு அன்ஹும்) ஆகியோராவர். யுத்தம் முடிந்து நபி (ﷺ) அவர்கள் மதீனஹ்வுக்குத் திரும்பி வந்தபோது, இவர்கள் நபி (ﷺ) அவர்களிடம் வந்து மன்னிப்புக் கேட்டனர். அவர்கள் விடயத்தில்தான் ஸூறதுத் தவ்பஹ்வின், "(மன்னிப்பு வழங்கப்படாமல்) பிற்படுத்தப்பட்ட மூவர் மீதும் (அள்ளாஹ் மன்னித்து விட்டான்)." என்று ஆரம்பிக்கும் ஆயத் இறங்கியது. அள்ளாஹ் இவர்களது உள்ளத்திலிருந்து வெளிப்பட்ட தவ்பஹ்வின் உண்மைத் தன்மையை அறிந்து, இவர்களை [ஒரு சோதனைக்கு உட்படுத்திய பிறகு] மன்னித்தான். அள்ளாஹ் இந்த ஸூறஹ்வில் முனாஃபிக்களை இகழ்ந்துரைத்துள்ளான். இந்த ஸூறஹ்வில் அவன் அவர்களின் குறைகளையும் இரகசியங்களையும் அம்பலப்படுத்தியதன் காரணமாக, இதற்கு 'அல்-ஃபாளீஹஹ்' (அம்பலப்படுத்தக் கூடியது) என்ற ஒரு பெயரும் உண்டு.

இந்த யுத்தத்திற்குச் சென்றபோது, [தென் ஜோர்டானுக்குப் பக்கத்திலுள்ள] 'ஐலஹ்' எனும் பகுதியின் சிற்றரசனுடன் ஜிஸ்யஹ் வரி பெற்றுக்கொள்வதற்கு நபி (ﷺ) அவர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அவ்வாறே, 'ஜர்பா' (جربا), 'அத்ருஹ்' (أذرح) ஆகிய பகுதிகளின் மக்களுடனும் 'உகைதிர்' (أكيدر) என்றழைக்கப்படும் 'தவ்மதுல்ஜந்தல்' பகுதியின் சிற்றரசனுடனும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. நபி (ﷺ) தபூக்கில் பத்துக்கும் மேற்பட்ட இரவுகள் தங்கியிருந்து விட்டு மதீனஹ் திரும்பினார்கள். எந்த ஒரு கைகலப்பும் தபூக்கில் நடைபெறவில்லை.

நபி (ﷺ) அவர்கள் மதீனஹ்வுக்குத் திரும்பி வந்த போது, முனாஃபிக்களால் கட்டப்பட்ட மஸ்ஜிதுள்-ளிராரை உடைக்குமாறு கட்டளையிட்டு, உடைத்தார்கள்.
பின்வரும் ஆயத் இந்த மஸ்ஜிதைப் பற்றித்தான் கூறுகிறது:

{இன்னும் (இஸ்லாம் மார்க்கத்திற்குத்) தீங்கிழைக்கவும், கு.்.ப்ருக்கு (நிராகரிப்புக்கு) உதவி செய்யவும், மு.்.மின்களிடையே பிளவு உண்டுபண்ணவும், அள்ளாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் விரோதமாய்ப் போர்புரிந்தவர்களுக்கு புகலிடமாகவும் ஆக்க ஒரு மஸ்ஜிதை முன்னர் நிறுவியவர்கள் ...} (அல்குர்ஆன் 9:107)
தபூக் யுத்தம் தான் நபி (ﷺ) அவர்கள் களத்தில் இறங்கிப் போராடச் சென்ற யுத்தங்களில் இறுதி யுத்தமாக இருந்தது.

### 💎 பிரதிநிதிக்குழுக்கள்:

தபூக் யுத்தத்திற்குப் பிறகு [தாஇ'பைச் சேர்ந்த] 'ஸகீ.்.ப்' கோத்திரம் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு நபி (ﷺ) அவர்களிடம் வந்தது. ஹிஜ்ரி (9)ஒன்பதாவது ஆண்டு பிரதிநிதிக்குழுக்களின் ஆண்டு என்று அழைக்கப்படுகின்றது. இந்த ஆண்டில் பல்வேறு கோத்திரங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு நபி (ﷺ) அவர்களைச் சந்திப்பதற்காக மதினஹ்வுக்குப் புறப்படலானார்கள். பின்வரும் கோத்திரங்களின் பிரதிநிதிக்குழுக்களும் வந்தன. 'பனூ தமீம்' கோத்திரப் பிரதிநிதிக்குழு; அவர்களின் தலைவர் ʿஉதாரித் இப்னு ஹாஜிbப் அத்-தமீமி என்பவராவார், 'தை' கோத்திரப் பிரதிநிதிக்குழு; அவர்களின் தலைவர் ஸைத் அல்-கைல் என்பவராவார், அப்துல் கைஸ் கோத்திரப் பிரதிநிதிக்குழு; அவர்களின் தலைவர் ஜாறூத் அல்-அப்தி என்பவராவார், 'பனூ ஹனீபஹ்' கோத்திரப் பிரதிநிதிக்குழு; அவர்களில் ஒருவனாக பின்னாளில் நபித்துவத்தை வாதிட்ட முஸைலமஹ் எனும் பொய்யனும் இடம் பெற்றிருந்தான்.

### 💎 அபூபக்ர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் தலைமை வகித்த ஹஜ்:

நபி (ﷺ) அவர்கள் ஹிஜ்ரி ஒன்பதாவது ஆண்டு அபூபக்ர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை ஹஜ் கடமைக்குத் தலைவராக அனுப்பிவைத்தார்கள். அவர்களும் மக்களுக்குத் தலைமையேற்று ஹஜ் கடமையை வழிநடத்தினார்கள். மேலும், நபி (ﷺ) அவர்கள் அலீ (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை அனுப்பி வைத்து, மனிதர்களுக்கு 'தவ்பஹ்' ஸூறஹ்வின் ஆரம்பப் பகுதியை ஓதிக்காண்பிக்குமாறும், இந்த வருடத்திற்குப் பிறகு எந்த ஒரு இணைவைப்பாளரும் ஹஜ் செய்யக் கூடாது என்றும், ஜாஹிலிய்யஹ் மக்கள் செய்ததைப் போன்று எவரும் நிர்வாணமாக க.்.பஹ்வை வலம் வரக்கூடாது என்றும் அறிவிப்புச் செய்தார்கள்.

## 💎 ஹஜ்ஜத்துல் வதாஃ:

அள்ளாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் 'ஹஜ்ஜதுல் வதாஃ' என்றழைக்கப்படும் பிரியாவிடை ஹஜ்ஜை - இறுதி ஹஜ்ஜை பத்தாவது ஆண்டு நிறைவேற்றினார்கள். பல்வேறு கோத்திரங்களையும் பிரதேசங்களையும் சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் அவர்களுடன் புறப்பட்டுச் சென்றனர். நபி (ﷺ) அவர்கள் அம்மக்களுக்கு ஹஜ்ஜின் கிரியைகளைக் கற்றுக்கொடுத்தார்கள்; அறஃபஹ் தினத்தில் அவர்களுக்கு ஒரு பேருரையும் நிகழ்த்தினார்கள். பின்வரும் அள்ளாஹ்வின் வார்த்தையை ஓதிக் காண்பித்தார்கள்:
{இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கிவிட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கிவிட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாத்தை மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்.} (அல்குர்ஆன் 5:3)
அதாவது, மார்க்கம் பூரணம் ஆகிவிட்டது என்பதை அவர்களுக்குத் தெரிவித்தார்கள். குர்ஆனிலும் ஸுன்னஹ்விலும் வந்திருப்பவைகளைக் கடைபிடிக்குமாறு வஸிய்யத் செய்தார்கள். ஒவ்வொருவருடைய இரத்தத்தையும், செல்வத்தையும், மானத்தையும் மற்றவர்களுக்கு ஹறாமாக்கினார்கள். இந்த உபதேசம் ஒரு குத்பஹ் பிரசங்கமாகவும் நபி (ﷺ) அவர்களின் பிரியாவிடையாகவும் அமைந்தது.

## 💎 உஸாமஹ் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களின் படை:

ஹிஜ்ரி 11வது ஆண்டு ஸஃபர் மாதம் நபி (ﷺ) அவர்கள் ரோமர்களுடன் யுத்தம் புரிவதற்காக ஒரு படையைத் தயார்படுத்தினார்கள். அதற்குத் தளபதியாக உஸாமஹ் இப்னு ஸைத் (றளியள்ளாஹு அன்ஹுமா) அவர்களை நியமித்தார்கள். அவர்களும் புறப்பட்டு [மதீனஹ்வுக்குப் பக்கத்திலுள்ள] 'ஜுர்ஃப்' எனுமிடத்தில் முகாமிட்டிருந்தார்கள். பின்னர் நபி (ﷺ) அவர்கள் நோயுற்றுவிட்டார்கள் என்ற செய்தி அவர்களுக்குக் கிடைத்தது.

💎 **நபி (ﷺ) அவர்களின் யுத்தங்கள் பற்றிய ஓர் சுருக்கம்:**
'கஸ்வஹ்' - غزوة எனும் நபி (ﷺ) அவர்கள் நேரடியாக கலந்துகொண்ட யுத்தங்களும், 'ப.்.ஸ்'- بعث, 'ஸரிய்யஹ்' - سرية எனும் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட படைகளும் அவர்கள் மதினஹ்வுக்கு ஹிஜ்றஹ் சென்று வாழ்ந்த பத்து வருட காலங்களில் தான் நடந்தேறின. அவர்கள் நேரடியாகக் கலந்து கொள்ளாமல் அனுப்பி வைத்த படைகளின் எண்ணிக்கை அறுபதுக்கு நெருக்கமாக இருக்கிறது. அவர்கள் நேரடியாகக் கலந்துகொண்ட யுத்தங்கள் 27 ஆகும். அவற்றில் 9 இல் இரு தரப்புகளுக்கும் இடையில் சண்டை நடைபெற்றது. அவை: பத்ர், உஹுத், கந்தக், குறைளஹ், முஸ்தலிக், கைபர், பத்ஹு மக்கஹ், ஹுனைன், தாஇ'ப். அவற்றில் சிலதைப் பற்றி அல்குர்ஆனும் பேசியிருக்கிறது.

📌 ***அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள நபி (ﷺ) அவர்களின் யுத்தங்கள்:***

- **பத்ர் யுத்தம்:**
இதுபற்றி ஸூறத்துல் அன்பால் குறிப்பிட்டுள்ளது. அந்த ஸூறஹ்வுக்கு ஸூறத்துல் பத்ர் என்றொரு பெயருமுள்ளது.

- **உஹுத் யுத்தம்:**
இதுபற்றி ஆலு இம்றான் ஸூறஹ்வின் இறுதிப்பகுதி பேசுகின்றது. அதாவது {(நபியே! நீர்) போருக்காக (பொருத்தமான) இடங்களில் நம்பிக்கையாளர்களை நிறுத்திவைப்பதற்காக உம் குடும்பத்திலிருந்து காலையில் புறப்பட்ட சமயத்தை நினைவு கூறுவீராக! ...} (3:121) என்ற ஆயத்திலிருந்து ஸூறஹ் முடிவதற்கு சற்று முன்பு வரை இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

- **கந்தக், பனூ குறைளஹ், கைபர் ஆகிய யுத்தங்கள்:**
இவைபற்றி ஸூறத்துல் அஹ்ஸாபின் ஆரம்பப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **பனுன் நளீர் யுத்தம்:**
இதுபற்றி ஸூறதுல் ஹஷ்ரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **ஹுதைபியஹ், கைபர் ஆகிய யுத்தங்கள்:**
இவை பற்றி ஸூறதுல் ஃபத்ஹில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஃபத்ஹு மக்கஹ் பற்றியும் இந்த ஸூறஹ்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஸூறதுன் நஸ்ரிலும் பத்ஹ் என்ற தெளிவான சொல் மூலம் மக்கஹ் வெற்றி பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

- **தபூக் யுத்தம்:**
இது குறித்து ஸூறதுத் தௌபஹ்வில் சில ஆயத்கள் இறக்கப்பட்டுள்ளன.

### 📌 நபி (ﷺ) அவர்கள் காயப்படுத்தப்பட்ட ஒரே ஒரு யுத்தம்:

அதுதான் உஹுத் போர். பத்ர், உஹுத், ஹுனைன் ஆகிய யுத்தங்களில் அவர்களுடன் சேர்ந்து மலக்குகளும் போரிட்டனர். கந்தக் (அகழி) யுத்தத்தின்போதும் மலக்குகள் இறங்கி எதிரிகளை ஆட்டம் காணச் செய்தனர். அம்முஷ்ரிக்களின் முகங்களில் சிறு கற்களை வீசினர். இதனால் அவர்கள் விரண்டோடினர். ஒரே ஒரு யுத்தத்தில் 'மஞ்ஜனீக்' (Mangonel) எனும் தூரத்திலிருந்து எதிரிகளை நோக்கி எறியும் அன்றைய கால ஒரு வகை யுத்தக் கருவி பயன்படுத்தப்பட்டது. அதுதான் தாஇஃப் யுத்தம். ஒரே ஒரு யுத்தத்தில் அகழ் தோண்டிப் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுதான் கந்தக் அல்லது அஹ்ஸாப் யுத்தம். அகழ் தோண்டுவதற்கான ஆலோசனையை ஸல்மானுல் பாரிஸீ (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் வழங்கினார்கள்.

### 💎 நபி (ﷺ) அவர்களுக்கு ஏற்பட்ட நோயும் மரணமும்:

அள்ளாஹ் தனது நபி (ﷺ) அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கைக்கும், அள்ளாஹ்வைச் சந்தித்து சொர்க்கம் நுழைவதற்கும் இடையே விருப்பமானதை தேர்வு செய்வதற்குரிய சந்தர்ப்பத்தைக் கொடுத்தான். அவர்கள் அவனைச் சந்திப்பதையும் சொர்க்கத்தை அடைவதையும் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் கடுமையாக நோயுற்றார்கள். தமது மனைவியரிடத்தில், தாம் ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களின் வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்படுவதற்கு அனுமதி கேட்டார்கள். அவர்களும் அதற்கு அனுமதியளித்தார்கள். அவர்களால் மஸ்ஜிதில் தொழுவதற்கு முடியாமல் போனபோது, அபூபக்ர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை மக்களுக்குத் தொழுகை நடத்துமாறு கட்டளையிட்டார்கள். இதில் தமக்குப் பிறகு கிலாபத்திற்குத் தகுதியானவர் அவரே என்கின்ற சமிஞ்சையும் இருந்தது.
ஹி 11ஆம் ஆண்டு றபீஉனில் அவ்வல் மாதம் 12ஆம் நாள் திங்கட்கிழமை மக்கள் ஸுப்ஹ் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் அவர்களை நோக்கி நபி (ﷺ) அவர்கள் வெளிக்கிளம்பினார்கள். தமது வீட்டுக்குள்ளிருந்து திரைச்சீலையை உயர்த்திப் பார்த்தார்கள். மக்கள் தம்மைப் பார்க்க வேண்டும் என்பதற்காக மஸ்ஜிதுக்கும் தமது வீட்டுக்கும் இடையே உள்ள கதவையும் திறந்துவிட்டார்கள். அவர்களை நோக்கி தொழுகையைப் பூரணப்படுத்துமாறு செய்கை செய்தார்கள். அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்கள். பின்னர் ளுஹா நேரத்தில் வஃபாத்தானார்கள். அவர்களது மரணம் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய சோதனையாக இருந்தது. முஸ்லிம்கள் அவர்களின்

மரணத்தால் மிகக்கடுமையாகக் கவலைப்பட்டார்கள். பின்னர் மனிதர்கள் அபூபக்ர் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்களை ஆட்சித் தலைவராக ஏற்றுக்கொண்டு பைஅத் செய்தார்கள். எவரும் அவர்களுக்கு பைஅத் செய்வதை விட்டும் பின்வாங்கவில்லை. அதற்கான காரணம், அவர்கள் இஸ்லாத்தில் ஆரம்பமாக இணைந்தவர்கள் என்பதையும் நபி (ﷺ) அவர்களுக்குப் பிறகு உம்மத்தின் ஏனைய அனைவரையும் விட அவர்களே சிறப்புக்குரியவர்கள் என்பதையும் மக்கள் அறிந்து வைத்திருந்தனர்.
பின்னர் அவர்கள் குளிப்பாட்டப்பட்டு, மூன்று வெண்ணிற ஆடைகளில் கஃபனிடப்பட்டார்கள். பின்னர் அவர்கள் மரணித்த இடத்திலேயே; அதாவது முஃமின்களின் தாயாரான ஆஇஷஹ் (றளியள்ளாஹு அன்ஹா) அவர்களின் அறையிலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். அதுவே நபிமார்கள் விடயத்தில் அள்ளாஹ்வின் வழிமுறையாகும். அதாவது நபிமார்கள் எங்கே மரணிக்கிறார்களோ அங்கேதான் அடக்கம் செய்யப்பட வேண்டும். நபி (ﷺ) அவர்களுக்காக மனிதர்களும் ஜின்களும் ஜனாஸஹ் தொழுகை தொழுதார்கள். அவர்கள் மீது என்னுடைய இரட்சகனின் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக! அவர்கள் அமானிதத்தை நிறைவேற்றினார்கள் என்றும், தமது உம்மத்துக்கு நலவையே நாடினார்கள் என்றும், அள்ளாஹ்வுக்காக உண்மையாகப் போராடினார்கள் என்றும் நாம் சாட்சிபகர்கின்றோம். அள்ளாஹ் ஒரு நபிக்கு தனது உம்மத் சார்பாக வழங்கும் கூலிகளில் சிறந்த கூலியை அவர்களது உம்மத் சார்பாக அவர்களுக்கு வழங்குவானாக! உலகத்தாரின் இரட்சகனாகிய அள்ளாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

💎 **முடிவாக**:

நபி (ﷺ) அவர்களின் கவிஞரான ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (றளியள்ளாஹு அன்ஹு) அவர்கள் நபி (ﷺ) அவர்கள் மரணித்த பிறகு பாடியதாகக் கூறப்பட்டுள்ள இரங்கல் கவிதையின் ஒரு பகுதியின் பொருள்:
என் இரட்சகனே! எங்களையும் எங்கள் நபியையும் பொறாமைக்கார்களின் கண்களைத் தடுக்கும் சுவர்க்கச் சோலையில் ஒன்றிணைத்திடுவாயாக!
பிர்தவ்ஸ் சோலையில் ஒன்றுசேர்த்து வைத்திடுவாய்!
கண்ணியமும் உயர்த்தியும் மகிமையும் பொருந்தியவனே! அதனை எங்களுக்கும் விதித்திடுவாய்!
வணக்கத்திற்குரிய நாயனும் அவன் அரியணையை சூழ்ந்திருக்கும் வானவரும் நல்லோரும் பறகஹ் பொருந்திய அஹ்மத் நபி மீது ஸலவாத் சொல்லிடட்டும்!

# மூன்றாவது பரீட்சை

| சரி, பிழையிடுக | ☑ | ☒ |
|---|---|---|
| நபி (ﷺ) அவர்கள் ஆடுகளை மேய்த்து இருக்கிறார்கள். அதுவும் அவர்கள் பொறுமை செய்வதற்கும், பலவீனமானவர்களுக்கு இரக்கம் காட்டி அரவணைப்பதற்கும் காரணமாக அமைந்தது. | | |
| அவர்களுக்கு 40 வயது பூர்த்தியான போது நபித்துவத்தின் ஒளி அவர்கள் மீது உதித்தது. அள்ளாஹ் அவர்களுக்குத் தனது தூதுத்துவத்தை ஒரு வெள்ளிக்கிழமை நாளில் கொடுத்து கண்ணியப்படுத்தினான். | | |
| குறைஷிகளின் துன்புறுத்தல் அதிகரித்துக் கொண்டே சென்றது. அபூதாலிப் பள்ளத்தாக்கில் நபி (ﷺ) அவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் மூன்று வருடங்கள் முற்றுகையிட்டனர். அம்முற்றுகையிலிருந்து அவர்கள் வெளியேறும் போது அவர்களது வயது 49. | | |

| *சரியான விடையைத் தெரிவு செய்க* |
|---|
| ◆ நபி (ﷺ) அவர்கள் .......... மக்கஹ்வில் பிறந்தார்கள்: |
| A- **ஹிஜ்றஹ்விற்கு முன் 53 வது ஆண்டில்** B- **யானை வருடத்தில்** C- **மேற்படி இரு விடைகளும் சரியானவை** |
| ◆ நபி (ﷺ) அவர்களின் வஹ்யின் ஆரம்பம்: |
| A- **தனிமை அவர்களுக்கு விருப்பமாக்கப்படுதல்** B- **உண்மையான கனவுகள்** C- **மேற்படி அனைத்து விடைகளும் சரியானவை** |
| ◆ வஹ்யின் படித்தரங்களின் எண்ணிக்கை: |
| A- **ஐந்து** B- **ஏழு** C- **மூன்று** |
| ◆ நபி (ﷺ) அவர்களின் பிரச்சாரத்தின் படித்தரங்கள்: |
| A- **இரண்டு** B- **மூன்று** C- **ஐந்து** |
| ◆ நபி (ﷺ) அவர்கள் தமது உடல், உயிர் சகிதம் அல்-அக்ஸா மஸ்ஜித் நோக்கி அழைத்துச் செல்லப்பட்டார்கள். பின்னர் அங்கிருந்து ஏழு வானங்களுக்கும் மேலாக .................... அழைத்துச் செல்லப்பட்டார்கள். அள்ளாஹ் அவர்களோடு உரையாடினான். அவர்கள் மீது ஐவேளைத் தொழுகையைக் கடமையாக்கினான். |
| A- **உடல் சகிதம்** B- **உயிர் சகிதம்** C- **உடல், உயிர் சகிதம்** |
| ◆ இஸ்லாத்தில் கட்டப்பட்ட முதல் மஸ்ஜித்: |
| A- **அல்-ஹறாம்** B- **அந்-நபவீ** C- **அல்-அக்ஸா** D- **குபா:** |
| ◆ கிப்லஹ் மாற்றப்பட்ட காலம்: |
| A- **ஹிஜ்றஹ்விற்கு முன்னர் மக்கஹ்வில்** B- **ஹிஜ்ரி 2** C- **ஹிஜ்ரி 3** |
| ◆ பத்ர் யுத்தம் றமளான் மாதத்தில் நடைபெற்றது: |
| A- **ஹிஜ்ரி 2** B- **ஹிஜ்ரி 3** |

| முஹம்மத் (ﷺ) அவர்களை முதலில் ஈமான் கொண்டு ஏற்றுக் கொண்டவர்: | அலீ இப்னு அபீதாலிப் | பிலால் இப்னு றபாஹ் | ஸைத் இப்னு ஹாரிஸஹ் | அபூபக்ர் அஸ்-ஸித்தீக் |
|---|---|---|---|---|
| ஆண்களில்: | | | | |
| சிறுவர்களில்: | | | | |
| உரிமையிடப்பட்ட அடிமைகளில்: | | | | |
| அடிமைகளில்: | | | | |

| நபி (ﷺ) அவர்களை வளர்த்துப் பராமரிக்கப் பொறுப்பேற்றல்: | அபூதாலிப் | அப்துல் முத்தலிப் | 8 | அப்துள்ளாஹ் இப்னு அப்தில் முத்தலிப் | 7 |
|---|---|---|---|---|---|
| அவர்களது தாயாருக்குப் பிறகு பொறுப்பேற்றவர் பாட்டன்: | | | | | |
| பின்னர் அவர் மரணித்தார். அப்போது நபி (ﷺ) அவர்களின் வயது: | | | | | |
| பின்னர் அவர்களைப் பொறுப்பேற்றது தந்தையின் உடன்பிறப்பு சகோதரன்: | | | | | |
| நபி (ﷺ) அவர்கள் தாயின் வயிற்றில் சிசுவாக இருக்கும் போது: | | | | | |
| அவர்களது தாயார் மரணிக்கும் பொழுது அவர்கள் .............. வயதைப் பூர்த்தி செய்திருக்கவில்லை. | | | | | |

| நபி (ﷺ) அவர்கள் செய்த யுத்தங்களும் அனுப்பிய படைகளும் | 10 | 60 | 27 | 9 | 1 |
|---|---|---|---|---|---|
| அவர்கள் அனுப்பி வைத்த அனைத்துப் படைகளும் ஹிஜ்றஹ்விற்குப் பிறகு ........ வருட காலத்தில் நடந்தேறின. | | | | | |
| கிட்டத்தட்ட அவர்கள் அனுப்பி வைத்த படைகளின் எண்ணிக்கை: ............... | | | | | |
| நபி (ﷺ) அவர்கள் கலந்து கொண்ட யுத்தங்களின் எண்ணிக்கை: ............... | | | | | |
| அவர்கள் .............. யுத்தத்தில் / யுத்தங்களில் நேருக்கு நேர் போராடினார்கள். | | | | | |
| அவர்கள் .............. யுத்தத்தில் / யுத்தங்களில் காயப்படுத்தப்பட்டார்கள். | | | | | |

## பொருளடக்கம்


- முன்னுரை
- நபி (ﷺ) அவர்களின் தன்மைகள்
- முதல் பரீட்சை
- நபி (ﷺ) அவர்களின் வழிமுறைகள்
- நபி (ﷺ) அவர்களின் தனித்துவங்கள்
- நபி (ﷺ) அவர்களின் உறவினர்களும் மனைவியரும்
- இரண்டாம் பரீட்சை
- நபித்துவத்திற்கு முற்பட்ட நபி (ﷺ) அவர்களின் வரலாறு
- வஹ்யின் ஆரம்பம்
- நபி (ﷺ) அவர்களின் வரலாற்றில் மக்கஹ் காலகட்டம்
- நபி (ﷺ) அவர்களின் வரலாற்றில் மதீனஹ் காலகட்டம்
- நபி (ﷺ) அவர்கள் செய்த யுத்தங்களின் சுருக்கம்
- நபி (ﷺ) அவர்களின் நோயும் மரணமும்
- மூன்றாவது பரீட்சை
- பொருளடக்கம்



📒 المختصر المفيد لسيرة النبي المصطفى (ﷺ) وشمائله – الشيخ د هيثم سرحان

📒 நபிகள் நாயகம் (ﷺ) அவர்களின் வரலாறு மற்றும் தன்மைகள் பற்றிய பயன்மிக்க ஒரு சுருக்கம்:

📒 மூல நூல் அறபியில்: கலாநிதி அஷ்ஷெய்க் ஹைஸம் ஸர்ஹான்

🖊 தமிழ் மொழிபெயர்ப்பு: ஹுஸைன் இப்னு றஃபீக் (மதனி)


இந்த நூலில் இத்தகைய [...] அடைப்புக்குறிகளுக்குள் காணப்படுகின்ற ஆதாரங்கள் மற்றும் அனைத்துக் குறிப்புகளும் மொழிபெயர்ப்பாளரால் இணைக்கப்பட்டவையாகும்.


sarhaan.com

MAHADSUNNAH.COM